# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:6 வள்ளுவர் ஆண்டு2028 ஐப்பசி15 சனிக்கிழமை (01-11-1997) SANJEAVY-Regenerative Tamil Weekly சிகரம்:22


# குடாநாட்டில் மிதிவெடிகளை அகற்ற ஐ. நா. நிபுணர்கள் விரைவில் வருவர்

யாழ்ப்பாணம், நவ. 1

குடாநாட்டில் பல பகுதிகளிலும் நிலத்துள் புதைந்து கிடந்து பெரும் உயிராபத்தை ஏற்படுத்தி வரும் மிதிவெடிகள் மற்றும் கண்ணிகளை அகற்றி அப்புறப்படுத்த ஐ நா. முன்வந்துள்ளது.

கண்ணிகளை அகற்றுவதில் அனுபவம் வாய்ந்த வெளிநாட்டு நிபுணர்கள் நவீன கருவிகள் சகிதம் விரைவில் இங்கு வருகை தரவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் (யு. என். டி. பி.) மேற்கொள்ளவுள்ளது.

ஆள்களுக்கு எதிரான கண்ணி வெடிகளை அகற்றுவதில் நன்கு தேர்ச்சி பெற்றவரும் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரியுமான ஜேர்காட் போர்ன்மன் கடந்த திங்களன்று யாழ். விஜயம் செய்தார்.

வெளிநாடுகள் பலவற்றில் கண்ணிகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஜேர்மன் நாட்டவரான இவர் குடாநாட்டில் மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் இருக்கக்கூடும் எனக் கருதப்படும் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

கண்ணிவெடிப் பாதிப்புகள் குறித்து அவர் பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப்பிரதிநிதிகளையும் அவர் சந்தித்தார்.

அச்சமயம் குடாநாட்டில் மிதிவெடிகளால் ஏற்பட்டுவரும் அனர்த்தங்களைச் சுட்டிக்காட்டி அவற்றை அகற்றுவதில் உதவுமாறு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப்பிரதிகள் அவரிடம் கோரிக்கைவிடுத்தனர்.

குடாநாட்டில் கடந்த காலப்பகுதியில் மிதிவெடிகள், கண்ணிகளால் ஏற்பட்ட பாதிப்புகளின் விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றையும் அவர்கள் கையளித்தனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிரான யுத்தம் பெப்ரவரிக்கு முன் முடியும்!

## விரைவில் ஆரம்பம் என்கிறார் அனுருத்த

கொழும்பு, நவம்பர் 1

தரைப்பாதை ஒன்றைத் திறப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையின் இறுதிக்கட்டமான மூன்றாவது கட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும். அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னர் இந்த இறுதி யுத்தம் முடிவடையும்.

கொழும்பில் உள்ள இலங்கை வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்துடனான சந்திப்பின்போது பதில் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப் புலிகள் வசம் எஞ்சியுள்ள பிரதேசங்களையும் கைப்பற்றி அதன் வழியாக யாழ்ப்பாணத்துக்கு தரை மார்க்கப் பாதையைத் திறக்கும் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகவிருக்கிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமம் பாதுகாப்பு படையினரிடம்

கொழும்பு, நவ. 1

கதிர்காமம் கோயிலும் அதன் சுற்றாடல் பகுதியும் பாதுகாப்புக் காரணங்களுக்காக இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட உள்ளன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடிக்கு கோப்பாயில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், நவ. 1

மிதிவெடியின் மேலிருந்த தேங்காயை குனிந்து எடுத்தபோது மிதிவெடி வெடித்ததில் தேங்காயை எடுத்தவர் அவ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதி யுத்தத்துக்கு தளபதியாக வீரசூரிய

கொம்முபு, நவ. 1

விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ள வெற்றி உறுதி மூன்றாம் கட்ட இராணுவ நடவடிக்கையின் கட்டளையிடும் அதிகாரியாக மேஜர் ஜெனரல் லால் வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

வெற்றி உறுதி முதலாம், இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு கட்டளையிடும் அதிகாரியாகச் செயற்பட்டவர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன.

இவரும் முதலாம், இரண்டாம் கட்ட நடவடிக்கைகளில் ..ட மற்றும் சில அதிகாரிகளும் மூன்றாவது இறுதிக்..ட நடவடிக்கையில் ஈடுபடமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

முதலாம், இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கைகள் ..மாதத்துக்கு மேல் இழுபட்டதே இந்த மாற்றங்களுக்குக் ..ரணம் என்று பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் ..ட்டி கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-21)

## படையினர் இருவருக்கும் பிணை

யாழ்ப்பாணம், நவ. 1

அராலி மாணவி கற்பழிப்பு வழக்கு நேற்று யாழ். நீதிமன்றத்தில், யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ. என். எஸ் இராமச்சந்திரன் முன்னிலையில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் சமாதானப் பேரணி

யாழ்ப்பாணம், நவ. 1

..யாழ். குடாநாட்டில் சமா..னமும், சுபீட்சமும், சுக..ழ்வும் வேண்டி நேற்று ..ரில் செபமாலை தியானப் ..ரணி நடைபெற்றது.

..கரில் உள்ள சகல கத்தோலிக்க தேவாலயங்களிலும் இருந்து பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமானபேரணி யாழ். மரியன்னை தேவாலயத்தை அடைந்தது.

சமாதானத்தை வலியுறுத்தும் பதாகைகளை அவர்கள் தாங்கிச் சென்றனர்.

பேரணிமுடிவில் மரியன்னை ஆலயத்தில் ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் விசேட வழிபாடு இடம்பெற்றது.

(இ-21)

## வரப்பிரகாஷ் மரணம் கூட்டுப் படுகொலை!

### மரண விசாரணையில் தீர்ப்பு

கொழும்பு, நவ. 1

பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல்பீட மாணவன் எஸ். வரப்பிரகாஷின் மரணம் கூட்டுப்படுகொலை என கொழும்பு நகர மரண விசாரணை அதிகாரி டபிள்யூ.எம். எம். பெரேரா நேற்று தீர்ப்பு வழங்கினார்.

''பல்கலைக்கழகம், பாடசாலைகள் உட்பட கல்வி நிறுவனங்களில் ராகிங்கை முற்றாகத் தடுப்பதற்கு கடுமையான சட்டத்தைப் பிரயோகிக்க வேண்டியதன் அவசியத்தை இம்மாணவனின் மரணம் வலியுறுத்துகின்றது.

''தசைகள் காயமடையும் வரை—

சிறுநீரகம் பாதிக்கப்பட்டு இரத்தம் வெளியேறும்வரை— ''ராகிங்'' நடைபெற்றுள்ளது.

இந்நிலையில் இம்மரணம் கடும் சித்திரவதைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட'' கூட்டுப்படுகொலை''.

இப்படி தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-21)

## வாகனம் மீது ஷெல்! மூவர் உடல் சிதறிப்பலி!!

### நால்வர் காயம் அடைந்தனர்

மட்டக்களப்பு, நவ. 1

வாகனம் மீது ஷெல் விழுந்ததில் தாய், மகள் உட்பட மூவர் உடல் சிதறிப் பலியானார்கள்.

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியில் சுங்கான்கேணி என்ற இடத்தில் நேற்று முன்தினம் மாலை இச் சம்பவம் இடம்பெற்றது.

கொழும்பில் இருந்து கல்முனை நோக்கி இந்த வாகனம் வந்து கொண்டிருந்த சமயம் ஷெல் தாக்குதலுக்கு உள்ளானது.

உறவினர்களை வெளிநாடு அனுப்பி விட்டுச் சொந்த இடம் திரும்பிக் கொண்டிருந்தவர்களே இதில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தப்பி ஓடிய படையினருக்கான பொது மன்னிப்பு காலாவதி

கொழும்பு, நவ. 1

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய படையினர் இராணுவத்தில் வந்து மீண்டும் இணைந்து கொள்ள வழங்கப்பட்டிருந்த பொது மன்னிப்புக் காலம் நேற்றுடன் முடிவடைந்தது.

இனிக் காலக்கெடு எதுவும் வழங்கப்படமாட்டாது என்றும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா ஆனந்தராஜா

மானிப்பாய் தெற்கு, லோட்டன் வீதியைச் சேர்ந்த செல்லையா ஆனந்தராஜா 31 – 10 – 97 இல் காலமானார்.

இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், உதயகுமார் (உதயன் பணிமனை), பிறேம்குமார் (சுவிஸ்), புஸ்பராணி, மதிவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணகுமாரி (ஆசிரியை, சென். ஆன்ஸ் றோ. க. த. க பாடசாலை, மானிப்பாய்), சிவரூபி (சுவிஸ்), வினோதன், ராஜ்குமார் (போதகர், அசெம்பிளி ஓவ் கோட், அராலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவன், பிரவீணன், சிந்துஜா, நஹோமி, ரெபேக்கா, யூட் அனோஜன், சப்திகா, பிருந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஆ உதயகுமார்
(மகன்)
(உதயன் பணிமனை)

லோட்டன் வீதி,
மானிப்பாய்.

(சி/1937)

## சிவசுப்பிரமணியம் சந்திரவதனா

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தில் வசித்து தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய சிவசுப்பிரமணியம் சந்திரவதனா அவர்கள் 28-10-97 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கிருஸ்ணன்—கண்மலர் அவர்களின் அன்பு மகளும், சிவசுப்பிரமணியம் (மேற்பார்வையாளர், இலங்கை வங்கி, கொழும்பு), அவர்களின் அன்பு மனைவியும், ராஜிபாலினி (ஜேர்மனி), ராஜ்பவன் (லண்டன்), ராஜ்ரூபன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சச்சிதானந்தசிவராசா (இ. போ. ச.), கோண்டாவில் விஜயகோபாலராஜா (பிரான்ஸ்), சந்திரசேகரம் (யா / பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற ஸ்ரீ ஜெயகாந்தன், சந்திரகாந்தன், லோகேஸ்வரன் (பிரான்ஸ்), சித்திரவதனா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நற்குணநாயகத்தின் அன்பு மாமியும், கந்தையா (சுன்னாகம்), காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேதநாயகம், திருமதி பொன்னபேட ஆகியோரின் மருமகளும், நவமணி, தங்கமணி (அச்செழு), ராஜேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும், சிவஞானராஜா (சுன்னாகம்) மகாலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (2-11-97) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சந்திரசேகரம் (தம்பி)
[யாழ். பல்கலைக்கழகம்]

பரமேஸ்வரி அம்மன் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்

(50908)

## வேலுப்பிள்ளை மகேஸ்வரன்
(இளைப்பாறிய இலிகிதர்)

அச்செழுவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மகேஸ்வரன் (இளைப்பாறிய இலிகிதர்) 30-10-97 வியாழக்கிழமை அதிகாலை சிவபதம் எய்தினார்.

அன்னார் சறோஜினிதேவியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், திருமதி பரமேஸ்வரி ஆறுமுகம் (ஆஸ்திரேலியா), நடராசா, சங்கரப்பிள்ளை (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், கேதீஸ்வரன் (கனடா), கோணேஸ்வரி, யோகேஸ்வரி, பேரானந்தமூர்த்தி, கிருபானந்தமூர்த்தி (கொழும்பு) ஆகியோரின் தந்தையாரும், லதா, பேராதரன் ஆகியோரின் மாமனாரும், அபினா, சகினா, அனுஜன், கிரிஜனன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-10-97 இல் நீர்வேலியில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. பேரானந்தமூர்த்தி
(மகன்)

அச்செழு. (50912)

## தம்பு கந்தசாமி

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் குடமியன் வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு கந்தசாமி மாரடைப்பால் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பு பொன்னம்மாவின் மகனும், கண்ணம்மாளின் கணவரும், காண்டீபன் (ஜேர்மனி), சங்கரன், லக்மினி, லாவண்யா, செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தையா, சின்னன் ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற நடேசு (உரிமையாளர், கண்ணன் கூல்பார், கொடிகாமம்), யோகராசா (வரணி), யோகேஸ்வரி, பாக்கியம், செல்வராசா (சுவிடன்), தேவராசா, சிறிவரதராசா, சிறிகந்தராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவக்கொழுந்து, சூரியகுமாரி, வேல்காந்தன் (லண்டன்), ராசமணி, கமலதேவி, வசந்தா, (சுவிடன்), மல்லிகாதேவி (ஜேர்மனி), சிவஞானம், பரமலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26 – 10 – 1997 அன்று பி. ப. 3. 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வேவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
தம்பு யோகராசா
(சகோதரன்)

ஸ்ரீவிஸ்ணு அரிசி ஆலை,
எருவன் சந்தி,
வரணி.

(50902)

## காசோலைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 01

''ஷப்றா யுனிக்கோ பினான்ஸ்'' நிறுவனத்தில் பண வைப்புச் செய்தவர்களில், யாழ்ப்பாணத்தில் சான்றிதழ்களை ஒப்படைத்தவர்களுக்கு இப்போது மூன்றாம் கட்ட மீளளிப்புத் தொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை தமக்குரிய காசோலைகளைப் பெறாத வைப்பாளர்கள் யாழ்ப்பாணம், கே. கே. எஸ். வீதி, 308½ இலக்கத்தில் இயங்கும் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் —

நவம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் தமது காசோலைகளைச் சேகரிக்குமாறும்—

நிறுவன முகாமைத்துவப் பிரதிநிதி தெரிவித்தார்.

(அ)

## வெற்றிலை விலை உயர்வு

வடமராட்சி, நவ 01

யாழ். குடாநாட்டில் வெற்றிலை விலை அதிகரித்துள்ளது.

அண்மைக்காலமாக இரண்டு ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த வெற்றிலை தற்போது 6 ரூபாவாகவும், அதற்கு மேலும் விற்பனை செய்யப்பட்டுவருகிறது.

வெற்றிலையை விமானத்தில் தினமும் கொழும்பிலிருந்து எடுத்து வருவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்தே அதன் விலை அதிகரித்துள்ளது.

(ஐ.173)

## அதிபர்கள் சங்கக் கூட்டம்

வடமாகாண அதிபர்கள் சங்கப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மேற்படி சங்கத்தின் உபதலைவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபருமான க. சந்திரசேகரா தலைமையில் நடைபெறும்.

கூட்டத்தின் போது அதிபர்களின் இடர்காலக் கொடுப்பனவு, கல்விசார் பிரச்சினைகள், சம்பள முரண்பாடு, போர்ச் சூழலால் அதிபர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் போன்ற விடயங்கள் ஆராயப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (இ-4)


## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள (OXFORD) கார் விற்பனைக்கு உண்டு ஞாயிறு 8 மணி தொடக்கம் 2 மணி வரை பார்வையிடலாம்.
தொடர்பு:

11, கஸ்தூரியார்
ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(50920)

## எமது புதிய வெளியீடு!

ஆனந்தராஜ். ரோகினி
கதிரவன் D.S.P.
வீடியோ CD வெளியீடு


★ அபிமன்யு
★ கங்கா கௌரி
★ ஆஹா என்ன பொருத்தம்

புதிய போஸ்டர்களும் விற்பனைக்கு உண்டு.

வீடியோ விமல்

(50918)


# ஓராண்டின் நினைவலைகள்



மலர்வு:
27 — 05 — 1958

உதிர்வு:
12 — 11 — 1996.

## அமரர் இராசையா யோகரட்டினம்
(சபா)

திதி: 01 — 11 — 97

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றென்றும் நீங்காத நினைவுடன்:
அக்கா, அத்தான், மருமகள்.

''பரணி அகம்'',
கல்வயல், சாவகச்சேரி.

(50905)

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் - விசுவலிங்கம்

உடுவில் தெற்கு பாலாவோடையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் விசுவலிங்கம் அவர்கள் 30-10-97 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கம்–அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், சற்குணசிங்கம், ஜெயபாலசிங்கம், இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, சிவபாலசிங்கம் (கரன் பான்சி, நியூ மாக்கற், சுன்னாகம்) சிவகலாதேவி, மகராஜசிங்கம் (நோர்வே), ஜெயராஜசிங்கம் (லக்சுமி ரேட் சென்ரர், சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராணி, இந்திராணி, இராசரத்தினம், சண்முகராஜா (இளைப்பாறிய லைஸ்மன் தொலைத்தொடர்பு திணைக்களம்), புஸ்பராணி, காலஞ் சென்ற குணநாதன், லீலாவதி (நோர்வே), அருந்தவமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 31-10-97 வெள்ளிக்கிழமை 10-00 மணிக்கு நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சிவபாலசிங்கம் (புவி)
(மகன்)

பாலாவோடை,
உடுவில் தெற்கு.

(50910)

## தாமோதரம்பிள்ளை தம்பிப்பிள்ளை
(ஓய்வுபெற்ற உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர், றப்பர் ஆராய்ச்சி நிலையம், மலேசியா)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை தம்பிப்பிள்ளை 29-10-1997 புதன்கிழமை நீர்வேலியில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற தாமோதரம்பிள்ளை—செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் அன்புக்கணவரும், திருமதி இந்திராணி குமரேசன் (U. K.), திருமதி பானுமதி ராமுசுப்பையா (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், க. குமரேசன் (பொறியியலாளர்—U. K.), ராமுசுப்பையா (றப்பர் ஆராய்ச்சி நிலையம், (மலேசியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மாணிக்கப்பிள்ளை, சங்கரப்பிள்ளை (சிங்கப்பூர்), பொன்னம்பலம் (ஆசிரியர், அளவெட்டி), திருமதி குணரத்தினம் சொர்ணம்மா (வண்ணார் பண்ணை), நடராசா (சிங்கப்பூர்), திருமதி கதிரேசு கனகம்மா (வண்ணார்பண்ணை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வன்கள் விக்னேஸ்வரன் (U. K.), விஷ்ணு, அருள்விவாஸ்வன் (மலேசியா) ஆகியோரின் அன்புப் பேரனும், செல்விகள் தேவி, மலர், சிவம் (நீர்வேலி) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01-11-97 சனிக்கிழமை 9-00 மணியளவில் நீர்வேலி, திருவெண்ணாமலை கரம்பன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நீர்வேலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இந்திராணி குமரேசன்
(மகள்)

திருவெண்ணாமலை,
கரம்பன் வீதி,
நீர்வேலி.

(50907)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னியில் மரபுவழிச் சமருக்கு மேலதிகமாக

# கெரில்லா யுத்த தந்திரத்திலும்

# இரு தரப்பினரும் பலப் பரீட்சை!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்தில் தமது நடவடிக்கைகளை — யுத்த தந்திரங்களை — கெரில்லாப் பாணியிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் ஏனைய தமிழ்ப் போராளிக் குழுக்களும் மேற்கொண்டன.

திடீர்த் தாக்குதல்களை நடத்திவிட்டு மறைவது என்ற யுத்த தந்திரத்தின் மூலமே புலிகள் தமது இராணுவ சக்தியை வளர்த்துக் கொண்டனர் என்பது உலகறிந்த உண்மை.

மரபு வழி இராணுவமான ஸ்ரீலங்காப் படைகளுக்கு, கெரில்லா யுத்தத்துக்கு ஈடு கொடுப்பது ஆரம்பத்தில் மிகக் கஷ்டமாக இருந்தது என்பதும் சரித்திரம் காட்டிய உண்மை.

ஆனால் புலிகளின் இராணுவ பலம் விரிவடைந்து ஒருபிரதேசத்தைத்தக்கவைத்திருக்கும் படையணியாக புலிகள் பரிணமித்த போது விரும்பியோ விரும்பாமலேயோ மரபு வழி யுத்தத்துக்குள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர்.

அதாவது ஆரம்பத்தில் கெரில்லாப்பாணி யுத்த தந்திரத்தைப் பயன்படுத்திச் செயற்பட்ட புலிகள், இன்று ஒரு முனையில் மரபுவழிச் சமரிலும், மறுமுனையில் கெரில்லா யுத்த தந்திரத்திலும் ஈடுபட வேண்டிய நிலை வந்திருக்கிறது.

ஆனால், அதேபோன்று இதுவரை காலமும் மரபுவழி யுத்தத்தில் ஈடுபட்டு வந்த அரசுத் துருப்புகளும் கூட மரபுவழி யுத்தத்துக்கு மேலதிகமாக கெரில்லாப்பாணி யுத்த முறையிலும் தங்கள் துருப்புக்களைச் செயற்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது விந்தைக்குரியதாகும்.

குடாநாடு போன்று தாம் கைப்பற்றிய பிரதேசங்களில் முகாம்கள், ''சென்றி''கள் போன்றவற்றுக்குள் இருந்து கொண்டு— உளவுத் தகவல்களை மட்டும் நம்பியபடி— அப்பிரதேசத்துக்குள் ஊடுருவும் புலிகளை அழிப்பது என்பது படையினருக்கு இயலாத காரியம், இது படை உயர்வட்டாரங்களுக்கு நன்கு தெரிந்த விடயம்.

இதனாலேயே குடாநாட்டின் பல பகுதிகளில் அவ்வப்போது சிறு சிறு அணிகளாக —இராணுவச் சீருடையின்றி —துருப்புகளை கெரில்லாப் பாணியில் ஊடுருவ விட்டு புலிகளைத் தேடியழிக்கும் முயற்சியைப் படைத்தரப்பு மேற்கொண்டு வருகின்றது.

இந்த முயற்சி பலன் தந்ததா? வெற்றியளித்ததா? என்ற விவகாரம் ஒரு புறம் இருக்க—

இதே போன்ற உத்தியையே வன்னி மரபுவழிச் சமரிலும் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் படைத் தரப்புக்கு ஏற்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டி வீதி வழியாக புளியங்குளத்தைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகள் பலன் தராததால், பக்கவாட்டில் நகர்ந்து புளியங்குளத்தைச் சுற்றி வளைக்க படைகள் முயன்றதும்—

அவ்வாறு முயன்ற படையினரை விஞ்ஞான குளம் சந்தி, கரப்புக்குத்தி ஆகிய பகுதிகளில் வைத்துத் தாக்கிய புலிகள் அங்கிருந்த படையினரின் விநியோக மையங்களைக் கைப்பற்றியதும் —

கரிப்பட்டமுறிப்புப் பகுதியில் படையினரின் ஒரு பிரிவினர் தனியாக துண்டாடப்பட்டு புலிகளின் பிடியில் சிக்கியிருப்பதாகத் தகவல் வெளியானதும்— தெரிந்தவையே.

எனினும் நீண்டநாள் முற்றுகையின் பின்னர் கரிப்பட்டமுறிப்பில் இருந்தும்—

ஒட்டுசுட்டான்— மாங்குளம் வீதியில் இருந்தும்—

வெளியேறி பின்னடைந்து முற்றுகையிலிருந்து படையினர் மீண்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

வன்னி யுத்த களத்தில் பருவமழை தொடங்கிவிட்டது. பருவமழையைப் பயன்படுத்தி படை நிலைகள் மீது புலிகள் ஊடுருவித் தாக்கும் அபாயமும் அதிகரித்து விட்டது.

அங்கு புலிகள் பிரதேசத்துக்குள் பெரிய எடுப்பில் ஊடுருவ முயலும் போதெல்லாம், புலிகளின் கனத்த பதிலடியைச் சந்திக்கும் படைத்தரப்பு, பருவமழைக்கு மத்தியிலும் மற்றொரு பெரிய




தாக்குதல் முயற்சியை — படை நகர்வுத் திட்டத்தை— செயற்படுத்த ஆயத்தமாவதாகத் தெரிகின்றது.

எனினும் அதற்குத் தயாராவதற்காகக் காத்திருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மற்றொரு ஊடுருவல் அதிரடியை புலிகள் நடத்தக் கூடும் என்ற அச்சமும் படைத் தரப்புக்கு உள்ளது.

தமது முன்னரங்க நிலைகளில் வெறுமனே காவலுக்கு இருப்பது புலிகளின் ஊடுருவல் தாக்குதலுக்கு வழி செய்யும் என்பது படையினருக்கு நன்கு தெரியும்.

### படையினரின் புதிய உத்தி

அதனால் தமது முன்னரங்க நிலைகளையும் முகாம்களையும் பாதுகாப்பதற்காக புதிய உத்தி ஒன்றை அவர்கள் கையாளுகின்றனர்.

தமது முன்னரங்க நிலைகளில் இருந்து சிறுசிறு குழுக்களாக முன்னேறி — தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வெளியே — பரவலாக பல இடங்களிலும் காடுகளுக்குள் சந்தடியற்று மறைந்திருந்து செயற்படுவதே அத் திட்டமாகும்.

அதாவது ஸ்ரீலங்காவின் மரபுப் படையணிகள் வன்னிக் காட்டுக்குள் கெரில்லா உத்திகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன.

இந்த உத்தி மூலம் இரண்டு நோக்கங்களை எட்டலாம் என்று படைத்தரப்பு கருதுவதாகத் தெரிகின்றது.

ஒன்று: காடுகளுக்குள் புலிகளின் நடமாட்டத்தைக் கண்டு பிடித்து அவர்களைத் தாக்கி அழிப்பது.

இரண்டு: படையினரின் முன்னரங்க நிலைகளுக்கு அப்பால், படை நிலைகளைத் தாக்குவதற்கு எடுக்கப்படும் ஆயத்தங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் உளவுத் தகவல்களைப் பெறுவதை உறுதிப்படுத்துவதும், அத்தகைய ஆயத்தங்களை முளையிலேயே கிள்ளி எறிவதும்.

இந்த இரண்டு நோக்கங்களிலும் படைத் தரப்பு வெற்றி பெறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பரந்த வன்னிக் காட்டின் ஒவ்வோர் அங்குலத்திலும் புலிகள் நிலை கொண்டிருக்க முடியாது. அதனால் இரவோடு இரவாக — சிறுசிறு குழுக்களாக — படையணிகள் காட்டுக்குள் நகர முடியும் என்பது வாஸ்தவம் தான்.

இந்திய கூர்க்காப் படையினரும் வன்னிக் காட்டில் புலிகளைத் தேடி — புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தேடி — இவ்வாறு ஊடுருவினர் என்பதும் —

செமத்தியாக வாங்கிக் கட்டிக் கொண்டனர் என்பதும் கடந்த காலத்தில் நாம் அறிந்த உண்மைகள்.

வியட்கொங் கெரில்லாக்களைத் தேடி வியட்நாம் காடுகளுக்குள் இவ்வாறு ஊடுருவி அலைந்த அமெரிக்க படைகளுக்கு கெரில்லாக்கள் கொடுத்த 'பாடமும்' நோக்கற்பாலது.

அமெரிக்க அதிகாரிகளிடம் பயிற்சி பெறும் ஸ்ரீலங்காத் தரப்பும் அதே பாணியை இப்போது பின்பற்றத் தொடங்கியிருக்கின்றது.

வன்னிக் காடு புலிகளுக்கு பரிச்சயமானது. அதன் ஒவ்வோர் அங்குலமும் புலிகளுக்கு அத்துப்படி. இது புலிகளுக்கு உள்ள 'பிளஸ் பொயிண்ட்'.

வன்னி யுத்த களத்தில் மரபு வழிச் சமருக்கு மேலதிகமாக கெரில்லாப் பாணி யுத்த முனையும் திறக்கப்பட்டிருக்கின்றது. அந்த யுத்த முனையில் வெற்றி யாருக்கு?

காலம் பதில் சொல்ல வேண்டிய கேள்வி இது.

★ ★ ★

### வன்னியில் படைக் குவிப்பு!

வெட்ட வெட்ட முளைக்கும் அசுரனின் தலையைப் போன்று விழ விழ படைகளை, புதிது புதிதாக வன்னி யுத்த களத்துக்கு விடாது அனுப்புவதில் தீவிரமாக இருக்கிறது அரசுத் தரப்பு.

வன்னிக் களத்தில்' வெற்றி உறுதி' படை நடவடிக்கையின் போது பலியாகி அல்லது [illegible] முனையிலிருந்து வெளியேற்றப்பட்ட பல்லாயிரக் கணக்கான துருப்புகளுக்குப் பதிலாக புதிய துருப்புகள் அனுப்பப்பட்டுள்ளன; வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக வடக்கு—கிழக்கின் ஏனைய யுத்த முனைகளிலிருந்து துருப்புகள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன.

ஏற்கனவே பல படை முகாம்கள் மூடப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தில், கடந்த சில வாரங்களில் மேலும் பல முகாம்கள் மூடப்பட்டு, துருப்புகள் வாபஸ் பெறப்பட்டு வன்னிக் களத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மூதூர்ப் பிரதேசத்தில் எட்டு முகாம்கள் அண்மையில் இவ்வாறு மூடப்பட்டன.

அரசுத் துருப்புகளைப் பொறுத்தவரை யாழ். குடாநாட்டுப் பகுதி கொந்தளிப்பான (Sensitive) பிரதேசமாகும். இங்கிருந்தும் கூட பல காவலரண்கள், முகாம்கள் மூடப்பட்டு துருப்புகள் வன்னிச் சமருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

வன்னிக் களத்தில் சுமார் இருபத்தையாயிரம் துருப்புகள் குவிக்கப்பட்டிருப்பதாகத் தகவல். முப்பதாயிரம் துருப்புகள் குவிந்திருப்பதாக புலிகள் கூறுகின்றன.

ஐம்பத்திமூன்றாவது, ஐம்பத்தியைந்தாவது படையணிகளே வன்னிக்களத்தில் யுத்தம் புரிந்து கொண்டிருக்கின்றன. கடந்த மாதங்களில் பலத்த இழப்புகளைச் சந்தித்த படையணிகளும் இவை தான்.

இவற்றுக்கு மேலதிகமாக புதிதாக 56 ஆவது படையணியையும் வன்னிக்கு அனுப்பி, ''வெற்றி உறுதி'' நடவடிக்கையின் மூன்றாவது கட்டத்தை ஆரம்பிக்க அரசு திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

அதாவது வன்னிக் களத்தில் துருப்புகளின் எண்ணிக்கையை மூன்றில் ஒரு பகுதியால் அதிகரிக்க திட்டமிடப்படுவதாகத் தெரிகின்றது.

பருவ மழைக்கு நடுவிலும் பலமான தாக்குதல் ஒன்றைத் தொடுக்க — யுத்த முனை ஒன்றைத் திறக்க — அரசு ஆயத்தமாகுகின்றது.

புலிகளுக்கு கால அவகாசம் வழங்கி அவர்களுக்கு ஓய்வு கிடைப்பதற்கு. இடங்கொடாமல் சாதுரியமாகச் செயற்பட படைத்தரப்பு நினைத்திருக்கக் கூடும்.

அதன் பெறுபேறுகள் இனி மேல் தெரியவரும்.

★ ★ ★

### தீர்வுத் திட்டம் குறித்து புலிகளின் கருத்து

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சந்திரிகா அரசு முன்வைத்துள்ள யோசனைகள் ஓரளவு முழுவடிவம் பெற்று வெளியிடப்பட்டுள்ள இந் நிலையில்—

அது குறித்து பல்வேறு கட்சிகளும் தெரிவித்து வரும் கருத்துக்களின் அடிப்படையில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ள தற்போதைய சூழ்நிலையில்—

தமிழர்பிரதிநிதிகளாக யுத்த களத்தில் அரசுடன் கடுஞ் சமர் புரிந்து வரும் புலிகள், அரசின் யோசனைகள் தொடர்பாக கொண்டுள்ள நிலைப்பாடு வெளியாகியிருக்கின்றது.

அரசின் தீர்வு யோசனைகள் பற்றிய தமது உறுதியான நிலைப்பாட்டை— உத்தியோகபூர்வ .கருத்தை— 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' புலிகள் வெளியிட்டிருக்கின்றனர்.

தமது உத்தியோக பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் ஐப்பசி மாத இதழிலேயே தமது நிலைப்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் தெளிவுபடுத்தியிருக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு எதிராக அரசு போடும் 'அரசியல் நியூட்ரன் குண்டு' எனதீர்வுத் திட்டத்தை புலிகள் விமர்சித்துள்ளனர்.

புலிகள் கூறியிருப்பதாவது:-

''அதிகாரப் பரவலாக்கலுக்கான நிர்வாக அலகுகள் என்ற போர்வையில் தீர்வு யோசனைகளில் தமிழர் தாயகம் கூறுபோடப்பட்டுள்ளது. இச்செய்தியை 03-10-1997 அன்று பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் வெளியிட்டுள்ளார்.

''வடக்கென்றும், கிழக்கென்றும் தமிழர் தாயகம் பிரிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியுடன், கிழக்கு மாநிலம் பல துண்டுகளாக நறுக்கப்படவுள்ளது என்ற அறிவிப்பையும், அதிலே சில துண்டுகள் அருகில் உள்ள சிங்கள மாவட்டங்களுடன் சங்கமமாகப் போகின்றன என்ற செய்தியையும் அவர் அறிவித்தார்.

''தமிழர் தாயகத்தின் மையப்பகுதியான மணலாறு, அநுராதபுரம் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு விட்டது. என்ற செய்தி இதற்கு முன்னரே வெளியிடப்பட்டு விட்டது.

''தமிழர் தாயகத்தையும், தமிழர் தேசியத்தையும் குறிவைத்தபடி சந்திரிகாவின் தீர்வுப்பெட்டகம் உள்ளது என்ற உண்மை இப்போது அம்பலமாகி விட்டது.

''இரண்டு அரசுகளின் படைகள் போல தமிழர் சேனையும் ஸ்ரீலங்காப் படையினரும் மரபுப்போர் முறையில் சமர்புரிந்து இனமுரண்பாட்டின் உச்சக் கட்டத்தைப் பலப்படுத்தி உள்ளன. இந்தச்சூழலில் தமிழர் தேசத்தை ஏற்றுக் கொண்டு, தமிழர் தேசியத்தை அங்கீகரித்து, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக 'ஒரு நாடு, ஒரு மக்கள்' என்று கூறுவது உள்நோக்கம் கொண்டதாகும்.

''தேசிய இன அந்தஸ்தில் இருந்து தமிழர்களை சமூகக் குழு என்ற தரத்திற்கு கீழிறக்கிச் சிங்கள இனத்துடன் சங்கமிக்கச் செய்வதே அரசின் நீண்டகாலத் திட்டமாகும்.

''தமிழர்களின் இனப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க இரண்டு பிரதான விடயங்கள் தடையாக உள்ளன என சந்திரிகா அரசு கருதுகின்றது.

''ஒன்று:- காலம் காலமாகச் சுடர்விட்டுஎரியும்தமிழ்த் தேசியம் என்ற அரசியல் நெருப்பு.

''இரண்டு:- இந்த உணர்வுத்தீயைக் கட்டிக் காத்து வளர்க்க முற்படும் புலிகள் இயக்கம்.

**பாசுபதன்**

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் உயிர்க் கொல்லி "ராகிங்"!

## நல்லை ஆதீன முதல்வர்

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகள் கூறியதாவது:—

நண்பர்களை, உறவினர்களை மட்டுமன்றி புதிய அன்பர்களையும் அன்புடன் வரவேற்று உபசரிப்பதுதான் எமது சமயத்தின், இனத்தின் பண்பு.

அந்நிய கலாசாரத்தில் மூழ்கி புதிய மாணவர்களை பழைய மாணவர்கள் இம்சிப்பது என்பது எங்கள் சமூக மாண்புகளுக்கு முற்றிலும் முரணானதாகும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற தமிழ் மாணவன் ஒருவர், தமிழ் மாணவர்களாலேயே இம்சிக்கப்பட்டு மரணமானது மிகவும் வேதனைக்குரியதாகும், வெட்கப்பட வேண்டியதுமாகும்.

பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்தே சமய நெறிப்படி வாழ்வதற்கும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பயிற்றுவிப்பதன் மூலமே இத்தகைய சமூக நோய்கள் தலையெடுக்காமல் பரவாமல் தடுக்கலாம். ★



வரப்பிரகாஷ்

## யாழ். மறைமாவட்ட ஆயர்

யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கூறிய கருத்து இது:

''ராகிங்'' பகிடிவதை என்பது எமது கலாசாரத்துக்கு ஒவ்வாத ஒன்றாகும். இதனை மேற்கு நாட்டு கலாசாரத்தின் ''மண்டி'' என்றே கூற வேண்டும். இது எமது உயர்கல்விக்குத் தேவையற்ற ஓர் அம்சமாகும்.

மாணவர்களிடையே சகோதரத்துவத்தை, மானசீகமான உறவுகளை வளர்க்க பகிடிவதை தேவையற்றதாகும். ஒருவரின் உயிருக்கு உலை வைக்கும் அளவுக்கு வளர்ந்துள்ள இந்தச் செயற்பாடு கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும், மாணவர் சமுதாயம் இனிவரும் காலங்களில் இத்தகைய நிகழ்வுகளைத் தவிர்த்து பொறுப்புணர்ச்சியுள்ள, மனித நேய மனப்பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

பகிடிவதை நிகழ்வுகளின் தாக்கம் குறித்து உயர்கல்விக் கூடங்களுக்குப் பொறுப்பானவர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும் விழிப்பாக இருந்து, தமக்குக் கீழ் உள்ளவர்களுக்கு இப்படியான செயல்களைச் செய்யக்கூடாது என்று எச்சரிக்கை செய்து அவர்களை நல்வழிப்படுத்துவதே இதற்கு தீர்வாக அமைய முடியும். ★

## துணைவேந்தரின் கருத்து

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கூறியதாவது:-

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் இருந்து 'ராகிங்' எனப்படும் பகிடிவதை முற்றாகக் களையப்பட வேண்டும். பகிடிவதை கடந்த இரு தசாப்தங்களாக வளர்ந்து இன்று உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து இன்று ஆசிரிய பயிற்சிக்கலாசாலை, கல்விக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, பாடசாலைகளின் மேல்வகுப்பு வரை சென்றுள்ளது.

சமூகத்தில் உள்ள பல்வேறு பிரிவினரும் இணைந்து மாணவர்கள் மத்தியில் அழுத்தம் கொண்டுவருவதன் மூலமே இதை நிறுத்த முடியும். முதலில் பாடசாலைகள் இந்த விடயத்தில் கவனத்தை உருவாக்க வேண்டும். பல்கலைக்கழக நிர்வாகத்தை மட்டும் குறை கூறிக் கொண்டிருப்பதால் பயன் ஏதும் கிடைக்கப்போவதில்லை.

பல்கலைக்கழக நிர்வாகம், பல்கலைக்கழக சமூகம் ஆகியவற்றுடன் எமது சமுதாயமும் இணைந்து செயற்படமுன்வர வேண்டும்.

பாடசாலைகளில் இருந்தே பகிடிவதைக்கு எதிரான கருத்துக்களை மாணவர்களுக்கு விதைக்க வேண்டும். அத்துடன் பெற்றோரின் பங்கும் இது விடயத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

எமது சமூகத்தில் பாரம்பரியமாக இருந்து வந்த குரு — சிஷ்ய உறவு அருகிப்போய், பகிடிவதை என்ற செயற்பாடு மேலை நாடுகளில் இருந்து வந்துள்ளது.

இன்று எமது சமூகத்துக்கு வந்த துன்பத்தை, அவமானத்தையிட்டு பேசிக்கொண்டிருக்காமல் இந்தச் செயல் மேலும் தொடராமல் இருக்க பல்கலைக்கழக நிர்வாகத்துடன் பல்கலைக்கழக சமூகம், பெற்றோர், பாடசாலை, அதிபர்கள் இணைந்து செயற்படுவதன் மூலம் இந்தப் பெரும் சமுதாயப் பிரச்சினைக்கு தீர்வுகண்டுவிட முடியும் என்று கருதுகிறேன்.

பகிடிவதை மூலம் விளைந்த துன்பமான நிகழ்வில் ஒருவர் உயிரிழந்து விட்டார். அதேநேரம் ஏனையோர் தமது வாழ்க்கையை இழந்துவிட்டார்கள். இந்த நிலையைச் சிந்தித்து, இந்தக்கொடிய நோயை எமது சமூகத்தில் இருந்து களைவதற்குச் சகலரும் இணைந்து செயற்பட முன்வரவேண்டிய காலகட்டம் இதுவாகும். ★

## சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர்

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் எஸ். தனபாலனின் கருத்து இது:-

பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் வரப்பிரகாஷின் மரணம் ராகிங்குக்கு நல்ல படிப்பினையாக அமைவதால், பல்கலைக்கழக மாணவர்கள் பொறுப்புடன் எதிர்காலத்தில் செயற்பட முன்வரவேண்டும்.

உயர் கல்விபெற மாணவர்கள் முதிர்ச்சியடைந்த நிலையில் செல்வதால், அவர்களுக்கு நாம் போதனை செய்து தான் திருத்த வேண்டுமென்பதில்லை. அவர்கள் சுயமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

ராகிங்கைத் தடை செய்யும் வகையில் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படுவது அவசியம்.

பல்கலைக்கழகங்கள் உட்பட உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் தாங்களாகவே உணர்ந்து ராகிங்குக்கு எதிராகச் செயற்பட்டால் மட்டுமே இந்த செயலை முற்றாகத் தடுக்க முடியும்.

உயர் கல்வியில் இடம்பெறும் இந்தச் செயல் படித்த சமூகத்துக்கு கெட்ட பெயர் வாங்கித்தரும் விடயமாக அமைந்துள்ளது.

ராகிங் போன்ற செயல்களைப் பார்த்துக் கொண்டிராமல் பெற்றோரும் இந்தச் செயலைத் தடுக்க கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் பெரும்பான்மையான மாணவர்கள் தமது பாடசாலைக் கல்வியை முடித்து முதன்முதலாக அந்நிய இடத்துக்குப் போவது பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதற்குத்தான்.

ஆண்டு ஒன்றில் கல்வி பயிலும் மாணவரை பாடசாலைகளுக்கு பெற்றோர் அழைத்துச் செல்வது போன்று, பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் மாணவர்களையும் பெற்றோர் அழைத்துச் செல்கிறார்கள். இன்றுள்ள சூழ்நிலையில் யாழ்ப்பாணத்துக்கு வெளியே உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் தமது சகோதர மாணவர்களுக்கு அங்கு கல்வி பயிலும் சிரேஷ்ட மாணவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இங்குள்ள பல்கலைக்கழக மாணவர்கள் புதிய மாணவர்கள் அனுமதி பெறும் போது முதல் இரு வாரங்களை ''ராகிங் வாரம்'' என்று அழைக்கிறார்கள்' ஆனால் வெளிநாடுகளில் அவ்விரு வாரங்களையும் ''அறிமுக வாரம்'' என்று அழைக்கிறார்கள்.

புதிய மாணவர்களை அந்த வாரத்தில் சிரேஷ்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் உள்ள சகல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று காட்டி அறிமுகஞ் செய்கிறார்கள். இப்படியான நிலை இங்கும் உருவாக வேண்டும். ★

## வேம்படி மகளிர் கல்லூரி பிரதி அதிபர்

வேம்படி மகளிர் கல்லூரி பிரதி அதிபர் திருமதி கே. சோமசுந்தரம் கூறியதாவது:-

பாடசாலைகளில் நடைபெறும் ஒன்றுகூடல், விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் புறநிலை நிகழ்வுகள் மூலம் மாணவர்களிடையே பழகுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன.

புதிய மாணவர்களுடன் பழகுவதற்காக ராகிங்கும் அந்த வகையிலேயே மேற்கொள்ளப்படவேண்டும்.

அதைவிடுத்து உள உடல் நிலையைப் பாதிக்கும் அளவுக்கு செல்லக்கூடாது. சிரேஷ்ட மாணவர்கள் புதிய மாணவர்களை அன்புடனும், பண்புடனும் வரவேற்று, அவர்களும் தமது உடன்பிறப்புகள் என்ற உணர்வுடன் நடத்தவேண்டும். கல்வி வளர்ச்சிக்கு தேவையானது அதுதான். ★

## மாகாணக் கல்விச் செயலாளர்

வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலாவின் கருத்து இது:

இன்றுள்ள நிலையில் ''ராகிங்' ஒரு தேவையற்ற விடயமாகும். புதிதாக பல்கலைக்கழகம் வரும் மாணவர்களை பழைய மாணவர்கள் தேநீர் விருந்து அளித்து அன்போடு கட்டித் தழுவி, பண்போடு நடத்த வேண்டும். அதை விடுத்து ஒருவரைக் கொலை செய்யும் அளவுக்கு செல்லும் 'ராகிங்' சம்பவத்தை மிக மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

உலகத்தில் நாகரிகம் வளர்ந்து வரும் இக்காலத்தில் அநாகரிகமான இச்செயல் எமது சமுதாயத்துக்கு தேவையற்ற ஒன்றாகும்.

எதிர்காலத்தில் ஆசிரியராக வரப்போகும் மாணவர்களை உருவாக்கும் வவுனியா கல்விக் கல்லூரியில் நடந்த கேவலமான ''ராகிங்'' யாரால் செய்யப்பட்டது? எமது தமிழ் மாணவர்களால் என்பதை அறியும் போது சமூகமே வெட்கித்தலை குனிய வேண்டும். அங்கு பயிலும் சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்களை பாதுகாத்துள்ளார்கள்.

எமது இளம் சமூகம் எங்கே போகிறது? அதிகாரத்தில் உள்ளவர்கள் இந்த விடயத்தில் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவே இன்று அவசரமும், அவசியமானதுமாகும். ★

## ஒரு பெற்றோரின் மனப்புழுக்கம்

பெற்றோர்கள் சார்பில் எஸ். பரமநாதன் (அரச சார்பற்ற அமைப்புகளின் இணையத் தலைவர்) வெளியிட்ட கருத்து:

உலக நாடுகளில் ''ராகிங்'' நாகரிகமாக, கௌரவமாக புதிய மாணவர்களை கட்டி அரவணைக்க பயன்படும் போது இங்கு நடப்பது என்ன?

புதிய மாணவரைக் கொடுமைப்படுத்துவதன் மூலம் இன்பம் காணும் நிகழ்ச்சி தான் இங்கு நடக்கிறது.

பெரும் இன்னல்கள், கஷ்டங்கள் அனுபவித்துக் கொண்டு, குப்பி விளக்கில் கண் துஞ்சாது படித்து பல்கலைக்கழகம் வரும் இளம் சமூகத்திடம் பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்கள் நடத்தும் அநாகரிகச் செயல் நியாயமானதா என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும்.

ஆதரவு கொடுத்து, கைதூக்கி விடவேண்டியவர்கள் தமது வக்கிரமான இச்சைகளுக்கு புதிய மாணவரைப் பயன்படுத்துவது நியாயமானதா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

ஒரு மாணவன் பல்கலைக்கழக அனுமதி பெறும், போது தனது கல்விச் செயற்பாடு முடியும் வரை ''ராகிங்'' போன்றவற்றில் ஈடுபடமாட்டேன் ஈடுபட்டால் தண்டிக்கப்படுவேன் என்பதனை அறிவேன் — என்று தெரிவிக்கும் சத்தியக்கடதாசி ஒன்றை பல்கலைக்கழக துணை வேந்தர்கள் பெற வேண்டும்.

இவ்வாறு சத்தியக் கடதாசி பெறுவதன் மூலம் அவர்கள் பயந்து இந்த செயற்பாடுகளைத் தவிர்ப்பார்கள்.

பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களுக்கு முதலில் ஆங்கில வகுப்பு நடத்தப்படுவது போன்று, ராகிங் தடுப்புத் தொடர்பாகவும் விளக்க வகுப்பு நடத்தப்பட வேண்டும்.

பல்கலைக்கழகத்தில் தானே மாணவர்களிடையே ஏதோ நடக்கிறது என்று கண்டும் காணாதது போல் எமது சமூகம் இருக்காமல், ''ராகிங்'' கொடுமை எங்கெங்கு நடக்கிறதோ அங்கெல்லாம் எமது மக்கள் எதிர்ப்புக் காட்டத் தயாராக வேண்டும்.

பொது அமைப்பு பிரதிநிதிகள், பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள் பல்கலைக்கழக நிர்வாகிகள் அங்கம் வகிக்கத்தக்க வகையில் கண்காணிப்புக் குழுக்களை அமைக்க பல்கலைக்கழக நிர்வாகத்தினர் முன்வர வேண்டும். அந்தக் கண்காணிப்புக் குழுக்கள் பல்கலைக்கழக சுற்றாடலில், பல்கலைக்கழக வளவுக்குள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட அனுமதிக்க வேண்டும்.

அத்துடன் பல்கலைக்கழகத்தில் போதனை நடத்தும் ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகள் தமது பல்கலைக்கழகத்தில் நடக்கும் பகிடிவதை செயற்பாடுகளை நேரடியாககண்காணிக்க முன்வர வேண்டும்.

குடாநாட்டில் உள்ள பொது அமைப்புக்களின் உதவியுடன் சிரேஷ்ட மாணவர்களும், புதிய மாணவர்களும் சிநேகபூர்வமான உறவை வளர்க்க விசேட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யலாம்.

அத்துடன் பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்கள் தாம் படித்த பாடசாலையின் பெயரை காப்பற்ற வேண்டும் என்ற சீரிய நோக்குடன் செயற்பட வேண்டும். சிரேஷ்ட மாணவர்கள், தாம் அனுபவித்த 'ராகிங்' கொடுமையை புதிதாக வரும் மாணவரிடம் காட்ட வேண்டும் என்று கொண்டுள்ள சிந்தனையில் இருந்து விடுபட வேண்டும்.

## வேம்படி மாணவத் தலைவி

வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவத்தலைவி ஒருவர் தெரிவித்த கருத்து இது:

பல்கலைக்கழகங்களில் 'ராகிங்' என்பது புதிய மணாவர்கள் சிரேஷ்ட மாணவர்களுக்கு தம்மை அறிமுகப் படுத்துவதற்கென்று இருந்த போதும் அது இப்போது மாறிவிட்டது. சிரேஷ்ட மாணவர்களைக் கண்டாலே புதிய மாணவர்கள் பயப்படுகின்றனர். இத்தகைய 'ராகிங்' ஒரு மாணவனை மரணமடையச் செய்யும் அளவுக்கு போவதென்பது வருந்தத்தக்க விடயம்.

இதனைத் தடுப்பதற்கு சிரேஷ்ட மாணவர்கள் உணர்ந்து செயற்படுவதுதான் சிறந்தவழி ஆகும். சிரேஷ்ட மாணவர்கள், புதிய மாணவர்களுடன் நண்பர்கள் போல பழக வேண்டும்.

இன்றைய 'ராகிங்' மாணவர்களை சித்திரவதை செய்வது போல பலாத்காரமாக இடம்பெறுகின்றது. இது மிகவும் அநாகரிகமானது; கொடுமையானதுமாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழிப்பதற்கு வெகுசன எழுச்சி தேவை!

## துர்க்கா துரந்தரியின் அறிவுறுத்து

துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:—

பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் செல்வவிநாயகபிரகாஷம் வரப்பிரகாஷ் பகிடிவதை மூலம் இறந்துள்ளார். இந்த செயல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும்.

இத்தகைய பகிடிவதை சம்பவங்கள் இனிமேல் எங்கும் நடக்குமானால் கல்வியாளர்களையும், கற்றவர்களையும் பாதிக்கும் செயலாக அமையும்.

ஆகவே இத்தகைய செயல்கள் இனிமேல் நடக்காமல் இருக்க சகலரும் பாடுபடவேண்டும். ★

## ஆசிரியர் சங்கப் பிரதிநிதி

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்ததாவது;-

ஏற்கனவே நலிந்து போயுள்ள எமது இனத்தின் மத்தியிலேயே இத்தகைய தேவையற்ற செயல்களும் இடம் பெறுகின்றன.

அண்மைக்காலத்தில் நடந்த இரு சம்பவங்களை உற்று நோக்கும் போது எமது இனத்தினர் மத்தியில் இந்தக் கொடுஞ் செயல் வேகமாகப் பரவிவருவது தெளிவாகிறது,

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதை செயலைத் தொடர்ந்து அந்தப் பல்கலைக்கழக துணைவேந்தர் தமது பதவியை ராஜினாமாச் செய்தார். வவுனியா கல்விக்கல்லூரியில் இடம் பெற்ற பகிடிவதையால் இரு மாணவர்கள் உயிர் இழக்கும் நிலையில் இருந்து தப்பிப்பிழைத்தனர்.

பல்கலைக் கழக மட்டத்தில் மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் மாணவர்களை நல்வழிப்படுத்த சேவையாற்ற வேண்டிய ஆசிரியர்கள் பயிலும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கல்விக் கல்லூரிகளில் கூட இந்தச்செயல் தலைதூக்கியுள்ளதைக் காணமுடிகிறது. சமுதாயத்தில் தாம் பெரிய மனிதர் என்ற எண்ணம் அவர்கள் மனதில் உருவாகுவதே இந்த செயற்பாடு உக்கிரமடைய காரணமாக அமைகிறது.

பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் பீட மாணவன் வரப்பிரகாஷின் மரணமானது இறுதிச்சம்பவமாக அமையும் வகையில், கல்விச் சமூகம் ஒன்று திரண்டு கிளர்ந்தெழுந்து பகிடிவதை என்பதை வேரோடு களைய முன்வரவேண்டும்.

''பகிடிவதை'' க்கு எதிராக துணைவேந்தர்கள் சுற்றறிக்கை விடுவது மட்டும் போதாது.

இன்றைய சமுதாயத்தைச் சீரழிக்கும் கசிப்பு, போதைப்பொருள் அருந்துதல் முதலிய சமூகவிரோதச் செயல்களைப் போன்று அமைந்துள்ள இந்தப் பகிடிவதையை முற்றாகத் தடுக்கும் வகையில் செயற்படுவதற்கு வெகுஜன அமைப்பு உருவாக்கப்படவேண்டும். அதன் மூலம் போராட்டம் நடத்தப்படவேண்டும். அத்துடன் இந்தச் செயலைத் தடுக்கும் வகையில், அதிபர், ஆசிரியர், பெற்றோர், பல்கலைக்கழக நிர்வாகத்தினர் இணைந்து கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும்.

அந்தக் கண்காணிப்புக் குழு பகிடிவதையைத் தடுக்கும் பணியில் சாத்விகமாகவோ, பலாத்காரமாகவோ செயற்பட சமூகத்தின் சகல தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும்.

## யாழ். இந்து மாணவ முதல்வர்

யாழ். இந்துக் கல்லூரி சிரேஷ்ட மாணவ முதல்வர் சோதிலிங்கம் செந்தூரன் கூறிய கருத்து இது:-

''ராகிங்'' அளவோடு இருக்கலாம். எல்லை மீறிய ''ராகிங்'' தேவையில்லை. எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் ''ராகிங்'' நடைபெறுவதை நாம் எதிர்க்கிறோம்.

மேல் நாடுகளில் கைவிடப்பட்ட 'ராகிங்' எமக்கும் தேவையற்றது. புரிந்துணர்வு அடிப்படையில் கொண்டுவரப்பட்ட ''ராகிங்'' தற்போது கொலை அளவுக்கு சென்றுவிட்டது.

புற்றுநோய் சிறிதாக ஆரம்பித்து படிப்படியாக வளர்ந்து ஆளைக் கொல்வது போன்று ''ராகிங்''கும் அமைந்துவிட்டது.

சமுதாயத்தில் தலைவிரித்தாடும் பல சமூகவிரோத செயல்கள் போன்றே 'ராகிங்'கும் இன்று தலைவிரித்தாடுகிறது.

மாணவர்களிடையே பரஸ்பர நம்பிக்கையை வளர்க்க வேண்டிய ''ராகிங்'' மாணவர்களிடையே அவநம்பிக்கையையும், வெறுப்பையும் தோற்றுவிக்கும் நிகழ்வாக மாறிவிட்டது.

இதனால் பல மாணவர்கள் கல்வியைத் தொடராமல் கைவிடுகிறார்கள்; பலர் தற்கொலை செய்ய முற்படுகிறார்கள்.

''ராகிங்'' மூலம் சமுதாயத்தில் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறார்கள் ஒரு சிலர். ஒருவர் 'ராகிங்' செய்ததற்காக அவரைச்சார்ந்த சமூகம், உற்றார், உறவினர், அவர் கற்ற பாடசாலைச் சமூகம் வெட்கிப் போகும் நிலை உருவாகிறது.

இவற்றைத் தவிர்ப்பதற்கு ''ராகிங்'' ஒழிக்கப்பட வேண்டும், அது மாணவர்களுக்குத் தேவையற்றது. ★

## யாழ்ப்பாணத்தின் உணர்வலைகள்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் கல்வி பயிலச் சென்ற மாணவன் செல்வவிநாயகப்பிரகாசம் வரப்பிரகாஷ் சிரேஷ்ட மாணவர்கள் நடத்திய ''ராகிங்'' (பகிடிவதை) காரணமாகப் பலியானார்.

இவரை ''ராகிங்'' செய்தவர்கள் தமிழ் மாணவர்களே.

இலங்கையிலேயே ''ராகிங்'' வதையினால் பலியான முதலாவது மாணவனாகவும் வரப்பிரகாஷ் மாறிவிட்டார்.

''ராகிங்'' கொலைச் சம்பவம் தென்னிலங்கையில் அதற்கு எதிரான உணர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது பல்கலைக்கழக மாணவர்கள் சேர்ந்து கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்கள். அமைச்சர் அதிர்ச்சி வெளியிட்டார். பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு வாரம் துக்கம் அனுஷ்டிக்கிறார்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் ......?

''ராகிங்'' கொடுமை குறித்து யாழ்ப்பாணத்தவர் உணர்வலை எப்படி இருக்கிறது என்பதனை அறியும் பொருட்டு எமது பிரதிநிதிகள் சமூகத்தின் பல மட்டங்களையும், தரப்புகளையும் சேர்ந்தவர்களைச் சந்தித்துத் திரட்டிய கருத்துக்கள் இவை.

சில அதிகாரிகளும், பொறுப்பு வாய்ந்தவர்களும் கருத்துக் கூற மறுத்த வேளையில், சமூக நலன் கருதி துணிச்சலுடன் கருத்துச் சொன்ன அன்பர்களுக்கு எமது நன்றிகள்.

— ஆசிரியர்

## மாணவன் வரப்பிரகாஷ்

பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறுவதற்கு என்று எத்தனையோ எதிர்பார்ப்புக்களுடன் கனவுகள் பலவற்றை நெஞ்சிலே சுமந்து நின்ற வரப்பிரகாஷ் ''ராகிங்''(பகிடிவதை) என்ற பெயரில் செய்யப்பட்ட கொடூரத்தால் பலியாகி நாள்கள் சில கடந்தும், சமூகத்தில் ஏற்படுத்திய வேதனைப் பதிவு இப்போதைக்கு அழியக் கூடியதல்ல.

யார் இந்த வரப்பிரகாஷ்?

வரப்பிரகாஷ் 1984 ஆம் ஆண்டு சென். ஜோன்ஸ் கல்லூரியில் சேர்ந்தார். பாடசாலையில் சேர்ந்தது முதலே அவர் படிப்பில் தனது கெட்டித்தனத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தார். 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தார். ஜீ. சி ஈ (சா/த) பரீட்சையில் 6 விசேட சித்திகளையும் (D), இரண்டு திறமைச் சித்திகளையும் (C) பெற்றார்.

கல்வி தவிர ஏனைய துறைகளிலும் அவர் சிறந்துவிளங்கினார். கல்லூரி விஞ்ஞான மன்றத்தின் தலைவராகவும், லியோ கழக செயலாளராகவும் இருந்தார். இது தவிர ஆங்கில மன்றம், இந்து மன்றம், தமிழ் மன்றம், செஸ் கழகம், உயர் தர வகுப்பு மாணவர் ஒன்றியம் போன்றவற்றில் செயற்குழு உறுப்பினராக விளங்கினார்

மத்திய பிரிவு வரை இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய வரப்பிரகாஷ் பின்னர் அதில் பங்குபற்றுவதைக்குறைத்துக் கொண்டார்.

கல்லூரியில் மாணவ முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆசிரியர், அதிபர்களுடன் மிகவும் மரியாதையுடன் பழகும் தன்மை கொண்ட இவர் அவர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

1995 ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சையில் தோற்றிய இவர் அதில்ஏ ,2பி, ஸி பெறுபேறினைப் பெற்று பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

இதன் பின்னரும் பல்கலைக்கழகம் செல்வதற்கு முன்னரேயே ஸி. ஐ. எம். ஏ எனப்படும் கணக்காளர் பயிற்சி நெறியை கற்று அதில் 3 ஆவது நிலை வரை சித்தி எய்தியிருந்தார். எதிர்வரும் டிசம்பர் மாதம் அதன் 4 ஆம் நிலைக்கான பரீட்சைக்குத் தோற்றவிருந்தார்.

இவர் தொண்டு மனப்பான்மை கொண்ட இளைஞராக விளங்கினார். 1995 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் திகதி ஜி. சீ. ஈ உயர் தரப்பரீட்சை நடைபெற விருந்தது. பரீட்சை நடைபெற இருப்பதற்கு 3 வாரங்கள் இருக்கும் போது ''முன்னேறிப் பாய்ச்சல்'' இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்தனர் இவர்களில் பலர் சென். ஜோன்ஸ் கல்லூரியிலும் அடைக்கலம் புகுந்தனர். இவர்களைப் பார்த்த வரப்பிரகாஷ் அதிபரிடம் சென்று அனுமதி பெற்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்தார். பரீட்சைக்கு இன்னும் 20 நாள்களே இருக்கின்றபோதும் படிப்பினை மட்டுமே முக்கியப்படுத்தாமல் இன்னற்பட்டு இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு நேசக்கரம் நீட்டிய மாணவன் வரப்பிரகாஷ்.

சிரித்த முகத்துடன் எல்லோருடனும் அன்னியோன்யமாகப் பழகும் பண்பு கொண்ட வரப்பிரகாஷ் இன்று பகிடிவதைக்குபலிக்கடா ஆக்கப்பட்டுள்ளான்.

ஆனாலும் தனது இறப்பு மூலம் - தன்னையே தியாகம் செய்ததன் மூலம் - இன்று சிரேஷ்ட மாணவர்கள் மத்தியில் 'ராகிங்'கிற்கு எதிரான ஓர் அபிப்பிராயத்தை ஏற்படுத்தி தன்னைப்போல் இனி எந்த மாணவனும் பலியாகக்கூடாது என்ற செய்தியை விட்டுச் சென்றுள்ளான். இந்த வரப்பிரகாஷின் மரணம் மூலம் சிரேஷ்ட மாணவர்கள் சமூகம் திருந்துமா?

சந்திப்பு: மாவை. குகன்,
சி. சிவசங்கர், கே. சுதர்சன்

## மத்திய கல்லூரி மாணவ முதல்வர்

யாழ். மத்திய கல்லூரி மாணவ முதல்வர் கந்தையா ஜனார்த்தனன் இவ்வாறு கூறுகிறார்:-

இன்று எமது பிரதேசத்தைப் பொறுத்த வரையிலே, எமது மாணவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும், நெருக்கடிக்கும் இடையில் எவ்வளவோ கஷ்டப்பட்டே தமது கல்விக்கு வழி தேடுகிறார்கள்.

இன்றைய யுத்த சூழ்நிலையில் பல மாணவர்கள் தமது தாய், தந்தையர், உறவினர்களை இழந்த நிலையில் கல்வியைத் தொடர்வது யாவரும் அறிந்ததே.

அத்தகைய நிலையில், அந்த மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் போது அவர்களை பகிடிவதைக்கு உள்ளாக்கலாமா?

அறிமுகங்கள் தேவை தான். சிரேஷ்ட மாணவர்களுக்கு இந்த ராகிங் மூலமாகத்தான் கனிஷ்ட மாணவர்கள் கீழ்ப்படிவுடனும், மதிப்புடனும் இருக்க வேண்டும் என்பதல்ல. ஏன், அன்பான அரவணைப்பாலேயே அவர்களிடமிருந்து பெரும்மதிப்பையும், கௌரவத்தையும் பெறமுடியுமே.

நாங்கள் தமிழர்கள். எமக்கொரு பாரம்பரியம் உண்டு. வெள்ளையர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட எத்தனையோ நல்ல காரியங்களை விட்டு இத்தகைய கீழ்த்தரமான செயல்களை கடைப்பிடிப்பது கவலைக்குரியதாகும்.

இந்த ''ராகிங்''கை சட்டங்களோ, சமூகமோ முற்றுமுழுதாக தடை செய்ய முடியாது. இன்றைய மாணவர் சமூகமே இந்த 'ராகிங்'' கை நிறுத்த முடியும். ★

## பல்கலைக்கழக மாணவி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தில் பயிலும் மூன்றாம் ஆண்டு மாணவி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

''ராகிங்'' என்பது சிரேஷ்ட மாணவர்கள், புதிய மாணவர்கள் ஆகியோர் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்காகவே அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் சில மாணவர்கள் இதனை தவறாக புரிந்து கொண்டு புதிய மாணவர்களை உடல், உளரீதியாக பாதிப்படையச் செய்கின்றார்கள்.

உண்மையிலே இவ்வாறு எல்லை மீறிச் செல்லும் செயற்பாடு கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றே. அதற்காக பகிடிவதை முற்றாக நீக்கப்பட வேண்டும் என்றில்லை. ஓர் எல்லையுடன் பகிடிவதை செய்வது மாணவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கு வழி வகுக்கும்.

ஒரு சில மாணவர்களின் தவறான செயல்களால் பல்கலைக் கழக மாணவர்கள் அனைவரையும் குறை கூறுவதோ அல்லது பகிடிவதையை முற்றாகத் தடை செய்வதோ தேவையற்றது என நான் கருதுகின்றேன் — என்றார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### பியானோ

ஜோன் பிறின்ஸ்மிட் [John Brinsmead] பியானோ மூன்று பெடல்களையுடையது, கரும் பிறவுண் நிறமுடையது. 1995ஆம் ஆண்டு இடம் பெயர்வுக்குப் பின்னர் தவறிவிட்டது. தகவல் தெரிந்தவர்கள் யாழ். பஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள ஹட்டன் நஷனல் வங்கியுடன் நேரிலோ OR கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். (50803)

### விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் வீட்டுடனும் நல்ல தண்ணீர்க்கிணற்றுடனும் சேர்ந்த பிரயோசனங்கள் உள்ள 11 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. முழுமையாகவோ, அன்றி பகுதி பகுதியாகவோ வாங்கலாம். தொடர்பு: இராஜேஸ்வரி, இல: 21, கோட்டடி, சாவகச்சேரி. [சி/1896]

எனது நல்ல நிலையிலுள்ள ''Toshiba Refrigerator'' குளிர்சாதனப்பெட்டி மீள வாயு நிரப்பப்பட்டு விற்பனைக்குஉண்டு. பார்வையிடும் இடம்: 774, ஆஸ்பத்திரி வீதி, (ஸ்ரேசன் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். தொடர்பு: சு. சண்முகராசா (மதிப்பீட்டாளர்) 387, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [50904]

### தவறிவிட்டது

பளை வண்ணான் கேணியைச் சேர்ந்த சரவணன் சிவநாதன் என்பவரது 091561949 இலக்க முடைய விசேட அடையாள அட்டை கடந்த 21-10-97 ஆம் திகதி மீசாலைக்கும், கைதடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி சூரியபவான் உணவகத்தில் ஒப்படைக்கவும். ,சன்மானம் வழங்கப்படும். [சி/1933]

சுப்பிரமணியம் ஸ்ரீகாந்தன் என்பவரது முக்கிய ஆவணங்களுடன் கைப்பை (மண்ணிறம்)மூத்தவிநாயகர்கோயிலுக்கும், வல்வைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். திரு வீடியோ சென்றர், கரணவாய். [50891]

திருமதி ஜெகதீசன் இரட்ணவேணி என்பவரது தொழில் புரியும் அடையாள அட்டை 08-10-97 அன்று யாழ்ப்பாண நகர எல்லைக்குள் தவறிவிட்டது. ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை இல: 05, பழையபூங்கா வீதி, சுண்டுக்குளி எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும்.. [50901]

### O/L MATHS 97

32 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் கணித பாடத்தின் பெரும் பிரிவுகளான அட்சரகணிதம், கேத்திர கணிதம், எண் கணிதம், புதிய கணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளையும் 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்குஒழுங்கை, சுண்டுக்குளி. [50833]

### கணிதம் O/L

Credit பெறுபேறடைய ஒருமாதம் ஆரம்பத்திலிருந்து மீட்டல் வினாவிடை மூலமும் கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி (50886)

### றோணியோ

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகள், றோணியோ வேலைகள் சிறந்தமுறையில் செய்து கொள்ள பொஸ்கோ பாடசாலை முன்பாக, பொஸ்கோ றோணியோ ஸ்ரென்சில் கட்டிங் 10/-, இருபக்கறோணியோ30/-. [50878]

### சிங்கள வகுப்புக்கள்

சனி, ஞாயிறு நாள்களில் எழுத்து, பேச்சு பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. 1997 டிசம்பர் க. பொ. த. (சா/த) சிங்களம்(I,II) வினா விடைவகுப்பும் நடைபெறும். த. சகாதேவன், 46,பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (50804)


### வேலையாள் தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் வயோதிபப் பெண்ணை வீட்டில் இருந்து அல்லது பகலில் மட்டும் பராமரிக்கக்கூடிய (தனிமையில் வாழும் அல்லது வீட்டில் பிரச்சினைகள் இல்லாத) 50 - 60- க்கு இடைப்பட்ட வயதான பெண் மேற்பார்வையாளர் தேவை. பங்குக் குருவின் சிபார்சு விரும்பத்தக்கது. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: மே/பா இல. 661, உதயன், யாழ்ப்பாணம். (50899)

### சோதிடம்

எங்கும் பரபரப்பாக விற்பனையாகிறது. வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி? எல்லாராசிகளின் பூரணபலாபலன்கள் ரூபா 10 மட்டுமே. ஜோதிடர் V.A. சிவராஜா (வேலணை), 152 B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். [50881]

## 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை அழைப்பு



தோற்றம்: 10 — 04 — 1916

மறைவு: 03 — 10 — 1997

சுழிபுரம் மேற்கு

**அமரர் அம்பலவாணர் சுப்பிரமணியம் (கதிரவேலு)**

(இளைப்பாறிய நில அளவைத் திணைக்கள படவரைஞர், கதிர்வேலாயுத சுவாமி கோயில் சபைத்தலைவர்)

02-11-97 ஞாயிறு காலை 11 மணிக்கு எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டிய தலைவரது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (50864)

## 30 ஆவது பிறந்த நாளும் 6 ஆம் மாத நினைவஞ்சலியும்



விண்ணிலிருந்து நயினை மண்ணில்: 01 — 11 — 1967

பாரிசிலிருந்து பறந்த விண்ணில்: 06 — 05 — 1997

**காராளபிள்ளை விநாயகசிவம் (கண்ணன்)**

விநாயகசிவமே! உன் நினைவு விநாயகர் தான் நாயகமாய் என்றும் நடுவிருக்கும் எம் மனதில் உமது பிரிவால் துயருறும் — குடும்பத்தினர்.

தகவல்:
உரிமையாளர், விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்
நயினை - 6.

ரதிவாசம், 5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (சி-1902)

## கெரில்லா யுத்த....

(3 ஆம் பக்கத் தொடர்)

''இந்த இரண்டையும் இல்லாது செய்வதன் மூலமே இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று அரசாங்கம் நினைக்கின்றது.

''தீர்வுத் திட்டம், அதிகாரப் பரவலாக்கல் என்ற மகுடங்களின் கீழ் தமிழர் தாயகத்தை கூறுபோட்டுச் சிதைத்து, தமிழர் தேசியம் என்ற அரசியல் விருட்சத்தை அடியோடு சாய்க்க முயற்சிக்கின்றனர்.

''நில ஆக்கிரமிப்பில் ஒரு முன்னேற்றத்தைக் காட்டி விட்டு, தீர்வுப் பொதியின் சில விடயங்களை அது அவிழ்த்து விடுகின்றது. நில ஆக்கிரமிப்பு அதிகரிக்க, அதிகரிக்க, தமிழர் தேசியத்துக்கு விரோதமான அரசியல் விடயங்கள் தீர்வுத் திட்டத்தின் அம்சங்களாக அறிவிக்கப்படுகின்றன.

''பாலஸ்தீன தேசியத்தை அங்கீகரித்து ஐம்பது வருட யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க யூத தேசம் முயலும் இன்றைய சூழலில்—ஸ்கொட்லாந்து தேசத்தை அங்கீகரித்து தனது பரந்த மனப்பான்மையை பிரிட்டன் வெளிப்படுத்தியுள்ள இன்றைய 21 ஆம் நூற்றாண்டுச் சூழலில் — சந்திரிகா அரசாங்கமானது மகாவம்சம் எழுதப்பட்ட 13 ஆம் நூற்றாண்டுக்குச் செல்ல விரும்புகின்றது.

''கட்டடங்கள், சொத்துக்கள் அப்படியே இருக்க விட்டு உயிர்களைக் குடிக்கும் 'நியூட்ரன் குண்டை'ப் போல ஆள்களை விட்டுவிட்டு தமிழர் தேசியத்தை அழிக்க முயலும் சாதுரிய அரசியல் சூழ்ச்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

— இவ்வாறு அரசின் தீர்வுத் திட்டத்தை புலிகள் விமரிசித்திருக்கின்றார்கள்.

சுயநிர்ணய உரிமையுள்ள தமிழ்த் தேசிய இனம் என்பது அங்கீகரிக்கப்பட்டு, தம்மைத் தாமே நிர்வகிக்கக் கூடிய ஓர் ஆட்சி முறை தமிழர்களுக்கு கிட்டும் வரை எந்த இடைத் தீர்வையும் புலிகள் ஏற்கப் போவதில்லை என்பதும்—

எத்தகைய இராணுவ அழுத்தங்கள் கொடுக்கப்பட்டாலும் தமது முடிவில் — தீர்மானத்தில் — இருந்து (Commitment) புலிகள் மாறப் போவதில்லை என்பதும்—

புலிகளின் இந்த அறிவிப்பில் இருந்து மீண்டும் தெளிவாகியிருக்கின்றது. ★

## அசெம்லி ஒப் கோட்

(தேவசபை)

அராலி – காரைநகர் றோட், அராலி.

**விதியா? பிசாசின் பிடியா? வாழ்க்கைப் பிரச்சினையா?**

இயேசு இன்று விடுதலை தருகிறார்.

**ஆராதனை ஒழுங்குகள்:**

ஞாயிறு காலை 8-30 மணி
மாலை 4-30 மணி
வியாழன் மாலை 4–30 மணி
அற்புத இரவு

**2-11-97** விசேட மாலை ஆராதனை 3-00 மணிக்கு.

★ யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (50903)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி சர்மினி விஷ்ணுகாந்தன்**

மலர்வு: 06 - 06 - 1978

உதிர்வு: 07 - 09 - 1997

நெத்தியிலே குங்குமமும் நின்றொளிரும் புன்சிரிப்பும்
புத்தியிலே கூர்மைப் பொலிவழகும் — சித்திபெறும்
அஞ்சாத பேச்சும் அழகுதவழ் செயலெல்லாம்
நெஞ்சை யுருக்குகின்றதே.

பிரிவால் துயருறும்:
கணவன், மகன்,
தாய், தந்தை, சகோதரன்
மற்றும் குடும்பத்தினர்.

169/8, 1 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர். [50900]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சேவை ஆரம்பமாகும் போது

# தமிழிலேயே இனி தேசிய கீதம்

யாழ்ப்பாணம், நவ. 1

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை ஆரம்பமாகும் போது சிங்கள மொழியில் தேசிய கீதம் ஒலிபரப்பப்படுவது இன்று முதல் நிறுத்தப்படும். தமிழ் மொழி மூலமான தேசிய கீதம் தயாரிக்கப்படும் வரை வாத்திய இசையுடன் சேவை ஆரம்பிக்கப் படும்.

தபால், தொலைத் தொடர்பு, தகவற்துறை அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் தமிழ்கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா விடுத்த கோரிக்கையையடுத்தே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மின் தொழில் எலக்ரோனிக் நுட்ப மூடாக நடைபெறும் செய்தித் தொடர்புகள் சம்பந்தமாக ஆய்வொன்றை மேற்கொள்ள கூட்டப்பட்ட இக்கூட்டத்தில் டக்ளஸ் தேவானந்தாவிடுத்த பல கோரிக்கைகளுக்கு அமைச்சர் அங்கீகாரம் வழங்கினார்.

அவை வருமாறு.-

★ சிங்கள மொழியில் நடைபெறும் 'ஜெய மங்கள கத்தா' என்னும் நிகழ்ச்சி விரைவில் தமிழிலும் நடைபெறும்.

★ இலக்கணப்பிழையற்ற தெளிவான உச்சரிப்பு செய்யக்கூடிய அறிவிப்பாளர்கள் மூலம் செய்திகள் வாசிக்கப் படும்.

★ தரமான இலக்கணத் தமிழை உச்சரிக்கக் கூடிய அறிவிப்பாளர்கள் 1-1-98 முதல் நியமிக்கப்படுவர். தற்போதுள்ள அறிவிப்பாளர்களுக்கு இலக்கணப்பிழை அற்ற முறையில் தமிழை உச்சரிக்க பயிற்சி வழங்கப்படும்.

★ செய்திகள் சிங்கள மொழியில் இருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப் படும் பொழுது எவ்வித பிழைகளும் இன்றி சரியான மொழி பெயர்ப்புக்கு உட்படுத்தப் படும்.

இந்த ஆய்வுக்குழுக் கூட்டத்தில், வவுனியா ஈரப் பெரியகுளத்தில் செயற்பட்டு வரும் இலங்கை வானொலியின் உப சேவை அஞ்சல் நிலையத்தின் தேசிய சேவை ஒலிபரப்பை யாழ். குடாநாடுவரை விஸ்தரித்ததற்கு அமைச்சருக்கு டக்ளஸ் தேவானந்தா நன்றி தெரிவித்தார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபன நிகழ்ச்சிகளில் விசேட ஒளிபரப்புக்களை நடத்துவதற்காக தமிழ் செய்தியை ரத்துச் செய்யும் நடவடிக்கை சுட்டிக்காட்டப்பட்டபோது இவ்வாறான சம்பவங்கள் எதிர் வரும் காலங்களில் நடைபெறாது என அமைச்சர் உறுதி அளித்தார். (இ-3)

## றிச்சர்ட் டீ சொய்ஸா கொலை:

# மூன்று சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்

கொழும்பு, நவ. 1

பிரபல பத்திரிகையாளரான றிச்சர்ட் டீ சொய்ஸா படுகொலை தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நேற்று நடந்த அடையாள அணிவகுப்பில் றிச்சர்ட்டீ. சொய்ஸாவின் வீட்டில் முன்பு வேலை செய்த கருணதாஸா என்பவர் இவர்களை அடையாளம் காட்டினார்.

பொலீஸ் இன்ஸ்பெக்டர் தேவசுரேந்திர, சார்ஜன்ட் சரத்சந்திர. முன்னாள் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் லால் ரஞ்சகொட ஆகியோரே அடையாளம் காணப்பட்டவர்கள் ஆவர்.

இவர்களை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதிவான் ஹேமதாஸ புஞ்சிஹேவ உத்தரவிட்டார். (இ-3-21)

# பல்கலைக்கழக விசாரணைகுழு சமர்ப்பித்த மனு நிராகரிப்பு!

கொழும்பு, நவ.1

பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல்பீட மாணவனான செ. வரப்பிரகாஷின் மரணம் தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் வாக்கு மூலங்களைப் பெற அனுமதி தருமாறு பல்கலைக் கழக விசாரணைக்குழு சமர்ப்பித்த மனுவைகண்டிமாஜிஸ்திரேட் திருமதி டி.சி. பிரின்சி ஆராய்ச்சி நிராகரித்துவிட்டார்.

பேராதனைப் பல்கலைக் கழகபேரவை, சிரேஷ்ட பேராசிரியர் ஒருவரின் தலைமையில் இந்த விசாரணைக் குழுவை நியமித்தது தெரிந்ததே.

சட்டத்தரணி எச். எம். காமினி ஹேரத் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை நிராகரித்த நீதிவான், எதிர்வரும் 4 ஆம் திகதி சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர் என்றும் அன்றைய தினம் இந்த மனுவை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டார். (இ-21-3)

## விண்ணப்ப முடிவு திகதி நவ. 7

யாழ்ப்பாணம், நவ. 1

ஆசிரியர் பயிற்சிக்குரிய விண்ணப்பப் படிவங்கள், மற்றும் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் போன்றவற்றை பலாலி ஆசிரிய கலாசாலையில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெறாத பட்டதாரி அல்லாத ஆசிரியர்கள் அனைவரிடமிருந்தும் கோரப்படும் இந்த விண்ணப்பத்தின் முடிவு திகதி நவம்பர் மாதம் 7 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-ரி)

## கண்ணீர் அஞ்சலி

### செல்வவிநாயகப்பிரகாசம் வரப்பிரகாஷ்

(பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் மாணவன்)

அறிவியல் பயின்று நாட்டுக்கு
அருந்தொண்டாற்றுவாய்
எனக்காத்திருந்தோம்.
விதிசதிசெய்துவிட்டதே!
நின் பிரிவால் வாடும் பெற்றோர் உறவினருடன்
கவலையிற் பங்குகொள்கிறோம்.

ஆத்மா சாந்திபெற அவன் தாள்போற்றுகின்றோம்.

அடியார்கள்,

**அரசகேசரிப்பிள்ளையார் கோயில், நீர்வேலி.**

(சி/ 1938)

# யாழ். இந்து மாணவர் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 1

ராகிங் சம்பவம் தொடர்பாக 'கண்டிக்கிறோம்' என்ற தலைப்பில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் சார்பில் துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது:

அதன் விவரம் வருமாறு:-

பல கலைகளையும் கற்பது தான் பல்கலைக்கழகம் என்ற கூற்றினை நிருபிப்பதற்கு கொலை செய்யும்கலையையும் திறம்படவே கற்றுள்ளார்கள் பல்கலைக்கழக மாணவர்கள். ஆம், வரப்பிரகாஷினைக் கொடூரமாகக் கொலை புரிந்தவர்கள் பல்கலைக்கழக மாணவர்களே அன்றி பாடசாலை மாணவர்கள் அல்லர்.

எந்த ஒரு பல்கலைக்கழக மாணவரையும் "நீர் என்ன செய்கின்றீர் என்று கேட்டால்" "I am a University Student" என்று பெருமையான பதில்தான் வரும். மாறாக எந்தவொரு பல்கலைக்கழக மாணவனும் தான் படித்த பாடசாலையின் பழைய மாணவன் என்று கூறிக் கொள்வதில்லை. ஆகவே பெருமைக்கு மட்டும் பல்கலைக்கழகம்; கொலை புரிந்தால் பாடசாலை மாணவன். இது என்ன நீதி? நிலைமையைப் புரிந்துகொள்ளாத பத்திரிகைகளும், நண்பர்களும் எந்தப் பாடசாலையையும் சாடுவது ஏற்புடையதல்ல.

தெளிவாகச் சிந்தித்தோம் என்றால் கொலைக்கான காரணமென்ன? சமுதாயத்தில் ஒரு புற்றுநோய் வளர்ந்துள்ளது. இது ஆரம்பத்தில் புரிந்துணர்வு, அன்புத் தொல்லை என்ற பதங்களால் வரையறுக்கப்பட்டது. இதனை பல்கலைக்கழகத்தின் பெரும்பான்மையான சமுதாயம் ஏற்றுக்கொண்டது.

இதன் வளர்ச்சி பகிடிவதை, பயமுறுத்தல், அடிமைத்தனம் என்ற நிலைக்கு வர பல்கலைக்கழக சமுதாயம் இதற்கெதிரான சட்ட நடவடிக்கைகளை எழுத்தில் மட்டும் பாதுகாத்து வைத்திருந்தது. நோய் வளர்ந்து இச்சை தீர்க்கும் கருவி, பாலியல் வதை என்ற நிலை வர சமுதாயம் வாள் தூக்கத் தொடங்கியது. இதன் எதிரொலி பல்கலைக்கழக நிர்வாகத்தினர் பனழய சட்டங்களை தூசுதட்டி வைத்தனர். தற்போது இந்நோய் முற்றி கொலைவதை என்ற வடிவம் பெற்றுள்ளது.

சமயப் பெரியார்களே! பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! மற்றும் கல்விமான்களே! இன்னும் இந்தச் சமுதாயப் புற்றுநோயை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்குத் தோன்றவில்லையா? மாற்றா விட்டாலும் கொடுமைக்கெதிராகக் குரலாவது கொடுக்கலாமல்லவா! புத்திஜீவிகளை எதிர்க்க மனம் விரும்பவில்லையா? பயமா?

எமது மதிப்புக்குரிய பல்கலைக் கழக அண்ணர்களே! உயிர்ப்பலி எடுத்துத் தான் உங்கள் புரிந்துணர்வை ஏற்படுத்தப் போகின்றீர்களா? சந்தோஷம்; நன்றாகப் புரிந்துணர்வை ஏற்படுத்துங்கள். எதிர்காலத்தில் நீங்கள் நடந்த பாதையே உங்களைக் கேலி செய்யும்; அப்போது உணருங்கள். தற்போது புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்.

பல்கலைக்கழக மாணவரது பகிடிவதையால் இன்று பல்வேறு இளம் மாணவர்கள் பல்வேறுபட்ட தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். அதன் உச்சக்கட்டமாக அண்மையில் இடம்பெற்ற சகோதரர் வரப்பிரகாஷ் அவர்களது பிரிவு அமைந்து விட்டது. கற்றறிந்த அறிவிலிகளின் அற்ப திருப்திக்காக இன்றோர் அற்புத உயிர் பிரிந்து விட்டது. இதற்குக் காரணமானவர்கள் நிச்சயமாக மனித குணம் படைத்தவர்களே அல்லர்! அவர்கள் எவராக இருப்பினும் அவர்களுக்கு எமது வன்மையான உக்கிரமானகண்டனங்களைத் தெரிவிக்கின்றோம்.

இனிமேலாவது இப்படிப்பட்ட ஈனச்செயல் நிகழாதிருக்க, ஒரு சிலரது கயமைத்தனத்தால் பிறர் கௌரவம் பாதிக்காதிருக்க இந்த ஈனமான பகிடிவதை அழிக்கப்பட வேண்டும். அதற்கு எமது பூரண ஒத்துழைப்பு எப்போதும் இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் — என்றுள்ளது.

### கருத்துக்கூற அதிபர் மறுப்பு

'ராகிங்' தொடர்பாக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் எஸ். சிறிக்குமாரைத் தொடர்பு கொண்டபோது அவர் கருத்துக்கூற மறுத்து விட்டார்.

இதுவரை நடந்த 'ராகிங்' நடவடிக்கையின் பாதிப்புக் குறித்து அவரிடம் கேட்டபோது, 'இது தொடர்பாக நான் எந்தக் கருத்தையும் கூறவிரும்பவில்லை' என்றார் அவர்.

எதிர்காலத்தில் ராகிங்கைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் எனக் கருதுகிறீர்கள் என்று கேட்டதற்கும் —

'என்னால் எந்தப் பதிலும் கூறமுடியாது' என்று மீண்டும் அவர் பதில் அளித்தார்.

எனினும் கல்லூரியின் சிரேஷ்ட மாணவ முதல்வன் சோதிலிங்கம் செந்தூரான் திறந்த மனதுடன் கருத்துக்களை வெளியிட்டார். அவை 5 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளன.

## நாளை

**ஐப்பசி 16**

ஞாயிற்றுக்கிழமை

திதி: துதியை

பிற்பகல் 5.31 வரை.

நட்சத்திரம்: அனுஷம்

வைகறை 5 55 வரை

சுபநேரம்: 9.04-10.34

ராகுகாலம்: 4.34-6.04

(... பழைய நேரப்படி)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அரும்பிலே வாடிவிட்ட அழியாநினைவுகள்



### மழலை கந்தசாமி சப்தமீரா

அவர்கள்

அரும்பாக: 17-02-1995

வாடியது: 02-10-1997

திதி: அபரபக்கப் பிரதமை 1-11-97

முத்து முத்து மகளே
மூன்றாம் பிறையாக முகிழ்த்திருந்தாய்!
வருடங்கள் மூன்றை நீ
முழுதாக முடிக்கவில்லை
மலர்ந்து நீ மணம் வீசும்
நன்னாளைப் பார்த்திருந்த வேளை
மலராமல் வாடிவிட்ட
உன்நினைவு வாட வைக்குதம்மா
எம் உள்ளமதை
திங்களொன்று கழிந்தது - ஆனால்
கழியவில்லை உன்நினைவு
உன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எம் மகளின் இறுதிக்கிரியைகளிலும் மற்றும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்கு கொண்ட உற்றார், உறவினர், மக்கள் வங்கி ஊழியர்கள் அனைவருக்கும் எம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அம்மா, அப்பா, அக்கா, உறவினர்.

புற்றளை, புலோலி தெற்கு,
புலோலி.

(50916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணமடைய முன் வரப்பிரகாஷ் மூவரை அடையாளம் காட்டினார்

கொழும்பு, நவ. 1

பேராதனை பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவன் செ. வரப்பிரகாஷ் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சமயம் தம்மை ராகிங் செய்த மூவரை புகைப்படம் மூலம் அடையாளம் காட்டினார் என்ற தகவல் தற்பொழுது வெளி வந்துள்ளது.

நேற்று நடைபெற்ற மரண விசாரணையில் சாட்சியமளித்த விரிவுரையாளர் சுமண பண்டார வீரக்கோன் அளித்த சாட்சியத்தில் இத்தகவல் வெளியாகியுள்ளது.

மேற்படி மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அடையாளம் காட்டுவதற்காக 150 புகைப்படங்கள் அவரிடம் காட்டப்பட்டன.

அதில் தலைமறைவாகியுள்ள சதீஸ்கரன் உட்பட விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள குமரன், திவாகரன் ஆகியோர் அடையாளம் காட்டப்பட்டனர் என்றும் சாட்சி தெரிவித்தார்.

# 10 ஆம் திகதி முதல் வரப்பிரகாஷ் வாரம்

கண்டி, நவ. 1

எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் ''வரப்பிரகாஷ் வாரம்'' சகல பல்கலைக்கழகங்களிலும் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது என்று பேராதனைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் லெஸ்ஸி குணவர்த்தன உதயனுக்குத் தெரிவித்தார்.

சகல பல்கலைக்கழகங்களின் மாணவர் அமைப்புக்களும், தொழிற் சங்கங்களும் இதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன என்றும் அவர் கூறினார்.

''இந்த மரணம் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள ஒழுங்காற்று நடவடிக்கைக் குழு 3 ஆவது நாளாக நேற்றும் விசாரணைகளை நடத்தியது. ஆனால் விசாரணை தொடர்பான தகவல்களை வெளியிட முடியாது'' என்றும் அவர் தெரிவித்தார்.

இதே நேரம் —

இந்த மரணம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் பொலீஸார் தகவல் வெளியிடுகையில்,

இச்சம்பவத்தின் சூத்திரதாரியாக சந்தேகிக்கும் சதீஸ்கரன் வவுனியாவுக்குச் சென்றுள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்து, இவரைக் கைது செய்ய வவுனியா பொலீஸாருடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது என்றும், இச் சம்பவம் தொடர்பாக இதுவரை 20 பேரின் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தனர். (இ-21-3)

# மதுவரி உத்தியோகத்தர் தெரிவுப் பரீட்சை நாளை

யாழ்ப்பாணம், நவ. 1

மதுவரி உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை நாளை காலை 9 மணி முதல் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

தேசிய கல்வி நிறுவகத்தின் அநுசரணையுடன் மதுவரித் திணைக்களத்தால் இந்தப் பரீட்சை நடத்தப்படுகிறது.

இப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் விண்ணப்பம் அனுப்பிய தபால் அலுவலக பற்றுச் சீட்டை அன்று காலை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பித்து அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தேசிய கல்வி நிறுவக நிபுணத்துவ ஆலோசகர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (ஐ-3)

## மிதிவெடிக்கு...

[முதலாம் பக்கத் தொடர்]

விடத்திலேயே உயிரிழந்தார்.

கோப்பாய் வடக்கில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கதிரவேலு ஸ்ரீஸ்காந்தராசா [வயது 32] என்பவரே மரணமானவராவார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் உறவினர்களால் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

கோப்பாய் பகுதியில் இதுவரை பத்து மிதிவெடிச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. மூவர் மரணமாகி உள்ளனர். (இ-15)

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளில் ஏற்கனவே அரைவாசி பூர்த்தியடைந்து விட்டது. இறுதிக் கட்டமே இனி ஆரம்பமாகவிருக்கிறது.

வடபகுதியில் கடந்த 14 வருடங்களாக உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவில்லை. இந்தத் தேர்தல்களை பெப்ரவரி மாதமளவில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் வசம் இருந்த பகுதிகள் பல இப்போது கைப்பற்றப்பட்டுவிட்டன. இவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தினர் தேவைப்படுகின்றார்கள்.

இதனால்தான் யாழ்ப்பாணத்துக்கான 76 கிலோ மீற்றர் நெடுஞ்சாலையைத் திறக்கும் வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை மிகவும் மெதுவாக மேற்கொள்ளப்படுகிறது.

அடுத்த வருடத்தில் கடற்படையை பாரிய அளவில் நவீனமயமாக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஆனால் ஏனைய இரு படைகளையும் தரம் உயர்த்தும் திட்டம் தற்போதைக்குக் கிடையாது.

இப்படி பதில் பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-3-21)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்)

விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சந்தேக நபர்களான சூரிய ஆராச்சிகே சமன்குமார, குருனகே அதுலகுமார பெரேரா ஆகிய இருவரும் தலா 10 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டனர். (இ-ரி)

## வாகனம்...

(முதலாம் பக்கத் தொடர்)

சிக்கினர்.

கல்முனை கல்வி வலய இசை நடன சேவைக்கால பயிற்சி ஆலோசகர் வசந்தி சபாநாதன் (வயது 38), அவரது மகன் சிரோனி (வயது 13), தொழில் நுட்ப உத்தியோகத்தரும் வாகனத்தைச் செலுத்தியவருமான நல்லையா புனிதலிங்கம் (வயது 40) ஆகியோரே இறந்தவர்கள் ஆவர்.

சிவகுரு சபாநாதன் (வயது 45), அவரது மகள் சிவானி (வயது 11), சகோதரி ரவீந்திரநாதன் ஜெயகுமாரி (வயது 37), மைத்துனர் அன்டன் ரவீந்திரநாதன் (வயது 39) ஆகியோர் காயமடைந்து வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (இ 21)

## கதிர்காமம்...

[முதலாம் பக்கத் தொடர்]

அண்மையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்களான மகிந்த ராஜபக்ச, ஜகத் புஷ்பகுமார ஆகியோர் விடுத்த கோரிக்கையையடுத்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

கதிர்காமம் பகுதியில் உள்ள பஸ் டிப்போ விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களால் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றத்தையடுத்தே இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. (இ-164-3)

# சட்ட விரோதமாக வேம்பு தறித்தாராம்

யாழ்ப்பாணம், நவ. 1

சட்டவிரோதமாக வேப்பமரம் தறித்துக் கடத்திய குற்றத்தின் பேரில் நமசிவாயம் யோகநாதன், சின்னத்தம்பி சிவராஜா, முருகேசு தெய்வேந்திரம், செல்லத்துரை தெய்வேந்திரம் ஆகிய நால்வரும் நேற்று யாழ். நீதிமன்றத்தில் அச்சுவேலி பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ. என். எஸ். இராமச்சந்திரன் முன்னிலையில் வழக்கு எடுக்கப்பட்டபோது விசாரணையின் பின்பு இவர்கள் ரூபா 5 ஆயிரம் ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (இ-5)

# தீபாவளி கலை விழா

யாழ்ப்பாணம், நவ. 1

கலை கலாசார முன்னேற்றக் கழகம் நடத்தும் தீபாவளி கலை விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் கழகத் தலைவர் க. நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

என். கே. பத்மநாதன் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும் விழாவில் கலை நிகழ்ச்சிகளும் ''இன்னிசை ராகங்கள்'' இசை நிகழ்ச்சியும் இடம் பெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் கலந்து கொள்வார். (ஐ-3)

# மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம், நவ. 1

விளையாட்டு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறும் என்று மாகாண விளையாட்டுத் துறை அதிகாரி நேற்று அறிவித்துள்ளார். (இ-3)

## குடாநாட்டுக்கு...

[முதலாம் பக்கத் தொடர்]

மிதிவெடிகள் மற்றும் கண்ணிகளை அகற்றி அப்புறப்படுத்தப் போதிய வசதிகள் தம்மிடம் இல்லை என்று பாதுகாப்புப்படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் இணையப் பிரதிநிதிகள் ஐ. நா. அதிகாரியிடம் எடுத்துக் கூறினர்.

அதற்குப் பதிலளித்த ஐ. நா. அதிகாரி —

குடாநாட்டில் மிதிவெடிகளின் நிலைமை குறித்து தாம் அறிந்திருந்ததைவிடவும் இங்கே நேரில் வந்து பார்த்ததன் மூலம் அதன் பாதிப்பை நன்கு உணர முடிந்ததாகத் தெரிவித்தார்.

விரைவில் இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுத்து வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் இன்னும் 10 வார காலத்துக்குள் இங்குள்ள கண்ணிகள், மிதிவெடிகளை அகற்ற ஆவன செய்வதாகவும் அவர் உறுதியளித்தார். (ஐ-3)

# மாணவருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 1

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி, லியோ கழகத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி திங்கள் முதல், 7ஆம் திகதி வெள்ளி வரை தம்பர் மண்டபத்தில், காலை 9 மணி முதல் 2 மணி வரை இக்கருத்தரங்கு நடைபெறும்

கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்கள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால், கல்விப்பணிப்பாளரின் அனுமதியுடன் கருத்தரங்கு நடத்தப்படும்.

இக் கருத்தரங்கில் பங்குபற்றும் யாழ். கோட்ட பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்வதன் மூலம் அச்சடிக்கப்பட்ட குறிப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-ரி)

# ஜி. சீ. ஈ. பயிற்சி பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ். கல்வி வலயம் ஒன்று அலுவலகத்தின் அனுசரணையுடன் கணித, விஞ்ஞான மூலவள நிலையம் ஏற்பாடு செய்துள்ள ஜி. சீ. ஈ. (சாதாரண) இரண்டாவது பயிற்சிப் பரீட்சை எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் வலயம் ஒன்றுக்கு உட்பட்ட சகல பாடசாலைகளிலும் நடைபெறவிருக்கிறது.

கணித, விஞ்ஞான பாடங்களின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் இப்பரீட்சைக்கு மாணவர்களை சமுகமளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-3)

# இன்று

வண்ணை செந்தில் கதிர்வேலாயுதசுவாமி கோவிலில் (ஸ்ரீகதிரேசன் கோயில்) இன்று சனிக்கிழமை முதல் கந்தசஷ்டி திருவிழா நடைபெறும். திருவிழா நாள்களில் தினமும் பிற்பகல் 4.15 மணிக்கு ''முருகன் பெருமை'' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா சொற்பொழிவாற்றுவார். (ஐ)

## தப்பி...

(முதலாம் பக்கத் தொடர்)

தப்பி ஓடியோரைத் தேடிக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ)


சிறி நதியா வாடிக்கையாளரின் திரிசங்கு நிலையைப் போக்க...

இன்று மங்களகரமான திறப்புவிழா

நிகழும் ஈசுர வருடம் ஐப்பசித்திங்கள் 15 ஆம் திகதி 01-11-1997 சனிக்கிழமை காலை 5-30 மணிதொடக்கம் 8-30 மணிவரையுள்ள சுபவேளையில்

சிறி நதியா நகைமாட ஸ்தாபனத்தாரால் புதிகாக ஆரம்பிக்கப்பட இருக்கும்

சிறி ரூபா நகை மாடம்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைக்க இருப்பதால் அன்பர்கள், நண்பர்கள்; வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

131 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/1936)

சிறி ரூபா நகைமாடம், சிறி நதியா நகைமாட

உரிமையாளர்: நடராஜா சத்தியரூபன்




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணி மனையில் 01-11-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சீவி
# சஞ்சிகை

01 - 11 - 1997 சனிக்கிழமை

அழகுக்கு அழகு தரும்
அழகு சாதனப் பொருள்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

ஜெயா அழகுமாடம்
(JEYA FANCY)

மொத்தமாகப் பெற்றிட :
127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சில்லறையாகப் பெற்றிட:
149, 168, நவீனசந்தை,
(முன்னைய HAPPY TEX)
யாழ்ப்பாணம். (சி/ 1913)

## கருத்துக் கலசம்

மயூரா

### கலை பேணல்

நாதஸ்வரக் கலை, மக்களை மகிழ்விக்கும் கலையாக மட்டுமன்றி அறிவுக் கலையாகவும் மாற்றம் அடைய வேண்டும். பல்கலைக்கழக மட்டத்தில் இசைத்துறையில் நாதஸ்வரத்தையும் ஒரு பாடமாகக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

நாதஸ்வரக் கலைஞர் ஒருவருக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் மேற்கண்ட கருத்து முன்வைக்கப்பட்டிருக்கிறது.

நாதஸ்வரக் கலை தமிழ் மக்களின் ஒரு தனித்துவமான இசைக் கலை. குரு—சிஷ்ய முறையில் பயிலப்படும் இக்கலை போதிய வளர்ச்சி இன்றிக் கிடப்பது கவலைக்கு உரியது. தமிழ் மக்களின் சகல விழாக்களிலும், வைபவங்களிலும் மங்கள இசையை மாந்த வைக்கும் தமிழரின் சொந்தக் கலை நொந்து போய்க் கிடக்கிறது.

அதனைப் பல்கலைக்கழகப் பாடத்துறையில் சேர்ப்பதற்கு வகை செய்தால் மட்டும் வளர்த்து விட முடியாது. பாடசாலை மட்டத்தில், கலைக் கழகங்கள் மட்டத்தில் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தோடு குரு—சிஷ்ய முறையைப் பேணவும் ஊக்கமளிக்கும் திட்டங்கள் தேவை.

கிராமங்களே கலைகளின் பிறப்பிடங்கள். கிராம மக்களே, அவற்றின் சிருஷ்டி கர்த்தாக்கள். ஆனால் எமது சொந்தக் கிராமக் கலைகள் பலவும் இப்போது அருகி விட்டன.

நாட்டுக்கூத்து என்ற தமிழர்களின் தொன்மைக் கலை,— முத்தமிழும் முத்துக்களாகச் சேர்ந்து மக்களை மகிழ்வித்த கலை— கிராமத்து மக்களின் அபிமானத்துக்குரிய கலை— இப்போது அருகிக் கொண்டு வருகிறது.

நாட்டுக்கூத்துக் கலைஞன் ஒருவன் தனது சொந்தப் பெயரால் அன்றி, அவன் நடித்த கதாபாத்திரத்தின் பெயராலேயே அழைக்கப்படும் அளவுக்கு நாட்டுக் கூத்து மக்கள் கலையாக மிளிர்ந்த காலம் ஒன்று இருந்தது.

வயல் வேலையின் போது பாடப்படும் உழவர் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், கும்மிப் பாடல்கள், கோலாட்டப் பாடல்கள், படகோட்டிப் பாடல்கள், காவடிச்சிந்துகள், கரகாட்டப் பாடல்கள் மற்றும் நாட்டார் பாடல்கள் இப்போது மறக்கப்பட்டுவிட்டன. சொற்சுவை, பொருள்சுவை கலந்து, தித்திக்கும் இசையால் மகிழ்வூட்டும் பாடல்களை இப்போது கேட்கமுடியாது.

தமிழகத்தில் இந்த இசைக் கலைகள் ஏதோ ஒரு வடிவத்தில் சினிமாப் பாடல்களில் புகுந்து விட்டன.

இங்கும் எமது தொன்மையான இசை மரபுகளை மீட்டுப் பேணி வளர்த்துப் புதிய சந்ததியினருக்கு அறிமுகப்படுத்த வேண்டிய காலத்தின் தேவை உண்டு.

கலைகளையும் பண்பாட்டையும் இழந்து விட்டால், நாம் தனித்துவமான இனம் என்று மார்பு தட்டமுடியுமா?

# குறவன் வைத்த கொக்குக் குழம்பு உண்டு மகிழ்ந்த தவசீலர்கள்

சைவ மக்களின் விரதங்களிலே மகிமை பொருந்திய விரதமான கந்தசஷ்டி விரதம் இன்று முதல் ஆறு நாள்களுக்கு அனுஷ்டிக்கப்படவுள்ளது. அதனை ஒட்டி கந்த சஷ்டியின் மகிமையைக் கூறும் இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

ஒரு குறவன், இலஞ்சி என்னும் ஊரைச் சேர்ந்தவன்; செந்நிறத்தவன்.

அவன் முதன் முதலாக வேட்டைக்குப் புறப்பட்டான். ஆறுநாள்கள் வேட்டையாடினான் ஒரு கொக்குத்தான் வேட்டையில் அவனுக்குக் கிட்டியது. அகப்பட்ட அந்தக் கொக்கை அவித்தான்; ஒரு சட்டியில் குழம்பு வவத்தான்.

ஆஹா! இந்தக் கொக்குக் குழம்புக்குத்தான் எத்தனை பேர் நான், நீ என்றுபோட்டியிட்டு வந்து ஏற்றனர்!

அப்படிப் போட்டி போட்டவர்கள் யார் தெரியுமா?

முதலாவதாக வந்தவர்கள் வேதமோதும்பிராமணர்கள்.

இவர்கள் கொக்குக் குழம்பை ஏற்கலாமா?

அடுத்தபடி சைவர்கள். சைவம் என்றாலேயே உயிர்க் கொலை இல்லாதது என்பதல்லவா பொருள்?

அடுத்து, முழு அஹிம்சை விரதத்தையே மேற்கொண்ட தவமுனிவர்கள், எந்த உயிருக்கும் எந்த நிலையிலும் ஊறு செய்வதையே ஒப்புக் கொள்ளாதவர்கள் இவர்கள். என்ன ஆச்சரியம்! தவப்பேறு படைத்த முனிவர்களும் அல்லவா இந்தக் கொக்குக் குழம்பை விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டார்கள்.

வேதப் பிராமணர்களையும், சைவர்களையும், தவப்பேறா முனிவர்களையும் இழிப்பதுபோல எழுதப்பட்ட ஒரு பாடல் இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுகிறது. "திருக்குற்றாலக் குறவஞ்சி" என்ற அரிய நூலில் உள்ள ஓர் அருமையான பாடல் இது.

'மீறும் இலஞ்சிக்குறத்தியைக்
கொண்டசெவ்
வேட்குறவன் முதல்
வேட்டைக்கும் போனநாள்
ஆறுநாட் கூடியொரு
கொக்குப்பட்டது
அகப்பட்ட [illegible]
அவித்தொரு [illegible]
சாறாக வைத்தபின் வேதப்
பிராமணர்
தாமுங்கொண்டார் சைவர்
தாமுங்கொண்டார் தவப்
பேறாமுனிவரும் ஏற்றுக்
கொண்டார் இதைப்
பிக்கு சொல்லாமல்
கொக்குப் படுக்கவே
கண்ணி கொண்டு வாடா
குறவா
கண்ணி கொண்டு வாடா.

கட்டுரைக்கும், பாடலுக்கும் பொருத்தம் சரியாகத்தானே இருக்கிறது!

பறவை வேட்டையாடக் கண்ணியைக் கொண்டுவருமாறு ஒரு வேடன் மற்றொரு வேடனிடம் கூறுவதுபோல பாடல் அமைந்திருக்கிறது.

இந்தப் பாடலுக்கு இதுதான் பொருளா? வேறு உட்பொருள் பாடலில் இருக்கின்றதா? அதை அறிந்து கொண்டால் குறவன் வைத்த கொக்குக் குழம்பை நாமும் விருப்புடன் கொள்ளலாம்.

மீறும் இலஞ்சி என்பது வனங்கள் மிகுந்த இலஞ்சி என்ற முருகன் கோயில் கொண்ட தலமாகும். இத்தலத்திலே கோயில்கொண்டவன் - வள்ளியெனும் குறத்தியின் மணாளனும் செவ்வேள் எனும் முருகப்பெருமானும் [illegible]

அவர் தன் தந்தை சிவபிரானால் ஆணையிடப்பெற்று சூரபத்மனாதியராகிய அரக்கரை அழித்து, தேவர்களைக் காக்கும் நிமித்தம் யுத்தத்திற்குப் புறப்பட்டார்.

அசுரர்களுக்கும், தேவசேனாதிபதியான முருகனுக்கும் பத்து நாள்கள் போர் நடந்ததாகப் புராணங்கள் கூறுமாயின் முருகப்பெருமான் நேரிடையாகப் போரிட்டது ஆறு நாள்களே ஆகும். எனவே "முதல் வேட்டைக்குப் போன ஆறுநாள் கூடி" என்றார். அவர் போரிட்ட ஆறு நாள்களில் ஆறாவது நாள் என்பது ஐப்பசி மாதச் சுக்கில பட்சத்து ஆறாவது நாளாகிய 'ஷஷ்டி' எனப் படும்.

இந்த ஆறாவது நாள் யுத்த முடிவில் அவரது கைவேலால் 'பட்டது' எது?

'மாமரம்' உருவில் நின்ற சூரபத்மனே, 'கொக்கு' என்ற சொல் 'மாமரம்' என்ற பொருளையும் தரும்.

எனவே அதனை 'ஒரு கொக்குப் பட்டது' என்று வேடன் வாக்கில் வைத்துக் கூறினார் கவி.

அங்ஙனம் அகப்பட்ட (கொக்கு) மாமரமாகிய சூரபத்மனை—அவன் இறவா வரம் பெற்றவனாகையால் தனது அருட் கண்ணோட்டத்தால்—அவனது ஆணவத்தை "அவித்தார்" இங்கு "அவித்தார்" என்ற சொல் "போக்குதல்" 'நீக்குதல்' என்ற பொருளில் வந்தது.

இங்ஙனம் சூரனே ஆணவம் நீக்கி, ஆட்கொண்ட நாள் ஷஷ்டி என்ற ஆறாவது திதியாகும். 'ஷஷ்டி' என்ற வடசொல் தமிழில் 'சட்டி' என வரும்.

ஆகவே கொக்காக (மாமரமாக) நின்ற சூரனின் ஆணவத்தை அழித்தலை 'சட்டியால் சாறாகவைத்தபின்' என்றார். 'சாறு' என்ற சொல் 'குழம்பு என்ற பொருளைத் தருவதோடு 'திருவிழா' என்ற பொருளையும் தரும் எனவே இது ஐப்பசி மாதச் சுக்கில பட்சத்து ஆறாவது நாளில் அமையும் கந்தஷஷ்டித் திருவிழாவைக் குறிப்பது கண்டு இன்புறுக.

இனி, கந்த ஷஷ்டித் திருவிழாவை 'வேதப் பிராமணர் தாமுங் கொண்டார்' சைவர் தாமுங் கொண்டார், தவப்பேறா முனிவரும் ஏற்றுக் கொண்டார் என்று கவி கூறுவதில் ஏதேனும் தடையுள்ளதோ?

குறவன் வைத்த கொக்குக் குழம்பு என்பது கந்த ஷஷ்டித் திருவிழாவே என்பதை அறிந்தோமாதலின் நாமும் அந்தக் குழம்பை விரும்பி ஏற்றுச்சுவைப்போம்! ★



## திருமுருகன் அருள் பெறுவோம்

பெருகிய துன்பம் நீங்கிப்
பேரின்பம் உறுதற் கென்றும்
முருகனின் பாதம் போற்றி
விரதம் நாம் அனுட்டிப்போமே!

சீரிய அனைத்தும் தோன்றும்
சிந்தையில் தெளிவும் தோன்றும்
பாரிடை முருகன் பாதம்
பணிந்திடும் அடியார்க் கெல்லாம்.

குன்று தோறாடும் தெய்வம்
குவலயம் வணங்கும் தெய்வம்
நன்றினை நல்கும் தெய்வம்
நாம் பதம் வணங்குவோமே!

- செல்வி பா. பாரதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு யோசனை: ஐ. தே. கவுக்குள் முரண்பாடு

# ரணிலின் இந்திய விஜயம் சாதகமில்லை

## கூட்டணிக்குள்ளும் பூசல் நிலை

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென அரசாங்கம் தயாரித்துள்ள யோசனை இம் மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அரசின் இந்த யோசனையை கடந்த இரண்டு வருடங்களாக — எழுபத்தேழு தடவைகள் கூடி ஆராய்ந்த — நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஏகமனதான முடிவு இன்றியே யோசனை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இவ்விடயத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டிய தமிழ் முஸ்லிம் கட்சிகளும் சமர்ப்பித்த திருத்தங்களை இணைத்தே தீர்வு யோசனை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

தீர்வு யோசனை சமர்ப்பிக்கப்பட்ட போது அதனை ஆட்சேபித்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பெரும் அமளி துமளியை உண்டாக்கினர். அவர்களின் ஆட்சேபங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும் யோசனையை அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் சமர்ப்பித்த உடனேயே சபை அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அரசாங்கம் தனது தீர்வுத் திட்டத்தைச் சட்ட நகலாகச் சபையில் சமர்ப்பிக்கவில்லை. சொந்தப்பிரேரணையாகவும் சமர்ப்பிக்கவில்லை. இந்த இரண்டு வடிவங்களில் எந்த வடிவில் சமர்ப்பித்தாலும் வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும். அவ்வாறு வாக்கெடுப்புக்கு விடப்படின் அது சபையின் மூன்றில் இரண்டு அதிகப்படி வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். அது நடக்கவில்லையெனின் அரசின் தீர்வு யோசனை நாடாளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படும். மேற்கொண்டு எந்த வழியும் இருந்திருக்காது.

தனது தீர்வு யோசனையை ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ்க் கட்சிகளும் ஆதரிக்கும் என்ற திடமான நம்பிக்கை அரசிடம் அப்போது இருக்கவில்லை. அதனாலேயே யோசனையாகச் சமர்ப்பித்தது. யோசனையை விவாதிக்கும் போது ஏனைய கட்சிகள் சமர்ப்பித்த திருத்தங்களையும் பரிசீலனை செய்து ஏதோ சில வகைகளில், வரிகளில் மாற்றங்களைப்புகுத்தி அடுத்த தரப்பினரின் ஆதரவைப் பெற முடியுமா என்று முயற்சித்துப் பார்க்கும், பரீட்சித்துப் பார்க்கும் உள் நோக்கத்துடனேயே அரசு அவ்வாறு செய்தது.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி முதல் நாளே சபையில் நடந்து கொண்ட விதம் அரச வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் அவநம்பிக்கையையும் தோற்றுவித்திருந்தன. அரசின் யோசனையை சபையில் சமர்ப்பித்து விவாதிப்பது என்ற முடிவு தெரிவுக் குழுவில் ஏகமனதாகவே எடுக்கப்பட்டது. அப்படியிருக்க ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சபையில் பெரும் கலாட்டா நடத்தியமை ஐ. தே. கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுவிட்டதோ என்ற சந்தேகத்தை அரசுக்கு உண்டாக்கி இருந்தது.

எனினும் இந்தியா சென்றிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கொழும்பு திரும்பிய பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் சிலரே இம்மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட கலாட்டாவின் சூத்திரதாரிகள் என்று தெரியவந்திருக்கிறது. அவர்களின் பின்னால் மறைந்து நின்று சில சிரேஷ்ட பிரமுகர்களும் அமளிதுமளிக்கு ஊக்கமளித்தார்கள் என்ற தகவல்கள் கொழும்பில் கசியத் தொடங்கியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு இவ்வார மத்தியில் கூடி நாடாளுமன்றத்தில் கலாட்டாவில் ஈடுபட்ட எம். பிக்கள் மீது ஒழுங்கு விசாரணை நடத்த முடிவு செய்திருப்பது தீர்வு யோசனை விடயத்தில் அக் கட்சி கையில் கரிபூசிக் கொள்ள விரும்பவில்லை என்பது புலனாகிறது.



பீரிஸ்

இந்தியா சென்ற ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அந்நாட்டு அரசாங்க வட்டாரங்களில் பெரும் வரவேற்பு இருக்கவில்லை என்று அறியப்படுகிறது. இனப்பிரச்சினை விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு குறித்து அந்த வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்தனவாம்.

★ ★ ★

### இந்தியா புத்திமதி

அது மட்டுமன்றி, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்குமாறு ஐ. தே. க. தலைவருக்கு ஆலோசனையும் புத்திமதியும் கூறப்பட்டதாக நம்பிக்கையாக அறிய வந்துள்ளது.

## உள்ளும் புறமும் — குறுமுனி

ரணிலின் இந்திய விஜயத்தின் பின்னர் ஐ. தே. கவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஒன்றை எதிர்பார்க்கலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

கிழக்கில் மூன்று சர்வஜன வாக்கெடுப்புகள் நடத்தும் உத்தேச திட்டத்தைத் தவிர அரசு யோசனையில் உள்ள ஏனைய பிரதான யோசனைகளை ஆதரிக்க வேண்டும் என்ற போக்கு இப்போது மேலோங்கி நிற்பதாகக் கொழும்பில் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

எனினும் ஒற்றையாட்சி, வடக்கு — கிழக்கைப் பிரிப்பது என்பதில் விடாப்பிடியாக உள்ள கடும் போக்காளர்கள் இது விடயத்தில் [illegible] யின் முன்னணிப் பிரமுகர்களிடம் இருந்து முரண்டு பட்டு நிற்கிறார்கள்.

இதன் விளைவாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நெருக்கடி நிலை ஒன்று உருவாகி வருகிறது.

அரசின் தீர்வு யோசனைகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று இந்தியா ரணிலுக்குப் புத்திமதி கூறியதை அறிந்து கொண்ட அரசு, ஐக்கிய தேசியக் கட்சியின் பகைமையை வலிந்து தேடிக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தமது தீர்வு யோசனையை எப்படியும் ஒப்பேற்றிவிட வேண்டும் என்பதில் எல்லோரையும் விட அதிக அக்கறை காட்டுபவரும் அதன் பொருட்டுத் தன்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு வருபவருமான அமைச்சர் பேராசிரியர் பீரீஸ் இந்தச் சந்தர்ப்பத்தைத் தக்கவாறு பயன்படுத்த முனைந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை (27 ஆம் திகதி) அமைச்சர் பீரிஸ் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தீர்வு விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் கருத்திணக்கத்துக்கு வந்து அதனை ஆதரிக்கும் என்று பெரு நம்பிக்கைவெளியிட்டிருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியை அனுசரித்துப் போவதற்கு தாம் எப்போதுமே தயார் என்று பகிரங்கமாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார். தெரிவுக் குழுவில் ஐ. தே. க. பிரதிநிதிகள் மிக நல்லமுறையில் ஒத்துழைத்தனர் என்று பாராட்டியுள்ளார். ஐ. தே. கவின் மூத்த முன்னணி உறுப்பினர்களான றொனி டி மெல், ஏ. சி. எஸ். ஹமீத், கே. என். சொக்ஸி, ரிரோன் பெர்ணான்டோ ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களை வாயாரப் புகழ்ந்துள்ளார்.

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள முயலும் பேராசிரியரின் முயற்சி எந்தளவுக்கு வெற்றி அளிக்கும் என்பதனை இன்னும் சில வாரங்களில் அறிந்து கொள்ளலாம்.

தீர்வு விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இப்போது உருவாகி வரும் அரசியல் நெருக்கடி அக்கட்சியில் பிளவை ஏற்படுத்தலாம் என்ற அச்சம் நிலவுகிறது. அது செயல்வடிவம் பெற்றுவிட்டால் அரசாங்கத்துக்கு வாசியாகி விடும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சில நினைக்கத் தலைப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு கிடைக்கிறதோ, இல்லையோ, தீர்வுயோசனைகளை நிறைவேற்றுவதில் அரசு மிக உறுதியாக உள்ளதாகவும் சொல்லப்படுகிறது. [illegible] நாடாளுமன்றத் [illegible] இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவை.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு கிடைக்காவிடினும் கூட சர்வசன வாக்கெடுப்பு (Non Binding Referundum) ஒன்றை நடத்தி தீர்வுயோசனையை நிறைவேற்றுவதில் அரசு உறுதியாக உள்ளது. இப்போதைய அரசமைப்பின் 86 ஆவது சரத்தைப் பயன்படுத்தி சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முடியும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதும் ஒரு விடயத்தை ஜனாதிபதி விரும்பினால் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடுவதற்குகுறிப்பிட்ட 86 ஆவதுசரத்து வழி செய்கிறது.

அத்தகைய சர்வஜன வாக்கெடுப்பில் அரசு வெல்லும்



ரணில்

என்ற நம்பிக்கை அதற்கு உண்டு. அவ்வாறு வென்றுவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சியின் கதை காலியாகிவிடும். அதன் அரசியல் முக்கியத்துவம் தேய்ந்து விடும். அதன் பின்னர் கட்சி பின் தள்ளப்பட்டுவிடும் என்ற அச்சமும் ஐ. தே. க. வட்டாரங்களில் இல்லாமல் இல்லை. அத்தகைய ஒரு நிலை வராமல் தடுப்பதற்கு தீர்வு விடயத்தில் அரசுடன் ஒத்துப்போவதே, ஒத்துழைப்பதே, ஆதரவளிப்பதே நல்லதுஎன்ற கருத்தும் ஐ. தே. க. வட்டாரங்களில் நிலவுகிறது.

அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசின் யோசனை குறித்துப் பேச்சு நடத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி இதுவரையும் பெரிதாக வலியுறுத்தி வந்தது. யோசனையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கு முன்னர் பேச வேண்டும் என்று கூறி வந்தது.

அதனை கீழே அமுக்கிவிடும் வகையில் அரசின்தீர்வு யோசனை குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது. அதற்கான கதவுகள் மூடப்படவில்லை. விடுதலைப்புலிகளை அரசு தடைசெய்யப் போவதில்லை — என்று அமைச்சர் பீரிஸ் 27 ஆம் திகதி பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்து விட்டார்.

ஆகையால் ஐ. தே க. இனிப் புலிகளுடன் பேசுவது என்ற கயிற்றில் தொங்கிக் கொண்டிருக்க முடியாது.

★ ★ ★

### கூட்டணிக்குள் பூசல்

தீர்வு விவகாரம் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மட்டும் நெருக்கடியை ஏற்படுத்தவில்லை தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் அதே நிலை தான்!

கூட்டணிக்குள் உண்டாகியிருக்கும் கருத்து வேறுபாடும், மாறுபட்ட பேசக்கும் அதன் தலைமைப் பீடத்தை ஆட்டங்காணச் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று சொல்லப்படுகிறது.

தீர்வு விவகாரத்தில் கூட்டணியின் தலைவர்கள் அளவுக்கு அதிகமாக அரசாங்கத்தை அனுசரித்து நடப்பதாக ஒரு சாரார் அதிருப்தி அடைந்துள்ளார்கள்.

தமிழர்களின் அடிப்படையான, நீண்ட கால, அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்படும் என்ற திட்டவட்டமான அறிகுறி எதுவும் இல்லாமலே, தலைமைப் பீடத்தில் உள்ளோர் அரசுக்குத் தலையாட்டுவது கீழ்மட்ட ஆதரவாளர் மத்தியில் கடும் சினத்தை உண்டாக்கி உள்ளது.

அது மட்டுமன்றி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அரசை வலியுறுத்துவதற்கு தலைமைப் பீடத்தினர் உருப்படியான முயற்சியில் ஈடுபடாதிருப்பது குறித்து கிழக்கில் உள்ள கூட்டணி ஆதரவாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். கூட்டணியின் மட்டக்களப்புக் கிளை இயற்றிய தீர்மானம் அந்த அதிருப்தியையே பிரதிபலிக்கிறது.

விடுதலைப் புலிகளை ஒதுக்கி விட்டு அரசினால் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு தீர்வுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடம் இணக்கம் தெரிவிக்கக் கூடாது — என்ற மட்டக்களப்புக் கிளையின் ஏகமனதான தீர்மானம் தலைமைப் பீடத்தை எச்சரிப்பதாகக் கூடக் கொள்ளலாம்.

மேலும் கிழக்கில் மூன்று சர்வஜன வாக்கெடுப்பை நடத்தும் அரசின் உத்தேச முடிவை வாபஸ் பெறச் செய்ய வேண்டும் என்பதே கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டணி ஆதரவாளர்களின் நிலைப்பாடாக உள்ளது.

இத்தகைய ஒரு பின்னணியில் தலைமைப் பீடத்தில் மாற்றங்களைக் கொண்டு வரும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக அந்தரங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழுவில் பதினொரு பேர் உள்ளனர். அவர்களில் நால்வர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள். அந்தக் குழுவில் உள்ள மற்றும் இருவரின் ஆதரவைத் தம் பக்கம் பெறவும் தலைமைப் பீடத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவும் இக்குழு முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

அந்த முயற்சி வெற்றி பெற்றால் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் கூட்டணியின் தலைவராகும் சாத்தியம் உண்டு எனவும் பேச்சடிபடுகிறது.

★ ★ ★

விடுதலைப் புலிகளைத் தடை செய்யப்போவதில்லை என்றும் தீர்வு யோசனை குறித்து அவர்களுடன் பேசத் தயார் என்றும் அமைச்சர் பீரிஸ் மீண்டும் அறிவித்திருப்பது கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் பல வகையான கேள்விகளை எழுப்பியுள்ளதாகச் சொல்லப்படுகிறது.


விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கச் செய்த பின்னர் —

ஏனைய நாடுகளும் அவ்வாறே செய்ய வேண்டும்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரப்பன்: வனவாசம் முடிகிறதா?



''எந்நேரமும் சரணடையலாம்'' என்ற தகவல் பரவியிருப்பதை அடுத்து தமிழக - கர்நாடக, எல்லையோரக் கிராமங்களில் ஒரேபரபரப்பு. எல்லையை அண்டிய காவல் நிலையங்கள், வனத்துறை அலுவலங்கள் அனைத்தும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. எந்த நேரமும் எங்கும் அது நடக்கலாம். பத்திரிகைக் காரர்களும், படப்பிடிப்பாளர்களும் எல்லைக் கிராமங்களில் முகாமிட்டிருக்கிறார்கள். சுடச் சுடச் அந்தச் செய்தியை அறிவிப்பதற்காக.

தனது 18 ஆவது வயதுக்குப் பின்னர் வனவாசமே வாழ்க்கை என்றாகிப்போன வீரப்பனின் காட்டு தர்பாரின் முடிவு நெருங்கிக் கொண்டிருப்பதாகவே அனைவரும் எதிர்பார்த்துள்ளனர். வீரப்பன் சரணடைவதற்கு தமிழக அரசு நேற்று வரை காலக்கெடு விதித்திருந்தது. அதன் பின்னர் கடுமையான இராணுவ நடவடிக்கை என்றும் எச்சரித்துள்ளது. இந்த காலக் கெடுவுக்குள் அவர் சரணடைந்து விடுவார் என்பதை காட்டில் இருந்து வரும் வீரப்பனின் சமிக்ஞைகள் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

விரைவிலேயே நாட்டுக்குள் தோன்ற விருக்கும் வீரப்பன் யார்? அவர் எவ்வாறு வனவாசத்தை வாழ்க்கையாக்கிக் கொண்டார்?

சேலம் மாவட்டத்தில் உள்ள கிராமம் கோபிநத்தம். இது தான் வீரப்பனின் சொந்த ஊர். கர்நாடக மாநில எல்லைக்குள் அமைந்துள்ள இக் கிராமத்தில் வசிப்போரில் பலர் தமிழர்கள். முனுசாமி வீரப்பனின் தந்தை. அந்த வறிய விவசாயக் குடும்பத்தில் வீரப்பன் இரண்டாவது மகன். மூத்தவன் பெயர் மாதையா. வீரப்பனுக்கு அடுத்த தம்பி அர்ஜுனன். தங்கை மாரியம்மாள்

பல ஆண்டுகளாக பருவ மழை பொய்த்துப்போனதால் கிராமத்தை வரட்சி தன் பிடிக்குள் வைத்திருந்தது. விவசாயம் பலனளிக்காது போகவே வேட்டையே முனுசாமிக்கு கைகொடுத்தது. அப்பாவுடன் வேட்டையாடக் காட்டுக்குப் போனான் சிறுவன் வீரப்பன். அவனது வனவாசம் அப்போதுதான் ஆரம்பமானது.

யானைகளைச் சுட்டுத் தந்தங்களை விற்கும் சட்ட விரோத கும்பல்களின் தொடர்பு அங்கே தான் ஏற்பட்டது. ஆனால் 13 வயதுச் சிறுவனான வீரப்பனை அவர்கள் தங்களுடன் கூடச் சேர்த்துக் கொள்ளவில்லை.

ஆனால் சிறுவன் வீரப்பன் சும்மா இருக்கவில்லை; வீட்டில் இருந்து துப்பாக்கியை எடுத்துக் கொண்டுபோய் தனியாகவே ஒரு யானையைச் சுட்டுக் கொன்றானாம். ஒருவாறு அதன் தந்தத்தை வெட்டி எடுத்துச் சென்று அயல் கிராமத்தில் விற்றும் விட்டானாம்.

தந்தத்தை விற்றவரிடம் வீரப்பன் கேட்டது பணத்தை அல்ல; 477 ரகத் துப்பாக்கியை.



துப்பாக்கியுடனும் 5 ஆயிரம் ரூபா பணத்துடனும் ஊருக்குத் திரும்பிய அவன் தனது குடும்பத்தினருக்கு புதுத்துணி மணிகளை வாங்கிக் கொடுத்து மகிழ்ந்தான். அதன் பின் வீரப்பனின் யானை வேட்டை தொடர்ந்தது. பல தடவைகள் வனத்துறை அலுவலர்களிடம் சிக்கி அடி உதை வாங்கநேரிட்ட போதும் வீரப்பன் வன வாழ்வை கைவிடவில்லை.

ஒரு சமயம் பொலீஸாரிடம் சிக்கிய போதும் பின்னர் தந்திரமாக விலங்கைக் கழற்றிக் கொண்டு தப்பிவிட்டான் வீரப்பன். சந்தன மரங்களைக் கடத்த ஆரம்பித்த ஆரம்ப நாள்களில் — 1989 இல் — முத்து லெட்சுமி என்ற பெண்ணைக் காட்டுக்குள்ளேயே வைத்துத் திருமணம் முடித்தார். (இப்போது முத்து லெட்சுமி விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பில் உள்ளார்)

வீரப்பன் நடமாடும் காட்டின் பரப்பளவு மிகப் பரந்தது. ஆறு மாவட்டங்கள் வரை பரந்துள்ள அப் பிரதேசம் மூன்று மாநிலங்களுக்குச் சொந்தமானது.

சுமார் 6 ஆயிரம் கிலோ மீற்றர் பரந்துள்ள காட்டுப் பிரதேசத்தை ஒரு முறை சுற்றிவர 18 மாதங்கள் எடுத்ததாக வீரப்பன் ''நக்கீரன்'' செய்தியாளரிடம் ஒருதடவை தெரிவித்தாராம்.

நூற்றுக் கணக்கான யானைகள், நூற்றுக்கு மேற்பட்ட மனிதர்கள் என வீரப்பனின் படுகொலைப் பட்டியல் நீண்டிருந்தாலும் பெண்கள் விசயத்தில் அவர் மிகவும் நாகரிகமானவர் என்றே பலரும் கூறுகிறார்கள். இதுவரை எந்தப் பெண்களையும் கொன்றதும் இல்லை. பாலியல் ரீதியிலோ அல்லது வேறு எந்த வகையிலோ சித்திரவதை செய்ததும் இல்லை. பணயக்கைதிகள் விடயத்திலும் வீரப்பன் நடந்து கொள்ளும் முறை பின்னர் அவர்களால் மெச்சப்பட்டுள்ளது.

பத்திரிகைகள், சஞ்சிகைகள் படிப்பதிலும் றேடியோ செய்திகள் — குறிப்பாக பி. பி. ஸி தமிழோசை — கேட்பதிலும் வீரப்பன் மிகுந்த ஆர்வம் உள்ளவராம். இராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்களுடன் ''பிரபாகரன் கதை'' என்ற புத்தகத்தையும் அவர் விரும்பிப் படிப்பதாக தென்னிந்திய சஞ்சிகை ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

எம். ஜி. ஆருக்கு அடுத்த படியாக வீரப்பனுக்குப் பிடித்த தலைவர் கலைஞர் கருணாநிதிதான். விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் மீதும் அவருக்கு

(XI ஆம் பக்கம் பார்க்க)

## மாபியாவின் தாயகம்

சிசிலி நாட்டில் குற்றங்கள் புரியத் தோன்றிய கும்பலின் பெயர்தான் மாபியா. ஒலி நாடா இசைக் கலைஞர் குல்ஷன் குமாரின் உயிர்ப் பாதுகாப்பிற்காகப் பத்துக் கோடி ரூபாயை இந்தக் கும்பல் கேட்டதாம். இதைக் கொடுக்க முடியாததால் உயிரை இழந்தார். பொறாமை கொண்ட இன்னொரு இசையமைப்பாளரால் இவர் கொலையுண்டார் என்று இன்னொரு தகவல். எது எப்படியோ மாபியா ஒரு பெரிய கூவிப் படை.

## தேனுக்கு முக்கியத்துவம்

போலந்து நாட்டு மக்களின் சமையலில் உப்பைப் போல தேனும் முக்கிய இடம் வகிக்கிறது. தேன் இல்லாமல் எந்த ஓர் உணவும் சாதாரண மக்களால் கூட சமைக்கப்படுவதில்லை.

## கணனியில் உயில்

வில்லியம் ஸ்கின்னர் என்பவர் ஒன்றரை அங்குலம் விட்டம் கொண்ட கம்பியூட்டர் டிஸ்க் ஒன்றில் நாற்பது வார்த்தைகளைக் கொண்ட தனது உயிலைப் பதிவு செய்தார். இரண்டு சாட்சிகளும் அதில் கையெழுத்திட்டிருந்தனர். ஸ்கின்னர் பின்பு ஒரு நாள் கொல்லப்பட்டார். அதையடுத்து அந்த 'தம்மாத்தூண்டு' உயில் நீதிமன்றத்துக்கு வந்தது. நீதிமன்றம் அதை ஏற்றுக் கொண்டது.

திருமதி பிரெட்சிக்கா ஈவ்லின் என்ற பெண் இராமாயணம் மாதிரி 95 ஆயிரத்து 940 வார்த்தைகளில் ஓர் உயில் எழுதி வைத்தார். அது நான்கு அத்தியாயங்களைக் கொண்டதாக இருந்தது.

## பாப்பராஸிகளை மடக்கும்கருவி



இளவரசி டயானாவின் மரணத்தைத் தொடர்ந்து பாரிஸில் உள்ள லேசர் தயாரிப்பு நிறுவனம் (Cilas) ஒன்று அறிமுகப்படுத்தியுள்ள ''சிலைட் லேஸர் டிற்றெக்டர்'' (Slight Laser Detector SLD 400) என்ற கருவி இதுதான்.

இக்கருவி வைக்கப் பட்டிருக்கும் இடத்தைச் சுற்றி சுமார் 4 கிலோ மீற்றர் பிரதேசத்துக்குள் பயன்படுத்தப்படும் எந்தக் கமெராக்களும் செயலற்றதாகி விடும்.

இக்கருவியில் இருந்து வெளியேறும் லேசர் கதிர்கள் கமெராக்களின் லென்ஸ்கள் செயற்படுவதைத் தடுத்து விடும்.


முழுக்க முழுக்க இராணுவ நோக்கங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட இக்கருவி தற்போது பொதுப் பாவனைக்காக முதற் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

பாப்பராஸி எனப்படும் பணத்துக்காகப் புகைப் படம் பிடிப்போரின் கழுகுக் கண் கமெராக்களில் இருந்து தப்ப பிரபலமானவர்கள் இனிமேல் இதனைப் பயன்படுத்த முடியும்.

ஏழு கிலோ நிறையுடைய இக்கருவியின் விலை இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

# அதி நவீன கார்!

அதி வேகமாக வளர்ந்து வரும் தொழில் நுட்பம் செய்யும் விந்தைகளுக்கு இது ஓர் உதாரணம். இன்னும் சில ஆண்டு காலத்தில் புழக்கத்துக்கு வரவிருக்கும் நவீன கார் இது.




1. வெப்பத்தை உணரும் கருவி இது. விபத்தில் கார் தீப்பற்றினால் தீயணைக்கும் கருவியைத் தானாகவே இயக்கி தீயைக் கட்டுப்படுத்தும்.
2. விபத்து குறித்து தகவல் அறிவிக்கும் கருவி. விபத்து நடந்த இடம், காலம் ஆகிய தகவல்களை பொலீஸுக்கு உடன் அறிவிக்கும்.
3. நவீன கொம்பியூட்டர் திரை. முன்னையதைவிட அதிக தகவல்களை திரையில் காட்டும்.
4. அவசரமான நிலையில் வாகனத்தை தன்னிச்சையாக நிறுத்தும் — SOS கருவி.
5. கொம்பியூட்டர் இணைக்கப்பட்ட கமெரா, ரடார். இவை சாரதி பார்க்க முடியாத [illegible] காட்டும். வரவிருக்கும் விபத்தை முன்கூட்டியே அறிவித்து எச்சரிக்கை செய்யும்.
6. தீயணைப்பு கருவி.
7. அதிவேக உணர் கருவி. ரயர் அமுக்கம் குறைந்தால் சாரதிக்கு எச்சரிக்கை விடுக்கும்.
8. சாரதியின் நாடியுணர் கருவி. அவர் தூங்கினால் அல்லது சோர்வடைந்தால் ஆசனத்தை அதிரச் செய்து அவரைத் தட்டி எழுப்பும்.
9. சாரதி மயக்கமடைந்தால் வாகனத்தை நிறுத்தும் கருவி.
10. பொலீஸ் சமிக்ஞைகளை திரையில் காட்டும் கருவி.
11. காற்றடைத்த பை. பாதசாரிகள் மீது மோத நேர்ந்தால் உடனடியாகக் காற்றுப் பையைப் பொருமச் செய்து பாதுகாப்பு வழங்கும்.

நன்றி: விஞ்ஞானமுரசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரினங்களை விண்ணிலிருந்து பூமிக்கு வால்வெள்ளிகள் கொண்டு வந்தனவா?


### சூரியத் தொகுதி

சூரியனும் அதைச் சுற்றி இயங்கும் பொருள் களும் சூரியத் தொகுதி எனப்படும். ஈர்ப்புவிசை காரணமாகச் சூரியனைச் சுற்றி வரும் முக்கிய வகையான பெரும் பொருள்களுள் வால் வெள்ளி களும் அடங்கும்.

கோள்கள் புதன், வெள்ளி, புவி, செவ்வாய் வியாழன், சனி, யூறேனஸ், நெப்ரியூன், புளூட்டோ முதலிய ஒன்பதுமாகும். இவை பருமனிற் பெரிய னவாகவும் ஏறக்குறைய கோள்வடிவுடையனவா கவும் இருக்கின்றன. இவற்றில் உட்கோள்கள் எனப் படும் புதன், வெள்ளி, புவி, செவ்வாய் ஆகியன அடர்த்தி கூடியவையும் இரும்புப் பாறைகளால் உருவானவையுமாகும். சனி, வியாழன், யுறேனஸ் நெப்ரியூன் ஆகியவை அடர்த்தி குறைந்தன. பெரும்பாலும் ஈலியத்தையும் ஐதரசனையும் திரவ வடிவிலோ அல்லது வாயு வடிவிலோ கொண்ட வையாகும். புளூட்டோ பனிப் பாறைகளால் ஆனது.

பெரும்பாலான கோள்களைச் சுற்றி உபகோள் களும் உள்ளன. உதாரணமாக புவியைச் சுற்றி சந்திரனும் வியாழனைச் சுற்றி இயோ, யுறோப்ப கனிமீட் கலிஸ்றேர் என்ற நான்கு உபகோள்களும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட வேறு சிலசிறிய உபகோள்களும் உள.

செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடைப்பட்ட வலயமொன்றில் இரும்புப்பாறைகளாலான பல்லா யிரக்கணக்கான பொருள்கள் சூரியனைச் சுற்றி வலம் வருகின்றன. இவை பல் வேறு உருவமுடை யனவாகவும் ஒரு சில கிலோ மீற்றர் தொடக்கம் சில நூறு கிலோ மீற்றர் வரையிலான பருமனைக் கொண்டவையுமாகக்காணப்படுகின்றன. இவையே குறுங்கோள்கள் எனப்படும். இவற்றை விட விண் கற்கள் (meteoroid) எனப்படும் பொருள்கள் குறுங்கோள்களிலிருந்து பெரிதும் வேறுபடுத்த முடி யாதவை பருமனிற் சிறிய குறுங்கோள்கள் என்றே அவற்றைக் கூற முடியும்.




## வால் வெள்ளி ஒன்றின் அமைப்பும் தோற்றமும்

குறுங்கோள்கள் வலயத்தில் மட்டுமன்றி விண் வெளி முழுதும் அவை வியாபித்துள்ளன. விண் கற்கள் புவியின் வெளிமண்டலத்துள் வரும்பொழுது உராய்வின் காரணமாக எரிகின்றன அப்பொழுது அவை ''எரிநட்சத்திரம்'' எனப்படுகின்றன. சில சமயம் அவை முற்றாக எரிந்து போகாமல் புவி யில் வந்து மோதுவதும் உண்டு. அவ்வாறு மோதும் கற்கள் 'எரிகற்கள்' (meteorite) எனப் படும்.

புளூட்டோவைத் தவிர்ந்த கோள்களும் பெரும் பாலான குறுங்கோள்களும் சூரியனை நீள்வட்டப் (ஏறக்குறைய வட்டம்) பாதையில் ஒரே திசையி லேயே வலம் வருகின்றன. அவற்றின் ஒழுக்குகள் பெரும்பாலும் புவியின் ஒழுக்கு அமைந்துள்ள தளத்திற்கு (Eelipxic) மிகவும் அண்மித்தே இருக் கின்றன. புளூட்டோ மட்டும் சற்று நீண்ட வளை யப் பாதையில் இயங்குகிறது. அதன் ஒழுக்கின் தளம் புவியின் ஒழுக்குடன் சற்றுச் சாய்ந்து உள் ளது.

### வால் வெள்ளியின் அமைப்பும் தோற்றமும்

வால் வெள்ளிகள் தோற்றத்தில் மட்டுமல் லாது அமைப்பிலும், பருமனிலும் ஒழுக்குகளி லும் கோள்களிலிருந்தும் குறுங்கோள் களிலிருந்தும் பெரிதும் வேறுபட்டவையாக இருக்கின்றன. அவை சூரியனைச் சுற்றிப் பெரும்பாலும் நீண்ட நீள் வளையப் பாதைகளிலேயே செல்கின்றன. அவற் றின் ஒழுக்குகள் புவி ஒழுக்கின் தளத்துடன் பெரி தும் சாய்ந்திருக்கக் கூடும் என்பதுடன் இச்சாய் வுகள் வெவ்வேறு வால் வெள்ளிகளுக்கு வெவ்வேறாகவும் பெரிதும் வேறுபட்டவை யாகவும் இருக்கக்கூடும்.

வால்வெள்ளி ஒரு தலை (Head or coma), மையக்கரு (Central nucleus) வால் (tail) முதலி யவற்றைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

கருவானது ஒரு சில கிலோ மீற்றர் குறுக்கு வெட்டைக் கொண்டதும் வாயுக்களை உள்ளடக் கியதும் தூசியுடன் கலந்ததுமான பனிக்கட்டியா கும். வால் வெள்ளி சூரியனை அண்மித்து வரும் பொழுது கரு வெப்பமடைந்து வாயுக்களையும் தூசிகளையும் வெளிவீசுகிறது. இந்த வாயுக்களும் தூசியும் கருவைச் சுற்றி 100,000 கி.மீ. வரை விட்டமுள்ள அடர்த்தி குறைந்த 'தலை' ஒன்றை உருவாக்குகின்றன. தூசிகளும் வாயுக்களும் சூரிய னுக்கு எதிரான திசையில் இழுத்துச் செல்லப் பட்டு பல மில்லியன் கிலோமீற்றர் நீளமுள்ள ஒரு 'வால்' அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வால் கள் உருவாக்கப்பட்டன. இந்த வால்கள் இரண்டு வகைப்படும். ஒன்று தூசிவால் (Dust Tail) மற் றது பிளாஸ்மா வால் (Plasma Tail).

தூசிவாலானது கருவைச்சுற்றியுள்ள தூசிகள் சூரியகதிர் வீச்சின் அழுக்கத்தால் சூரியனுக்கு எதிர்த் திசையில் இழுத்துச் செல்லப்படுவதால் உண்டாகும் வாலாகும். தூசிகளிலிருந்து தெறிக் கும் சூரிய ஒளியே இவ்வாலைத் தோற்றுவிக்கின் றது. இந்த வால்வளைந்தும் பெரும்பாலும் மஞ் சள் நிறமுடையதாகவும் இருக்கும். இதை விட வால் வெள்ளியின் தலையுள் சூரியகதிர் வீச்சால் உண்டாக்கப்படும் CO, $HO_2$, $CO_2$, OH, போன்ற அயன்கள் சூரியனிலிருந்துமிகுந்த வேகத் துடன் தொடர்ச்சியாக வெளி வீசப்படுவதும் பெரும்பாலும் ஐதரசன், அயன்களைக் கொண்ட துமான சூரிய காற்று (Solarwind) எனப்படும் காற்றால் சூரியனுக்கு எதிர்த்திசையில் இழுத்துச் செல்லப்படுகின்றன. அவ்வாறு இழுத்துச் செல்லப் படும் அயன்களால் காணப்படும் ஒளியே பிளாஸ்மா வாலைத் தோற்றுவிக்கிறது. இவ் வால் பெரும்பாலும் பச்சை, நீலநிறமுள்ளதாயும் நேரானதாயும் இருக்கும்.

புவியிலிருப்பவர்களுக்கு வால் வெள்ளி எவ் வாறு தோன்றுகிறதென்பது சூரியன், புவி, வால் வெள்ளி ஆகியவற்றின் சார் நிலைகளைப் பொறுத்தே இருக்கும். வால் வெள்ளிகள் கோள் களைப்போல் தமது பிரகாசத்தை சூரியனி லிருந்தே பெறுகின்றன என்பது இங்கு கவனிக்கப் பட வேண்டும்.

வால் வெள்ளிகள் சூரியத்தொகுதி உருவாகிய காலத்தில் தோன்றியவை என நம்பப்படுகின் றது. கோடானுகோடி வால்வெள்ளிகள் புளூட் டாவிற்கு அப்பால் சூரியனைச் சுற்றியுள்ள ஒரு கோளப்பிரதேசத்தில் இருக்கின்றன என்றகருத்து ஒல்லாந்து நாட்டு வானியலாளரான ஊட் (Oort) என்பவரால் முன்வைக்கப்பட்டது. இக் கோள்பிரதேசம் 'ஊட்வட்டம்' அல்லது 'ஊட் முகில் எனப்படும். இம்முகிலிலுள்ள வால் வெள் ளிகளிற் சில இம்முகிலைத் தாண்டிச் செல்லும் நட்சத்திரங்களின் ஈர்ப்பால் சூரியனை நோக்கித் தள்ளப்பட்டு காலப்போக்கில் அவை சூரியதொகு திக்குள் வந்து புவியிலுள்ளவர்களுக்குத் தோன்று கின்றன. என்பது ஊட்டின் கருத்து. இக்கருத்து இப்போது வலுவடைந்து வருகின்றது.

### சில முக்கிய வால் வெள்ளிகள்

வருடமொன்றுக்குச் சராசரி 10 வால்வெள்ளி கள் வானியலாளராலும் வானிலைப் பொழுது போக்காகக் கொண்டவர்களாலும் கண்டுபிடிக் கப்படுகின்றன, ஆனால் இவற்றில் ஒரு சிலவே வெற்றுக் கண்ணுக்குப்புலப்படக் கூடிய அளவுக்கு பிரகாசமாக இருக்கின்றன. ஏனையவை தொலைக் காட்டி அல்லது பௌதிகக் கருவிகளுடன் இணைக்கப்பட்டஒளிப்படத்தட்டுப் போன்ற உணர் சாதனங்கள் மூலமே அவதானிக்கக் கூடியவை யாக இருக்கின்றன.

சில வால்வெள்ளிகள் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குப்பின் மீளத் தோன்றுகின்றன. அவை மீள்தோன்று (Periodic) வால் வெள்ளி கள் எனப்படும். ஏனையவை மீளத் தோன்றுகின் றன எனக்கூறமுடியாத அளவுக்கு நீண்ட மீள் தோன்று காலத்தை உடையவையாக இருக்கின் றன.

### ஹேலியின் வால்வெள்ளி

வால்வெள்ளிகள் சூரியத் தொகுதியின் உட் பகுதியுள் வரும்பொழுது மட்டுமே பிரகாச மடைவதாலும் பெரும்பாலான வால்வெள்ளிகள் மிகவும் நீண்ட நீள்வளையப் பாதைகளில் செல்வ தாலும் அவற்றை நாம் தொடர்ச்சியாக அவதா னிக்க முடிவதில்லை. சில வால்வெள்ளிகள் மீள் தோற்ற காலம் எதிர்வு கூறக்கூடிய அளவாக இருக்கின்றது. இவற்றில் மிகப் பிரகாசமான துமான வால்வெள்ளி ஹேலியின் வால் வெள்ளி (Heley's Comet) ஆகும். இது ஏறக்குறைய 76 வருடங்களுக்கொரு முறை சூரியத் தொகுதியின் உட்பகுதிக்குள் வருகிறது. இதைச் சீனர்கள் கி.மு 11 ஆம் ஆண்டிலும் அதைத் தொடர்ந்து பல முறையும் கண்டு குறித்து வைத்ததாகச் சான்று கள் உள. ஆனாலும் வெவ்வேறு காலங்களில் தோன்றிய இவ்வால்வெள்ளி ஒரே இவ்வால் வெள்ளியென அறிந்து கூறி அதன் மீள்தோன்று காலத்தை எதிர்வு கூறிய பெருமை 16ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த பிரித்தானிய வானியலாள ரான ஹேலி என்பவரையே சாரும். இவ்வால் வெள்ளி கடைசியாக 1986 ஆம் ஆண்டில் தோன் றியதை வாசகர்கள் நினைவு கூரலாம்.

## விஞ்ஞானம்

1911 ஆம் ஆண்டும் 1943 ஆம் ஆண்டும் தோன்றிய வால்வெள்ளிகள் பட்டப்பகலிலேயே தோற்றமளிக்குமளவுக்கு ஒளிர்வாக இருந்தன வெனக் கூறப்படுகின்றது. அதற்குப் பின் ஹெலி யைத் தவிர்ந்த பிரகாசமான வால் வெள்ளிகளின் தோற்றம் அரிதாகவே இருந்தது. 1973 ஆம் ஆண்டில் தோன்றிய கொகூற்றெக் (Hayakutake) என்ற வால்வெள்ளி சந்திரனிலும் பார்க்கப் பிர காசமுடையதாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்ட பொழுதிலும் அது ஒரு சாதாரண வால் வெள்ளி யாகத் தோன்றி மறைந்தமை ஏமாற்றத்தையே அளித்தது. இந்தக் குறையைப் போக்கும் வகை யில் 1996 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஹயக்குற் றாக்கே (Hoyakuioke) என்னும் பிரகாசமான வால் வெள்ளி வானுள் பிரவேசித்து பொழுது போக்கு வானியலாளரையும் Amateur Astronomers) பொதுமக்களையும் வியப்புக்குள்ளாக்கியது.

இது 1996 ஆம் ஆண்டு மார்ச் மாத இறு தியில் சூரிய உதயத்திற்கு முன்பான காலப் பகு தியில் குறிப்பாக இருண்டவானுள்ள கிராமப்பகுதி களில் வெற்றுக் கண்ணுக்கு நன்கு புலப்பட்டது. இதன் வால் அவ்வளவுநீண்டதாகதோற்றமளிக்கா விட்டாலும்பார்த்தவர்களுக்கு வியப்பூட்டுமளவுக்கு பிரகாசமாக இருந்தது. இது வானில் கட்புலனா வதற்குஒரு சில மாதங்களுக்கு முன்பே அதாவது 1995 ஆம் ஆண்டுடிசம்பர் மாதம் 26 ஆம் திகதியே வானியலைப் பொழுது போக்காகக் கொண்ட ஹயக்குற்றாக்கே என்ற ஜப்பானியரால் கண்டு பிடிக்கப்பட்டது. இதனாலும்இவ்வால்வெள்ளி குறு கிய காலத்திற்கே வானில் தோன்றியதாலும் பொழுது போக்கு வானியலாளர் உட்படப் பலர் இதை நீண்டகாலம் அவதானிக்க முடியாமற் போயிற்று.

### ஹேல் – பொப் வால் வெள்ளி

வானியலைப் பொழுது போக்காகக் கொண்ட அமெரிக்கர்களான அலன் ஹேல் (Alan hale), தொமஸ் பொப் (Thomas Bopp) என்பவர்கள் 1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி தனித்தனியாகக் கண்டுபிடித்த வால் வெள்ளியை ஹேல் – பொப் வால்வெள்ளியெனவும் பெயரிட்ட னர். இதன் தலை இப்பொழுது (1996 ஆம் ஆண்டு ஒகஸ்ட்டில்) ஒளி மாசு படாத இருண்ட வானில் வியாழனுக்குச் சற்று மேற்கே மங்க லாகத் தோற்றமளிக்கத் தொடங்கியுள்ளது. அடுத்த வருடம் (1997) பெப்ரவரி மாதம் தொடக்கம் கூடிய பிரகாசத்துடன் தோன்றப் போகும் இவ்வால்வெள்ளி 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி சூரியனுக்கு ஆகக் கிட்டிய தூரத்தை (Perihelionஐ) வந்தடையும். அப்பொழுது அது உச்சப் பிரகாசத்தை அடை யும். இப்பொழுது புவியிலிருந்து வியாழனுக்கு அப்பால் வானியல் அலகுக்கு மேற்பட்ட தூரத்

பேராசிரியர் க. குணரத்தினம்

தில் உள்ள இவ்வால்வெள்ளி 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி புவிக்கு மிக அண் மையில் வரும். அப்பொழுது புவியிலிருந்து அதன் தூரம் ஏறக்குறைய 0.9 வானியல் அலகாகும். (ஒரு வானியல் அலகு (Astronomical unit) சூரிய னுக்கும் புவிக்குமிடையேயுள்ள சராசரித் தூரம், இது அண்ணளவாக 150 மில்லியன் கிலோ மீட் டர் ஆகும்.)

### வால் வெள்ளிகளின் விஞ்ஞான முக்கியத்துவம்

பண்டைய மனிதர் வால்வெள்ளியொன்றின் தோற்றம் அபசகுனத்தைக் குறிப்பதென்றும் இயற்கை அழிவுகளை எதிர்வு கூறுவதென்றும் கருதினர். அதனால் வால்வெள்ளிகளின் வரு கையை அவர்கள் ஒரு பய மனப்பான்மையுட னேயே எதிர்நோக்கினர். விஞ்ஞானத்தின் வளர்ச்சியுடன் வால் வெள்ளிகள் பற்றிய உண் மைகள் தெரிய வந்துள்ளன. அதனால் பயத் திற்குப் பதிலாக வால்வெள்ளிகள் பற்றி வியப் பும் விஞ்ஞான ரீதியான ஒரு கவர்ச்சியுமே மக்க ளிடையே நிலவத் தொடங்கியுள்ளது.

வால் வெள்ளிகள் ஐதரசன், சயனைட்டு

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சிறுகதை

# கொள்ளி

அராலியூர்
## ந. சுந்தரம்பிள்ளை

மயில்வாகனத்தாருடைய மகன் மனோகரன் ஓர் என்ஜினியர். சாதாரண என்ஜினியரல்ல, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்து, 'கிளாஸ்' எடுத்த என்ஜினியர். மனோகரன் அப்படித்தான். நெடுகவே கெட்டிக்காரன். அதனால் தானே யாழ்ப்பாணத்திலிருந்து சோதினை எடுத்து, தரப்படுத்தல்கள், வெட்டுப்புள்ளிகள், தடைகளையும் தாண்டி பேராதனையில் பொறியியல் படிக்க எடுபட்டான்!

மகன் பொறியியல் படிக்க எடுபட்டதும் மயில்வாகனத்தாருக்கும் மனைவி கங்காவுக்கும் பெருமை பிடிபடவில்லை. பிறகு அவன் சிறப்புச் சித்தி எய்தவே, பெரிய உத்தியோகத்தில் அமர்வான் என்று எதிர்பார்த்தனர்.

ஆனால் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகி ஒரு வருடமாகியும், மனோகரனுக்கு வேலை கிடைக்கவில்லை. மயில்வாகனத்தார் வெள்ளைக்காரன் காலத்தில் போட்டிப் பரீட்சை மூலம் திறமையின் அடிப்படையில் கிளறிக்கலுக்கு எடுபட்டவர். பிறகு சுதந்திரத்துடன் போட்டி, பொறாமை, துவேஷம், பாகுபாடு எல்லாம் வந்துவிடவே, ஒரு பதவி உயர்வும் கிடைக்காமல் கிளறிக்கல் சேவன்ட் ஆகவே சேவையை முடித்துக்கொண்டு ஓய்வுபெற்றவர். இருந்தாலும் மகன் பெரிய படிப்புப் படித்ததனால் அவனுக்கு நல்ல உத்தியோகமும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார். நியாயமான எதிர்பார்ப்புத்தானே?

மயில்வாகனம்—கங்கா தம்பதியினருக்கு மலர்வதனி என்றொரு மகளும் இருந்தாள். மகனது படிப்பு முடிவதற்கு முன்பாகவே மகளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு எடுபட்டாள். மயில்வாகனத்தார் பெரிய காசுக்காரனல்ல. உழைத்த காசுதான். மற்றப்படி வீடு வாசலும், கொஞ்ச நிலபுலமும் இருந்தன. இரண்டு பிள்ளைகளை ஒரே நேரத்தில் பல்கலைக்கழகத்தில் வைத்துப் படிப்பிப்பதென்றால் சும்மாவா? கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. பல்லைக் கடித்துக்கொண்டு சமாளித்தார். விரைவில் மகன் என்ஜினியராவான், அதன் பிறகு, நிம்மதியாக மூச்சுவிடலாம் என்று. ஆனால் நடந்ததோ எதிர்மாறு.

யாழ்ப்பாணத்தில் என்ஜினியர் வேலை எடுக்க முடியாது. கொழும்பில்தான் பார்க்கவேண்டும். அங்கிருந்தால்தான் ஏதாவது இன்ரவியுக்கு அழைப்புவந்தாலும், உடனடியாகப் போகலாம் என்று, மகனைக் கொழும்பிலேயே தங்குமாறு எழுதினார். மனோகரன் சோதனையில் திறமாகச் சித்தி எய்திய புளுகத்தை குடும்பத்தாருடன் பகிர்ந்து கொள்ளக்கூட யாழ்ப்பாணம் வராது ஓர் அறை எடுத்துக்கொண்டு கொழும்பிலேயே தங்கி விட்டான்.

மகனுக்கு முன்பு அனுப்பியதையும் விட, இப்பொழுது கூடுதலாக அனுப்பிக் கொண்டிருந்தார் மயில்வாகனத்தார். சரியாக ஒரு வருடத்தின் பின்பு, மனோகரனுக்கு ஒரு வேலைகிடைத்தது. ஒரு தனியார் நிறுவனத்தில் மாதம் ஐயாயிரம் ரூபா சம்பளம்.

கொழும்பில் ஐயாயிரம் ரூபா எந்த மூலைக்கு? அறைவாடகைக்கே ஐயாயிரம் ரூபாய் வேணும். உத்தியோகமாகியும் வீட்டிலிருந்து பணம் வருவது நிற்கவில்லை. பெரிய படிப்பல்லவா? என்றோ ஒரு நாள் அரசாங்கத் துறையில் வேலை வரும் என்று நம்பிக் கொண்டிருந்தார் மயில்வாகனத்தார்.

வேலையாகிச் சரியாக ஓர் ஆண்டு முடிய, ஒரு நாள் மனோகரன் திடீரென்று வந்து வீட்டில் இறங்கினான். அவன் அப்படி வந்து குதித்தது வீட்டில் எல்லோருக்கும் வியப்பாக இருந்தாலும், அவனைக் கண்டதில் அனைவருக்கும் மகிழ்ச்சிதான்.

''என்ர பிள்ளை வந்திட்டான்!'' என்று கூறி கங்கா மகனது முதுகில் தடவி மகிழ்ந்தாள். ''கொஞ்சம் ஊதிப்பருத்து வந்திருக்கிறாய்'' என்று கூறி, மயில்வாகனத்தார் தனது சந்தோசத்தை தெரிவித்துக் கொண்டார். மலர்வதனிக்கு அண்ணாவிடம் கொழும்புப் புதினங்களைக் கேட்பதிலேயே நேரம் கழிந்தது.

வந்து இரண்டு நாள்களில் தனது திட்டத்தை அவிழ்த்துவிட்டான் மனோகரன்:

''அப்பா நான் கனடா போகப்போகிறேன்.''

அந்தச் செய்தி வீட்டில் எல்லோருக்கும் புதினமாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது.

''இப்ப ஏன்டா கனடாவுக்கு?'' என்றார் மயில்வாகனம்.

''...இஞ்சை உத்தியோகம் கிடையாது. நான் கனடா போய் உழைக்கப்போறன்.''

''அவசரப்பட்டால் முடியுமா? எல்லாம் கிடைக்கும் கொஞ்சம் பொறு!''

''கிடையாதப்பா முந்தியெல்லாம் கிளறிக்கலிலை எவ்வளவு தமிழ் ஆக்கள் இருந்தாங்கள். இப்ப கிளறிக்கல் வேலைக்குத் தமிழரைக் களையே எடுக்கிறதில்லை.''

''அதென்ன அப்ப எஸ். எஸ். ஸி. யோலை எடுத்த வேலையல்லோ?

''படிச்சவர்களுக்கு வேலை இல்லை. இப்பஐஞ்சுவருசமாகப் பாஸ்பண்ணின பட்டதாரியள் எல்லாம் வேலை இல்லாமல் றோட்டு வழிய அலைஞ்சுதிரியுதுகள். எங்கடை பள்ளிக்கூடங்களிலை எத்தினை வாத்திமாருக்கு இடமிருக்கு. இந்தப் பட்டதாரியளை அந்த இடங்களுக்கு நியமிச்சா என்ன? இப்ப அரைவாசிப் பிள்ளையள் தான் படிக்குதுகள் முழுப் பிள்ளைகளும் வந்தா, அதுகளின்ரை கதி என்ன?''

''நீ பெரிய படிப்புப் படிச்சனியல்லோ? என்ஜினியர்!''

''என்ஜினியர்மாருக்கும் வேலை இல்லை. நான் இது வரை எத்தினை இன்ரவியுவுக்குப் போயிருப்பன். எல்லாத்திலும் என்னைத் தட்டிட்டாங்கள் தமிழனெண்டு. என்னையும் விடத் தகுதி குறைஞ்ச சிங்களவரையெல்லாம் எடுக்கிறாங்கள் ஒரு தமிழரையும் எடுக்கேல்லை. தமிழ்ப் பொடியள் எல்லாம் விரக்தியடைஞ்சிருக்கிறாங்கள். சிலர் வெளிநாடு போட்டாங்கள் நானும் போப்போறன்!''

உணர்ச்சி வசப்பட்டுப் படபடவென்று சொல்லி முடித்தான் மனோகரன். அதில் இருந்த உண்மை எல்லோருக்கும் உறைத்தாலும், மகன் வெளிநாடு செல்வதை விரும்பாத மயில்வாகனத்தார் கதையைத் தொடர்ந்தார்.

''அங்கை போலை உனக்கு வேலை தருவாங்களோ?''

''படிப்புக்கேத்த வேலை தராட்டா நான் ஏதாவது ஒரு வேலை செய்து உழைப்பன்.''

''உந்தப் படிப்புப் படிச்சுட்டுப் போய் கூலி வேலை செய்ய உனக்கு வெட்கமில்லையே?''

''இல்லை அப்பா. வேலை செய்து உழைக்கிறத்துக்கு ஏன் வெட்கப்படவேணும்?''

''இந்த நாட்டிலை உன்ரை படிப்புக்கேத்த வேலை தரேல்லை எண்டுதானே ஓடுறாய்! கனடாவுக்குப் போன மட்டும் கூலி வேலை செய்யலாமோ?''

''அப்பா! இது என்னுடைய நாடு. இஞ்சை மற்றவையளோடை எனக்குச் சம உரிமை இருக்கவேணும்! என்னைத் தட்டிட்டு என்னிலும் தகுதி குறைந்தவனுக்கு வேலை குடுக்கேக்கை எனக்கு ஆத்திரம் வருது. கனடா நாட்டிலை எனக்கு ஓர் உரிமையும் இல்லை. நான் அங்கை ஓர் அகதி. அவன் தாற வேலையைச் செய்வன்! சந்தோஷமாய்ச் செய்வன்!''

''எல்லாம் இந்த நாட்டிலும் வேலை கிடைக்குமடா நீ எங்களோடை இரடா தம்பி!'' என்று கெஞ்சினாள் கங்கா.

''அந்த நாட்டிலை வேலை எடுக்கிறதானா நீ அந்த நாட்டுச் சோதினை பாஸ்பண்ண வேணும்'' என்றார் மயில்வாகனம்.

''பாஸ்பண்ணினால் போச்சு!''

''ஏன், அண்ணை அந்தச் சோதினை பாஸ்பண்ணமாட்டாரோ'' என்றாள் மலர்வதனி.

''என்ன மலர்வதனி! கொண்ணன் வெளிநாடு போறதுக்கு நீயும் ஆதரவு போலை?''

''இல்லை அப்பா இஞ்சை படிச்சுப் பாஸ்பண்ணினது போலை அண்ணை அங்கையும் படிச்சுப் பாஸ் பண்ணுவார்தானே எண்டு சொன்னன்''

''எல்லாம் சரியடா தம்பி இப்ப நீ போறதுக்குக் காசு ஆர் தாறது?'' என்றார் மயில்வாகனம்.

''நீங்கள்தான் தர வேணும்''

''எங்களிட்டைக் காசில்லையேடா!'' என்றாள் கங்கா.

''எதை யாவது வித்துச் சுட்டுத் தாருங்கோ அம்மா''

''இருக்கிறதை வித்துட்டு, இவள் மலர்வதனிக்கு எதைச் சீதனமாக் குடுக்கிறது?

''அம்மா! நீங்கள் எனக்கு ஒரு சீதனமும் தர வேண்டாம்'' ''நீ சொன்னாச் சரியேடி வதனி? பொம்பிளைப் பிள்ளைக்குக் கலியாணம் செய்துவைக்கிறதுபெற்றாராகிய எங்களுடைய கடமை''

''கங்கா! இவள் வதனி தமையன் கனடாபோறதுக்கு ஆதரவு'' என்று சிரித்தார் மயில்வாகனம்.

''இல்லை அப்பா! அண்ணை ஆசைப்படுறார் அனுப்பிவிடுங்கோவன் எண்டன்''

''எங்களுக்கு அவனை அனுப்ப விருப்பமில்லையே!'' என்று [illegible]

''அம்மா, நீங்கள் காசு தந்தா என்ன, தராட்டா என்ன நான்போறது போறது தான் ...எப்பிடியும் போவன், நீங்களாகவே அனுப்பிவைக்கிறது நல்லது!''

''நீ போயிட்டா எங்களுக்குப் பிள்ளைஇல்லையேடா!''

''மலர் வதனி இருக்கிறாள் தானே அம்மா?''

''ஆம்பிளைப் பிள்ளை இல்லையேடா'' என்றார் மயில்வாகனம்.

ஆணோ பெண்ணோ, ஒரு பிள்ளையிருந்தால் சரிதானே அப்பா?'' என்று கேட்டுச் சிரித்தான் மனோகரன்.

''ஆம்பிளைப் பிள்ளையும் பொம்பிளைப் பிள்ளையும் ஒண்டாடா?''

''இந்தக்காலத்திலை ஒண்டு தானப்பா!''

''ஆம்பிளைப்பிள்ளை எங்களுக்குக் கொள்ளிவைக்கும், பிதிர்க்கடன் செய்யும்'' என்றாள் கங்கா.

''அந்தக் கடமையைப் பெண்களும் செய்யலாமம்மா இப்ப செய்கிறார்கள்.''

''அதெப்பிடி! ஆண்கள் கொள்ளிவைக்கிறது தானே எங்களுடைய சமய வழக்கம்; நாட்டு வழக்கம்.'' என்றார் மயில்வாகனம்.

''ஏனப்பா, பெண்கள் கொள்ளி வைச்சா எரியாதோ? இது ஆண்கள் அமைச்ச சமுதாயம். அந்தக் காலத்திலை ஆண்கள், பெண்களை அடக்கி ஒடுக்கி வைச்சுட்டு தாங்கள்தான் எல்லாம் செய்யவேணும் எண்டு வைச்சாங்கள். இந்தக்காலத்திலை பெண்கள் வெளிஉலகத்திலை வந்து, படிச்சு முன்னேறி ஆண்கள் செய்யிற எல்லா வேலையையும் செய்கிறார்கள். இந்தக் கடமையையும் நல்லாச் செய்யலாம்!''

''பொம்பிளையளுக்குச் சுடு காட்டுக்குப் போகவும் கொள்ளி வைக்கவும் பயமடா தம்பி'', என்றாள் கங்கா.

''இந்தக் காலத்துப் பெட்டையளுக்கு அதுக்கெல்லாம் பயமில்லை அம்மா. அவளவை தட்டத் தனிய கனடாவுக்கே போறாளவை! உதிலை கிடக்கிற சுடலைக்குப் போகவா பயம்?'' என்று சிரித்தான் மனோகரன்.

''ஓ நான் சுடலைக்குப் போகப் பயப்பிடமாட்டன்!'' என்ற மலர்வதனி ''நாங்கள் கனடாவுக்குப் போறது பற்றிக் கதைக்கத் துவங்கி இப்ப கொள்ளி வைக்கிறதிலை வந்து நிக்கிறம்'' என்று சிரித்தாள்.

''அப்பா நான் இந்த நாட்டிலை இருந்தாலும் சில வேளை உங்களுக்குக் கொள்ளி வைக்க வரமாட்டேன்.''

தந்தையின் முகத்தைப் பார்த்துச் சொன்னான் தனயன்.

''தம்பி ஏன்ரா அப்படிச் சொல்லுறாய்.'' என்றுவியப்புடன் கேட்டாள் கங்கா.

''நான் தென்பகுதிலை தானே வேலை செய்யப் போறன்? அங்கை அவங்கள் என்னைப் பிடிச்சுக்கொண்டு போயிட்டா?''

''அப்பிடி ஏன்ரா பிடிக்கிறார்கள்?'' என்று கேட்டுச் சிரித்துத் தன்னுடைய பயத்தை மறைக்கப் பார்த்தாள் கங்கா.

''அப்பிடி இதுவரையிலை எத்தினைபேரைப் பிடிச்சுக்கொண்டு போயிருக்கிறாங்கள். நான் பேராதனையிலை படிக்கேக்கையும்சரி, கொழும்பிலை இருக்கேக்கையும் சரி பயந்து பயந்துதான் சீவிச்சன்.''

''ஓ, அது ஒரு உண்மையான பயம்தான். அதுக்காக நீ வெளிநாடு போகாதை!'' என்றார் மயில்வாகனம்.

''நான் சுதந்திரமாக இருந்தாலும், வாறதுக்கு பிளேன், கப்பல் வசதியள் இல்லாமல் உங்களுக்கு கொள்ளி வைக்க வர முடியாமலும் போகலாம்''—சிரித்தான்!

''சீச்சீ! அப்பிடிவராது!''

''இப்ப கொழும்பிலும் திருகோணமலையிலும், மன்னாரிலும் எத்தினை பேர் காவல் நிற்கிறான்கள்?''

மயில்வாகனத்தார் வாயடைத்துப் போனார்.

'அப்பா! நீங்கள் என்னைக் கனடாவுக்கு அனுப்பினியளெண்டா நான் அங்கை பத்திரமாய் இருந்து காசுழைச்சுட்டு நீங்கள் அறிவிச்சதும் பிளேனிலை வந்து இறங்குவன் சில வேளை பலாலியிலை வந்து இறங்கினாலும் இறங்குவன்'' என்று சிரித்தான் மனோகரன்.

''அம்மா பகிடிவிடாதையடா தம்பி''

''பகிடி இல்லை அப்பா. இது உண்மை''

''சரி பிள்ளை பத்திரமாய் இருந்துட்டு வரட்டும் நீங்கள் அவனை கனடாவுக்கே அனுப்பிவிடுங்கோ!'' என்றாள் கங்கா உண்மையான மனமாற்றத்துடன்.

''அண்ணையை வெளிநாடு அனுப்புறதுதான் எனக்கும் விருப்பம்'' என்றாள் மலர்வதனி.

''சரியடா தம்பி நீ கனடாவுக்கேபோ!'' என்றார் மயில்வாகனம். ★

## பணம்

பயணங்களை மட்டுமல்ல,
பாதைகளைக் கூட
இங்கே-
பணம் தான் மாற்றுகின்றது...
பாவிகளுக்குப்
பட்டாபிஷேகம்
செய்யும் பணம்
நல்லவர்களை மட்டும்
நட்டாற்றில்
விட்டு விடுகின்றது...
பொய்மைப் பிரபுக்கு
பல்லாக்குத் தூக்குவது
இதன்
முக்கிய பொழுது
போக்குகளில்
முதன்மையானது!
நீதியை நிர்மூலமாக்கும்
பணம்......
அநீதியை மட்டும்
அங்கீகரித்து-
முடிந்தால் அதற்கு
அரண்மனையையும்
கட்டிக் கொடுக்கின்றது!
இலாபமே
பணத்தின்
இன்றியமையாத
இலட்சியம் ...!
எனவே -
பாவமே இங்கு
பாரிய மூலதனம்!

த. விஷ்ணுவர்த்தன்.

## புதுக்கவிதை

''நிலா நிலா ஓடி வா'' என்ற
பழைய பாட்டியை
நகைத்து விட்டு
சந்திரனில் கால்பதித்த
''ஆம்ஸ்ரோங்கின்''
பாதங்கள்...!!

வேர்த்துக் கொட்டிய
அரச பிணங்களுக்கு
சாமரங்கள் வீசிய
விதண்டாவாதிகள்
விம்மி வெடிக்க...
பிரசவித்த
பாமரக் குடிசையின்
பனை விசிறி...!

எட்டயபுரத்து
ஏக்கக் கனவுகளை
அக்கினிவரிகளால்
அறிமுகம் செய்த
திராவகச் சிந்தனையின்
தீண்டாமை ஒழிப்பு!

தாலாட்டுப்பாடும்
தந்திரவாத
ஆதிக்க உலகின்
அக்கிரம வக்கிரங்களை
அறை கூவும்
சங்கநாதத்தின்
திருப்ப ளி எழுச்சி...!
அன்பு எதிரிகளே!!
உங்கள் யாப்புறை வாளை
எம் மீது வீசாதீர்கள்......
நாங்கள்,
''பீனிக்ஸ்'' இனத்தின்
பிந்திய வாரிசுகள்

— உச்சிற்கிழான் —

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிதை முற்றம்

## மிதிவெடிக்குச் சபிப்போம்....!

பயபக்தி யோடே நீ பார்த்து நட; எங்கும்
அயர்ந்திருந்து விட்டு அதிர்ந்து — உயிர்ச்செடியின்
வேர் பிடுங்கித் தின்னும் மிதிவெடிகள் 'ஒகோ''ன்று
வாழுகின்ற மண்ணுனக்கேன் வம்பு?

கால்குசியைக்' கண்டுவிட்ட கண்ணி ... வகைவகையாய்க்
கால்குசிக்கக் காத்துக் கெலியோடு — மூலை யெல்லாம்
பார்த்துனது; பற்றை, படியடியை, நீ வணங்கிப்
பார்த்திடில்லை ... போகும் 'பதம்'

காலால் உலகளந்து கையால் புவிபுரட்டும்
வாலிபரும் வீழ்ந்தார் வெடிவலையில் — வேலியிலே
தங்கி வளர் கொடியாய் ''ஜெய்ப்பூர்ச்'' செய் சோல்பிடித்து
மன்னர் பலருள்ளார் மாய்ந்து!

முற்றத்தில் தாவி முருங்கைக்காய் ஆயவந்த
கற்பகத்தின் குஞ்சுக் கவிக்கால்கள் — குற்றமென்ன
செய்தது சொல்? குண்டு சிதைத்ததுகாண்! எம்மண்ணில்
கையளைய ஏன் நமக்கே கட்டு?

ஓர் நொடிக்கு முன்னே உலாத்தியகால் ... ஓர்வெடிக்குள்
பாறும். பழிதொடரும். போர்செழிக்கும் — ஆரிந்த
''எது மறியாரின்'' இழப்புக்கு ஈடுசெய்வார்?
சேதத்துக்கார் சொன்னார் தீர்வு?

''கண்ணி ஒழிப்பென்று'' கத்துவோரன்: முன் நம்மூர்க்கு
''எண்ணி அனுப்பியவை'' இன்று வரை — பண்ணும்
கொடுமை யெண்ணான்! நாங்கள் 'குலைந்தவர்' கை பற்றி
''வெடியொழிக'' என்றோம் வெந்து!

- அருணன்.

## ஒரு ஜீவாத்மாவின் குரல்

என்னை உனக்குத் தெரியாதிருந்தது.
அதனால்தானே . என்னை ஆராய்ந்தாய்.
உன்னை எனக்குத் தெரிந்திருந்தது.
ஒரு பார்வை — ஒரு அசைவு — ஒரு செயல் —
உள்ளுணர்வில் அனைத்தும் நானறிவேன்.
ஆருயிரே!
அந்தராத்மா பரமாத்மாவிடம் கொண்டது காதல்.
ஆண்டாள் ரங்கநாதரிடம் கொண்டதும் காதல்.
காதல் என்பது ஒரே ஒரு நிலைதான்.
அடையப்பெறாத ஆசை நிலையது.
உன்னைநான் காணாமல் போகலாம்.
காண நேர்கையில் கண்கள் மங்கியுமிருக்கலாம்.
நமது நட்புக்கு சௌந்தர்யம் காரணமல்லவே......
அடைவதிலும்,
அடையாமலிருப்பதே ஆனந்தம்!
கிடைப்பதிலும்,
கிடையாமலிருப்பதே பேரின்பம்!
இப்போது அறிந்தாயா?
அறிய ஒன்றுமில்லையென்று,
அன்பே!
ஆராய்ச்சி செய்யாதே —
அன்பு செய்யக்கற்றுக்கொள்!

— சந்திரா தனபாலசிங்கம்.

## விடுதலையின் இரகசியம்

களங்க மில்லாப் பார்வை
கனிவான வார்த்தைகள்
உணர்வுள்ள செயற்பாடு
உவகைதரும் உள்ளம்
விடுதலைக்கு
இவையெல்லாம் வித்துக்கள்.

என்னுள் சென்று நான்
எனில் செய்யும் மாற்றங்கள்
உள்ளத்து விடுதலைக்கு
உந்துதலாய் அமைந்து விடும்.

அறிதலால் ஆர்வமும்
உணர்வதால் ஊக்கமும்
ஊக்கத்தால் செயற்பாடும்
விடுதலைக்கு வழிசமைக்கும்.

உண்மையைத் தேடுதல்
உண்மையைக் கண்டடைதல்
உண்மையைச் செயற்படுத்தல்
உயர்வுக்கு வழிகாட்டும்.

தவறுகள் திருத்தப்பட வேண்டும்
நியாயப் படுத்துவதால் அவை
நிதர்சனம் ஆகி விடாது!
நிகழ்காலம் நடந்திடலாம்,
நிம்மதிக்கு வழியே இல்லை.

உணர்வுகள் மதிக்கப்பட்டால்
உறவுக்கு வழி பிறக்கும்
உறவுகள் பேணப்பட்டால்
வாழ்வுக்கு வழி பிறக்கும்
உறவுகள் பகிரப்பட்டால்
விடுதலைக்கு வழி பிறக்கும்!

— அபிராஜன்.

## இருள் விழுத்திய குரல்

காலம் விழுத்தியிருக்கிறது
சில துண்டு முட்களை,
நம் இதயத்தின் மீது
சின்னனும் பெரியதுமாக,
வலிமை மிக்கதாக,
ஒவ்வொரு வடிவிலும் பெயரிலும்.
அவை
மனச்சாட்சியின் முனைவரை
ஊடுருவிப் பாந்திருக்கின்றன.
சிலுவையிலறையப் பட்டதாய்
நமது இதயம்
செயலற்றுத் தவிக்கிறது.
கோபம் வரும் போது முடியவில்லை
அவஸ்தைப்பட்டு
வெந்து மறுகி விட்டுச் சோர்கிறது.
இரக்கமும் கூடவில்லை.
வலி கொண்டு அழுதழுது தேறுகிறது.
துடிப்பில் எந்த லயமுமில்லை
தன்னிருப்பைச்
சொல்லவும் வகையில்லை அதற்கு!
யாரிடமிருக்கிறது
நைந்து போகாத ஒரு இதயம்?
காலஞ் சபிக்காத
அந்த மனிதனைக் காண ஆசை!

- இயல்வாணன்.

## எரிந்த இதயம்

ஒரு மழை கவிந்த
நிலாக் காலத்தின்
மௌனம் மிளிர்ந்த தூறல்களாய்
வசீகரத்திலூறிய
மௌனப் பொழிவின்
அர்த்தப் பரிபாஷையாய்...
உன்
சிநேகிதமான முறுவலிப்பு...!

நீர் முத்துக் கோத்த
வேப்பந்துளிர்கள்
காற்றிலாடி, நீர் தெளித்து
ஆசிர்வதித்ததாய்
ஓர் ஞாபகம்...!

மழை இழந்த
பொழுதுகளாயிற்று இன்று!

அமுதத் துகள் களின்றி
வறண்டு போயிற்று வானம்...!

வேம்பு சருகுகளோடு
சதிராடிக் கொண்டிருக்கிறது...!

காற்றுக் கிழித்த வாழையிலையாய்...
காலம் கிழித்துப் போட்டது
என் இதயத்தை...!

- தாட்சாயணி.

## நினைவுச் சுழலிலே

நெஞ்சுக் கூட்டினுள் வெண்புறா பறந்திட
நினைவு தன்னிலே சுகந்தம் பரவிட
கொஞ்சும் மன அலை குதூகலம் பாடிட
குழந்தை போல நான் மகிழ்ந்து
போயினேன்
அஞ்சும் நினைவுகள் அகன்று போகவே
ஆனந்தமெங்கும் வெள்ளமாய் பாயவே
பிஞ்சு மனத்தவர் பிழிந்த அன்பிலே
பிரியமாய் நான் கலந்து போயினேன்.

விழிகள் நீரினால் நிறைந்து பனித்திட
விந்தையோ என மனம் தவித்திட
வழியெலாம் பூ வாரி இறைத்திட
வாடும் நினைவுகள் அகன்று போயினேன்.
பழியுரைத்தவர் பழங் கதைகளும்
பாய்ந்து எங்கோ ஓடி மறைந்திட
மொழியிழந்துமே, மூச்சிரைக்கவே
மூழ்கும் அன்பிலே தோய்ந்து போயினேன்.

சோலை அருவியின் சுகம் நிறைந்திட
சோதனை தொல்லைகள் போய் அகன்றிட
பாலை நினைவுகள் பறந்திட நெஞ்சிலே
பாலை ஊற்றியே பாசமூட்டினர்.
காலை வேளையில் காட்டிய அன்பிலே
காளை இதயமும் கண்ணீர் வடித்தது
மாலை வேளையில் சூட்டிய மாலையில்
மனதும் இதயமும் மாறித் துடித்தது.

நினைவு எங்கணும் நிலவு மூடிட
நிஜங்கள் நெஞ்சிலே நிழலாய் ஆடிட
மனமெல்லாம் மத்தாப்பு சிறிட
மழலை போலவே மாறிப் போயினேன்
நனவெலாம் ஒரு கனவாய் ஆகிட
நரம்பு முளைகளும் நாதம் இசைத்திட
புனைந்த செண்டுகள், பூச் சரங்களில்
பூக்கும் நினைவுகள் சுமப்பவன் ஆயினேன்!

— நெருப்பு நிலா.

## சிரிப்பு பூசிய தேசம் செய்வோம்!

நேற்றிருந்ததை எண்ணநெஞ்சிலே
நிச்சயம் கனல் மூளும் தானடா!
ஏற்ற வாழ்வது ஏழை வாழ்வென
இங்கு மாறிய தெங்கள் சாபமா?
ஊற்றடைத்துள ஊரில்... மாரி வந் (து)
ஊற்றி; எம் தணல் நூர்த்து வாழ்த்துமா?
கூற்றின் கொட்டிலாய்ப் போன மண்ணிலே
குருதி வற்றி... மெய் குட்டிபோடுமா?

குண்டின் கர்ச்சனை நிற்கவில்லையே!
குஞ்சு நித்தியம் தீயில் வெந்ததே!
வண்ணம் மாறிய வாசலில் எழும்
மரணக் கூக்குரல் மாழவில்லையே!
சண்டையால் சமாதானம் செய்திடும்
தத்துவம் ''நொடி'' போடுதே! அட,
இன்னும் கானலே கண்முன் நீளுதே!
எரிக்கும் போர்வெயில் நாவை வாட்டுதே!

பெத்த மண்ணிது! பிச்சைக் காரிபோல்
பிணியில் வாடநாம் கனவு காண்பதோ?
நித்தம் ஆயிரம் நேர்த்தி திர்ப்பம், வா...
நெக்குருக்கி 'மன்றாடி' நிற்பம்;... கேள்
எத்தனை விரதங்கள் உள்ளதோ...
அத்தனை பிடித் தமைதி வேண்டுவோம்!
'செத்த' நேற்றுகள் செத்துப் போகட்டும்
சிரிப்புப் பூசிய தேசம் செய்குவோம்!

— தேரடிச் சித்தர்

## ஊர்க்கதை பேசும் ஊர்க் குருவிகள்...

ஊர்க்கதை பேசும் ஊர்க்குருவிகள்,
ஐந்தறிவு ஜீவன்களா?
சந்தேகந்தான்.
என்றாலும் அவர்கள்,
ஆறறிவு ஜீவன்கள்தான்.
குணத்தாலல்ல உருவத்தால்.
அவர்கள் வாய்திறந்தால்,
வார்த்தைகள்,
சரளமாகவே வெளிவரும்.
தம்மைப்பற்றியல்ல,
தரணியிலுள்ளோரைப்பற்றி.
தம் குற்றம் கண்ணிற்
படுவதில்லைப் போலும்,
தாமெல்லாம் உத்தமர்கள்.
புடம் போட்ட தங்கங்களென்று
தமக்குள் ஓர் எண்ணம்.
யாருக்குத் தெரியும்
கத்தரிக்காயின் சூத்தை.
எல்லாமே வெளிவேஷம்.
காதலைப்பற்றிக் கதைக்கவே,
அருகதையற்றவர்
கதாபாத்திரங்களின் பெயர்களிலொன்றைக்கூ
மாற்றிவிடுவர்.
ஏனெனில் ஒரேவிடயத்தில்
பலபேரைப்பற்றிக்
கதைக்கலாமல்லவா?
வீணர்களின் வீண்வார்த்தையால்,
விசர்கூட வந்துவிடும்
சிலர்க்கு
ஊர்க்கத்தை பேசுவோர்க்கு,
முதுமாணிப் பட்டமென்றால்
கிடைத்துவிடும் அனைவர்க்கும்.

- தேனுகா பத்திநாத

## வெள்ளையுடை பூண்ட விளக்கு

காற்றுக் கரவணைப்பைக் கற்பித்த மாதாவே
சேற்றையும் சந்தனமாய் செய்பவளே—தேற்றுதற்
நாதியற்ற வர்க்குதவும் நற்றாயே நம்மிறைவர்
தாதியெனக் கேட்டார் தமக்கு.

அன்னைமே ரிக்கும்நீ அன்னைதான் அன்றாடம்
தின்ன உழைக்குமித் திக்கற்றோர்—மன்றாட்டம்
தேவர்கு முன்னுன் திருச்செவிக்கு கேட்டிடுமே
தேவதைக்கு நீயே தெளிவு.

சில்லறைக்கு மட்டுமிங்கு சேவைமனப் பான்மை
கல்லறைக்கு மண்போடக் காசுதான்—வல்லவளே
எங்கே பிறந்துலக ஏழ்மைக்குத் தாயாகி
மங்காது நின்றாய் மரித்து.

கன்னியோ இஸ்திரியோ காதலுக்காய் மட்டுந்தா
என்றிருந்த கோலம் எடமாற்றி—கன்னிநீ
அஸ்திரமாய்ப் பாய்ந்து அவலங்கள் நீறாக்கி
புஸ்பித்தாய் பூமி புதிது.

கண்ணகியால் ஒன்றைக் கனலாக்கத் தான்முடி
உன்போல் அமைதிப்பூ உண்டாக்கான்—தொண்ட
முள்ளை மலராக்கும் மூதாட்டி நீயுலகின்
வெள்ளையுடை பூண்ட விளக்கு!

- ச. முகுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொம்பியூட்டர் காதல்

இரண்டாயிரம் ஆண்டளவில்
இணையும் இரு உள்ளம்-
இத்தனைக்கும் காரணம்
''இன்ரர் நெற்'' அமைப்பாம்!

கொம்பியூட்டர் வந்தது.
கடின வேலைகள் ஒழிந்தது.
கணக்கு முதல் பிணக்கு வரை
கழிந்தது கொம்பியூட்டர் உதவியால்!

இத்தனைக்கும் மத்தியில்
இனிய ஒரு காதல்.
இனி வரும் காலங்களில்
இரு உள்ளங்களை
இணைத்து வைக்கும் கொம்பியூட்டர்!

- ஏழாலை கோகு

## பைத்தியக் காரனின் பகவத் கீதை

தர்மம் தவறிய அருச்சுனர்களே!
வாழ்க்கைக் குருஷேத்திரத்தில்
வசந்தம் வீச — உங்கள்
வெடிகுண்டுகளின் பூபாளம்
வேலை நிறுத்தம் செய்யட்டும்!

புயற் காற்றும் — இந்த
புழுதிகளின் புலம்பலை
காதில் கடன் வாங்கட்டும்!

ஆடைகளின் சாம்ராஜ்யத்தில்
அம்மணமானவர்களே
பட்டுப்புடவை பற்றியேன்
பட்டிமன்றம் செய்கிறீர்கள் ... ?

பாண்டவமாதாவின்
வார்த்தைகளில் மட்டும்
சமாதானப்புறாவின் சாயல்கள் ...
வழித்தடங்களில் ஏனோ
போர்க்கழுகின் கீறல்கள்!

விதைப்பு நடாத்த விரும் பாதவர்கள்
அறுவடை பற்றி இங்கு
ஆராய்ச்சி செய்வதால் ...
கனவிகளில் கல்லறைகள்
கருத்தரிக்கின்றன!

இந்தப் போர்க்கத்திகள்
மொட்டையாகும் வரை போராடும்
சமாதானச்சீப்பு முத்தமிடும் போது
வாலிப நினைவுகளில் ...
வழுக்கைக் தலைகள்!

— உச்சிற்கிழான்.

## உவந்து ஒன்றாய் வாழுவோம்!

உலக மக்கள் உள்ளமொன்றி உவந்து ஒன்றாய் வாழுவோம்.
துலங்கும் நல்ல உறவுபூண்டு துயரமென்றும் போக்குவோம்
வாழவிட்டு வாழும் கொள்கை வளத்திலின்பம் பேணுவோம்
நாளுமிந்த நாட்டுவாழ்வே நம்மதென்று நாட்டுவோம்!

கூட்டுறவுக் கொள்கைபேணிக் நதா கலித்து வாழுவோம்
வீட்டுறவில் அன்பை என்றும் விதைத்து இன்பம் காணுவோம்
நாட்டுயர்வுக்காக நம்முள் ஒற்றுமையை நாட்டியே
வாட்டுகின்ற சாதிபேத வர்க்கவாதம் நீக்குவோம்!

இங்குரிமை நாட்டிவாழும் எவருமிந்த மண்ணிலே
தங்கிவாழ வழிவகுத்துச் சாந்தமாக உலாவுவோம்
எங்குமென்றும் இன்பமோங்க எல்லோருமே வாழுவோம்.
சங்குகொண்டு சத்தியமே தழைக்கவென்று ஊதுவோம்.

மனிதநேய மாண்புதன்னை மதித்துச் சகிப்புத் தன்மையால்
புனிதமான சூழ்நிலையைப் பூரிப்போடு ஆக்குவோம்
தனிமனித சுதந்திரத்தைச் சமரசமாய் (ப்) பேணுவோம்
கனிவினோடு கண்ணியமாய் (க்) கல்விமூலம் சொல்லுவோம்!

பிறக்கும்போது எவ்வினத்தில் எம்மதத்தில் என்பதை
துலக்கமாக எமக்கு யாரும் சொல்லிவைத்த தில்லையே
இறங்கும்போதும் எங்குசெல்வ தென்றுமக்குத் தெரியுமா?
சிறக்கும் மனித உயிர்களெல்லாம் ஒன்று என்று போற்றுவோம்.

மண்ணில் நல்ல வண்ணமாக வாழும் நல்ல வகையினை
எண்ணியந்த இயற்கைநீதி எமக்களித்து நிற்குதே!
பண்ணும்பணியில் வேற்றுமைக்குள் ஒற்றுமையைக் காட்டியே
திண்ணமாக அமைதிகாத்துச் சினத்தைத் தூர அகற்றுவோம்!

ஒருவர்துன்பம் இன்னல்யாவும் உணர்ந்து உள்ளம் பரிந்துமே
பெருகும் தூய மனத்தினோடு பிரியமாக உதவுவோம்
அருகிலுள்ள அயலவர்கள் நண்பர்மற்று யாவரும்
கருணையோடு வாழ்வதற்குக் கடவுளாசி வேண்டுவோம்.

கல்விச்சாலைதோறும் நல்ல கடமைஉணர்வை அகிம்சையைச்
சொல்லித்தந்து ஒழுக்கம்பேணி நன்னடத்தை பேணுவோம்
அள்ளித்தந்து கல்வியூட்டும் அனைவரையும் போற்றுவோம்
துள்ளித் திரியுஞ் சிறுவர்க்கெல்லாம் தூய அன்பை ஊட்டுவோம்!

மனிதவளத்தை மதித்துமாண்பு மகத்துவங்கள் சேரவே
கனிவாய்ஒருவர் ஒருவர்க்காகக் கைகொடுத்து உதவியே
பணிபெருக்கி இயற்கைதந்த பலவளங்கள் பகிர்ந்துமே
இனியெவர்க்கும் இல்லையென்ப தில்லையேன்று மகிழுவோம்!

- யுனெஸ்கோ பாடல்
(யாழ். கல்வி வலயம் — 1)

# இருமலைக் கோபியாதீர்!

## அது உடற்பாதுகாப்புச் செயன்முறை

இருமல் மிகவும் பிரபல்யமானது. அனேகர் சும்மா என்றாலும் அல்லது மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவேனும் இருமிக் கொள்ளுவார்கள். சாதாரணமாய் மிளகாய் வறுப்பவர்களின் இருமலிலிருந்து சுவாசக்குழாய் கான்சர் ஏற்பட்டவர்களின் இருமல் வரை தீவிரம் வேறுபடுகிறது.

இருமல் நோயல்ல; வேறு ஒரு நோயின் அறிகுறி. மிளகாய்த்தூள் விடயங்களில் உடலில் அது ஒரு சாதாரண நிகழ்வு. ஆனால் தொடர்ச்சியாக களைத்துப் போகும்படி இருமி சளியைத் துப்பிக் கொண்டிருக்கிற நிலையில் இருமல் பயத்தைத் தருகிறது.

இருமலைக் கோபிப்பதில் அர்த்தமில்லை; ஏனெனில் அது உடலின் ஒரு பாதுகாப்புச் செயன்முறை. எங்களுக்கு அது உதவி செய்கிறது எப்படி? சுவாசக் குழாயை அடைத்துக் கொள்ளுகின்ற சளியை வெளியேற்ற உதவுகிறது. இருமலில்லையென்றால் குழாய் போட்டுத் தான் சளியை வெளியேற்ற வேண்டி வரும்.

இருமல் எப்படி நிகழ்கின்றது? எங்களையறியாமல் சில சமயம் நாங்கள் சடுதியாக இருமுகிறோம். அது மிளகாய்ப்பொடி, சளி போன்றவற்றின் வேலை. சில சமயம் நாங்கள் மேற்சொன்னபடி விரும்பி இருமிக் கொள்வதுண்டு.

சுவாசக்குழாயின் சுவரில் சின்ன உறுத்தலுடன் இருமல் தொடங்குகிறது. நாங்கள் காற்றை உள்ளெடுத்து சுவாசப்பைகளை நிரப்பிக் கொள்ளுகிறோம். வெளிச் செல்லும் பாதையை மூடி நெஞ்சுத் தசைகள் சுருங்குகின்றன. நெஞ்சுக் கூட்டினுள் காற்றின் அமுக்கம் கூடுகிறது. பின்னர் சடுதியாக சைக்கிள் காற்றைத் திறப்பது போல மூடியைத் திறக்க காற்று வேகமாக சளி, வேறு துணிக்கைகளையும் இழுத்துக் கொண்டு வெளியேறுகிறது. எவ்வளவு வேகத்தில் தெரியுமா? மணிக்கு 600 மைல் என்ற வேகத்தில். உண்மையில் ஒரு குழாயில் உள்ள அடைப்பை எடுப்பதற்கு ஊதுவது போல இது நடைபெறுகிறது.

இருமல் நோயின் அறிகுறிகளல்லவா? இருமலின் தன்மையைக் கொண்டு மருத்துவர் நோயைக் கண்டுபிடித்து விடுவார். இருமலோடு சளி ஏதும் வெளியேறாது வறட்டு இருமல்கள் சில வியாதிகளில் காணப்படும். சளியோடு கூடிய இருமல்களில் சளியின் தன்மை நோயை இனங் கண்டுபிடிப்பதில் உதவும்.

சிகரெட் புகைப்பவர்கள் காலை வேளைகளில் அனேகமாக இருமுவார்கள். ஆஸ்த்மா தொந்தரவுள்ளவர்கள் இரவு வேளைகளில் கடுமையான இருமல்களுக்கு ஆட்படுவார்கள். நாளுக்கு நாள் கடுமையாகிக்கொண்டு போகின்ற இருமல் சுவாசப் புற்றுநோயில் காணப்படும்.

சாதாரணமான இருமலிலிருந்து மிகக் கடுமையான நோய்க்கு அறிகுறியாகவும் இருமல் காணப்படும். தொடர்ச்சியாக சில சுவாசத் தொற்றுநோய்கள் ஏற்பட்ட பின்னர் சளி வெளியேறும்வரை இருமல் நிலைத்து நிற்கும். அதற்கு மேல் வாரக் கணக்கில் இருமல் தொடருமாயின் வைத்தியரிடம் ஆலோசனை பெற வேண்டும்.

நீண்ட நாள்களுக்கு இருமலுடன் சளி, காய்ச்சல், களைப்பு நிறை குறைவு போன்ற வேறு அறிகுறிகள் தென்பட்டாலும் அது ''காசம்'' போன்ற நோயாக இருக்கலாம். இருமலுடன் மூச்சுவிடுதலில் சிரமம் இருப்பின் ஆஸ்த்மாவின் ஆரம்பமாகவும் இருக்கலாம்.




## நோயற்ற வாழ்வு - 2

இருமல் மருந்துகள் இருமலின் தாக்கத்தைக் குறைக்க மட்டும் உதவுகின்றன. தொண்டையில் ஏற்படும் உறுத்தல்களை குறைப்பதற்கும் சளியை இளகச் செய்து விரைவாக வெளியேற்றுவதிலும் வரட்டு இருமல்களைத் தணித்து தாக்கத்தைத் தருவதிலும் தான் அனேக இருமல் மருந்துகள் உதவி செய்கின்றனவே தவிர அடிப்படையாக இருக்கும் நோயைக் குணப்படுத்துவதில்லை.

நாட்பட்ட இருமல்களை அப்படியே விடுவது நல்லதல்ல. சரியாக வைத்திய ஆலோசனையைப் பெறுவது நன்மை பயக்கும்.

**-அ. கிருஷ்ணேந்திரன்**
4 ஆம் வருடம்
யாழ். மருத்துவ பீடம்.

பொதுவிடங்களில் இருமுகின்றபோது சிறு துளிகள் மூலம் நோய் பரவும் அபாயம் இருக்கிறது. எனவே இருமும்போது மற்றவரின் முகத்துக்கு நேரே இருமாது கைக்குட்டையால் மூடி இருமுவது மற்றவர்களுக்கும் உதவியாக இருக்கும். ★

# புதிய ஜீன் சிகிச்சை முறை

## அமெரிக்காவில் கண்டுபிடிப்பு

பெற்றோரிடமிருந்து சில சீரற்ற பரம்பரை அலகுகள் கடத்தப்படுவதால் பிள்ளைகளின் நோய் எதிர்ப்புத் தொகுதி பாதிப்புற்று அவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர்.

அமெரிக்க தேசிய சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் இவ்வகைக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஒரு புதுவகை சிகிச்சையை பரீட்சார்த்தமாக மேற்கொண்டனர். மனித உடலில் உள்ள நோய் எதிர்ப்புத்தொகுதியில் இருந்து கலங்களை வெளியகற்றி அவற்றை சிகிச்சை மூலம் சரி செய்து திரும்பவும் அக்கலங்களை உடலில் செலுத்தி ஆராய்ந்தனர். நோயாளியின் உடல்நிலை அதிசயிக்கத்தக்க விதத்தில் தேறிவந்தது அவதானிக்கப்பட்டது.

இப்புதிய ஜீன் சிகிச்சைமுறை உலகிலே பெரும் புரட்சியை உண்டு பண்ணியிருக்கிறது. இன்றுவரை எந்தச் சிகிச்சை முறைக்கும் கட்டுப்படாதிருக்கும் பல்வேறு வகை நோய்களையும், இச்சிகிச்சை மூலம் தீர்த்து வைப்பது சாத்தியம் என்று டாக்டர்கள் கூறுகின்றனர். சீரற்ற ஜீன்கள் பிழையான அளவில் புரதத்தை உற்பத்தி செய்வதாலேயே நோய் உருவாகிறது. உடற் பாதுகாப்புத்தொகுதியிலுள்ள ஒன்று அல்லது பல ஜீன்கள் சீரற்றனவாக இருப்பதனாலேயே எயிட்ஸ், புற்றுநோய், குருதி அமுக்கம் இருதயக் கோளாறு போன்ற கொடியநோய்கள் மனிதகுலத்தைப் பீடிக்கின்றன.

பரம்பரை அலகில் குறிப்பிட்ட ஒரு புரதவகையே உடற்பாதுகாப்புத் தொகுதிக்குத் தேவைப்படுகிறது. அவை உடல் இயக்கத்துக்கு அத்தியாவசியமானவை. குருதியிலுள்ள கொலஸ்ரோலின் அளவை ஈரல் கலங்கள் உற்பத்தி செய்யும் ஒருவகைப் புரதமே கட்டுப்படுத்துகிறது. இவ்வகைப் புரத உற்பத்தி பாதிக்கப்பட்டால் குருதியில் கொலஸ்ரோல் அளவு அதிகரித்து பல்வேறு இருதய வியாதிகளும் பீடிக்க இடமுண்டு.

சமகாலத்தில் இவ்வகை நோய்களை உருவாக்குவதற்குரிய புரதத்தின் கட்டமைப்பு பற்றிய அறிவு போதிய விருத்தியடையவில்லை. ஆயினும் எதிர்காலத்தில நிச்சயம் இவை பற்றிய அறிவு விருத்தி அடையும்.

பழுதடைந்த கலங்களுக்கு ஆரோக்கியமான ஜீன்களை அனுப்புவதற்கு பல முறைகள் ஆராயப்படுகின்றன திருத்தி அமைக்கப்பட்ட வைரசுகளை ஜீன் காவிகளாகத் தொழிற்படுத்துதல் சிறந்த முறையாகக் கணிக்கப்படுகிறது. நேரடியாக ஜீன் காவிகளை மனித உடலில் ஏற்றிச் சிகிச்சை அளிக்கும்முறை நடைமுறைக்குவர இன்னும் சில வருடங்கள் பிடிக்கலாம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் புதிய ஜீன் மாற்றுச் சிகிச்சை முறை நடைமுறைக்கு வரும் பட்சத்தில் இன்று வைத்திய உலகிற்கு சவால் விடும் கொடிய நோய்களான எயிட்ஸ், புற்றுநோய் இருதய நோய்கள் அனைத்தையும் வெல்வது சாத்தியமாகிவிடும்.

ஒரே பரம்பரைக்குள் மாறி மாறித் திருமணம் செய்து கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருக்கும் கீழைத்தேச நாட்டு மக்களிடையே பரம்பரை வியாதிகள் பரவ இந்த ஜீன்களே காரணமாகின்றன.

உறவினர்களிடையேயான திருமணங்கள் மேலை நாடுகளில் தவிர்க்கப்பட்டு வருகின்றன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வெள்ளம்

அவரவர் மனம் போலவே வாழ்க்கையும் அமையும். நல்லவனுக்கே நற்கதி கிட்டும் என்பது அனுபவ வாயிலான உண்மை. குறைந்த பட்சம் அவன் மனம் நிம்மதியாக ஆதல் இருப்பான். மனது நிம்மதியால் நிறையாத போது வாழ்க்கையில் என்ன இருந்தும் என்ன சுகம்?

நல்ல விதையைக் கொண்டு போய் குப்பை மேட்டில் எவரும் வீசிவிட மாட்டார்கள். தகுந்த இடம் தேடி நாட்டிப் பராமரிக்கவே விரும்புவார்கள்.

மதயானைகள் போன்ற ஐந்து புலன்களை — அடக்கிட வழி தெரியாமல் — ஆசைப்படி அலையவிட்டு — மோதவிட்டு அவஸ்தையை விலைக்கு வாங்கிடல் வேண்டாம். அறிவென்னும் (உரன்) — அங்குசத்தால் — தோட்டியால் அந்த மதயானைகளாகிய புலன்களை அடக்கிடல் வேண்டும்.

அப்படி நெறிப்படுத்தி விடுபவனே மனிதன். அவன் நல் விதை போலாவான். பெருமைக்கும் சிறப்புக்கும் உரிய இடத்திலே அவன் விதையாக விழுந்து விருட்சமாய் வளர்வான். புலன் அடக்க மாட்டாதவனே — ஆசைகளால் ஆட்டப்பட்டு அழிவினைச்சந்திப்பான்

**உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து**

—0024

சமயக் கதைகள் பாடம் புகட்டும் அகலிகை விடயத்திலே ஆசை வழிப்பட்டு. இந்திரன் வந்து புலனடக்கத்தில் வலிய கௌதம முனிவனுடன் மோதிப் பார்த்தான்.

அகல் விசும்பின் — அகன்ற பரந்த ஆகாயத்தின் கண் உள்ளவர்களின் கோமானாக — அரசனாக இருந்தும் இந்திரன் ஏன் தோற்றான்? புலன் அடக்க வழி இன்றி ஆசைவழி அறிவு மயங்கி மாதிடம் வந்து வசமாக மாட்டிக் கொண்டான்.

புலன் அடக்கி மன வலிமை பெற்ற முனிவனின் ஆற்றல் — தேவர்களின் அரசனின் ஆற்றலை வென்றே நின்றது. இதனால் இந்திரனே முனிவனின் ஆற்றலுக்கு ஒரு சாட்சி ஆகிறான்.

**ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்**
**இந்திரனே சாலும் கரி.**

—0025

(நீத்தார் பெருமை)

- அம்பிகைபாகன் -

# இந்த வார இராசி பலன்

**(01 - 11 - 1997 முதல் 07 - 11 - 1997 வரை)**

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கே | இராசிச் சக்கரம் | | |
| வி | | | ரா |
| | செ வெ | சூ புத சந் | |

மாற்றம்:
விசாகம் — துலாம் இராசியில் மாற்றம்.

அரசியலில் பலவித அபிப்பிராய பேதங்கள் ஏற்படும். வெளிநாட்டாரின் தலையீடுகள் அபிப்பிராயங்கள் திடீரென திசை மாறிப் போகும். பிரச்சினைகளைக் கூட்டி சிலர் புகழ் தேட முற்படுவர். இந்திய அரசியலில் வடபகுதியில் அழிவுகள், புதிய பிரச்சினைகள் ஏற்படும். கிழக்கு நாடுகளில் ஏற்படும் தாக்கம் மேற்கு உலகில் பாதிப்பை ஏற்படுத்தும். மத்திய கிழக்கு நாடுகளில் யுத்த மேகம் கருக்கூடும். அமெரிக்க ஆதிக்கம், செல்வாக்கு அதிகரிக்கும்.

**மேடம்:** நீங்கள் எடுத்ததற்கெல்லாம் அபிப்பிராயம் சொல்லுகிறீர்களாமே? ஏன் இந்த 'விபரீத விளையாட்டு'? எல்லோரையும் பகைக்கவா பார்க்கிறீர்கள். உலகத்தில் இனிக்க இனிக்கப் பேசி காரியமாற்றாவிடில் உங்கள் அலுவல்களை அனுகூலமாக்கமாட்டீர்களே. தொழில் ஸ்தானத்தில் மந்தநிலை இருக்கச் செய்யும். அதற்காக முயற்சிகளை விட முடியுமா? இந்த உலகில் உங்களை எல்லோரும் நல்லபடி சொல்வார்கள் என எதிர்பார்க்காதீர்கள். சொல்லுபவர்கள் சொல்லட்டும் நீங்கள் நிதானமாக நடந்து வாருங்கள். பெற்றவரும் — கூடப்பிறந்தவர்களும் குறை சொல்லலாம். பொருளால் அடிக்கடி யோசனை, வேதனை வரச் செய்யுமாம். காலமறிந்து செயற்படுங்கள். அதனால் ஓரளவு சமாளிக்க முடியும். எதிர்ப்பாலாரால் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். பிரயாணங்களால் இழப்புக்கள் வரும். தவிர்த்துக்கொள்வது நல்லது. இடைக்கிடை அலைச்சல் கொடுக்கும். மழைகாலம் விஷஜீடைகள் வர இருப்பதனால் கவனமாக இருக்கவும். ஏழரைச் சனி இருப்பதை மறந்துவிடக்கூடாது. சனீஸ்வரனுக்கு பிரீதிசெய்து வரவும்.

★ அதிர்ஷ்ட திகதி: 5, 6, 7
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி

**இடபம்:** என்ன உங்களுக்கு கொஞ்சம் அதிர்ஷ்டம் வருமாமே.? மாற்றங்கள் சகஜம். இடமாற்றங்களால் தொழில் விஷயங்களில் நன்மைகள் ஏற்பட இடம் உண்டு. எதிரிகள் என்னதான் செய்ய முடியும்? உரிமையைக் கேட்டால் பயங்கரவாதிகள் எனக் கூறும் உலகில் உண்மை நிலை கண்டு கொதிப்படையாமல் என்ன செய்ய முடியும்? அடிக்கடி கோபித்துக் கொண்டிராமல் காரியமாற்ற முயலுங்கள். நண்பர்களால் மனஸ்தாபங்கள் ஏற்படும். வீட்டில் கொஞ்சம் குறை கேட்க நேரிடும். சமாளித்துக் கொள்ளுங்கள். காலத்திற்குத் தகுந்த மாதிரி சற்று உங்களையும் மாற்றிக் கொள்வதனால் என்ன நஷ்டம்? விடாமுயற்சியால் நற்பலன்கள் அதிகரிக்கும். வயிறு, சிரசு முதலிய இடங்களில் நோக்கள் ஏற்பட இடம் உண்டு. தூரதேசச் செய்திகளால் அதிக நன்மைகள் ஏற்படாது.

# ஜோதிட சஞ்சீவி

★ அதிர்ஷ்ட திகதி: 1, 2, 3, 7
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

**மிதுனம்:** நீங்கள் ஓடி ஓடித் தேடினாலும் தேறி வருவது கொஞ்சம் தான் என வேதனைப்படாதீர்கள். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். ஏதோ சமாளித்து விடுவீர்கள். அட்டமத்து வியாழன் எட்டிப் பார்க்கிறதே பொருளில் கொஞ்சம் கவனமாக இருங்கள். பணம் கரைந்தபடி இருக்கும். பக்கத்தில் இருப்பவர்களைச் சந்தேகிக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படும். எதிர்ப்பாலார் வீண் பழி சுமத்துவார்கள். அலைச்சலுக்குக் குறைவிருக்காது. தொழில் ஸ்தானத்தில் பொருள் முடக்கமும் அபிப்பிராய பேதங்களும் வரும். இக்காலம் நிதானமாக நடந்து கொள்ளவும். வியாழக்கிழமைகளில் தட்சணாமூர்த்தி வழிபாடு செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட திகதி: 1, 3, 6
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்

**கடகம்:** தத்துவம் பேசிக் கொண்டிருந்தால் நாலு காசு வருமா? காலமறிந்து செயற்பட வேண்டாமா? செய்வதெல்லாம் பயனற்றுப் போகின்றதே எனச் சலிப்படையாமல் நிதானமாகத் திட்டமிட்டுச் செயற்படுங்கள். காரிய அனுகூலங்கள் ஏற்படும். சைக்கிளை விடுவதானாலும் பாதுகாப்பில் விடுங்கள். வாகனத்தால் நஷ்டங்கள் திடீரென வரலாம். உங்களை வாழ்த்திப் போற்றும் உறவினர்களையும், நண்பர்களையும் நம்பாதீர்கள். ஏதோ நயம் கருதி நாடி ஓடி வருவார்கள். பின்பு அவர்களே தூற்றுவார்கள். ஆளையறிந்து உதவி செய்வதில் தவறில்லை. அதற்காக உதவி செய்து உபத்திரவங்களைத் தேடிக் கொள்ளாமல் இருப்பது நல்லதல்லவா? தொழில் ஸ்தானத்தில் நன்மை தீமை கலந்தபடி இருக்கும். புத்திரராலோ குடும்பத்தவர்களாலோ செலவுகளும் அலைச்சலும் சர்வ சாதாரணம். தடியைக் கொடுத்து அடியை வாங்காமலும்; பொருளைக் கொடுத்து பகையைத் தேடாமலும் பார்க்க வேண்டும் என்பார்கள். இக்காலத்தில் கொஞ்சம் நிதானமாக சொல்லிலும்; செயலிலும் இருக்க வேண்டும். மெல்ல பக்கத்திலுள்ள சோதிடரை அணுகி ஆலோசனை பெறுங்கள்.

## மகாதேவா ஜோதிடம்


★ அதிர்ஷ்டத் திகதி: 1, 3, 5
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்

**சிங்கம்:** உங்கள் உடல் நிலையில் அவதானமாக இருத்தல் வேண்டும். பக்கத்து வீட்டில் பச்சைத்தண்ணீர் வாங்குவதானாலும் பத்துத்தரம் யோசித்துவிட்டு வாங்குங்கள். கண்டவுடன் தலையாட்டி விட்டு காது கேட்கப் பழி சொல்லும் பலர் நம் மத்தியில் இருக்கின்றார்கள் — என்று உங்களுக்குத் தெரியாதா? தன்மானமும்; எவரிடமும் கடமைப்படாத உள்ளந் திறந்த மனமுமுடைய உங்களை நானறிவேன். உங்கள் குடும்பத்தவர்கள் உங்கள் மனோ [illegible] மாட்டார்கள் உங்கள் குழந்தைகளுக்காக எதையும் செய்யும் சுபா

(X ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 22




சொற்சிலம்பம் இல. 22
சஞ்சீவி,
561, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ........................................

விலாசம் : ........................................

........................................

——————— இங்கே வெட்டுக ———————

**முடிவு திகதி: 07 - 11 - 1997**

### இடமிருந்து வலம்

1. புத்திக் கூர்மை. 4. தோட்டிப் பறவை. 6. தீயில் கயாவை. 7. குழந்தையை இப்படியும் அழைப்பர். 8. பேதி மருந்து. 10. சமையலுக்கு உதவும். தமிழகத்தில் அதிகம் பாவனையில். 12. கணக்கிடல். 14. இச்சொல்லினால் கேள்வி பிறக்கும். 15. ஒரு வாழ்க்கை நெறியின் ஸ்தாபகன்: 17. சேவை. 18. முன்னிலை ஒருமை, 19. அணைப்பது இறுதி இழந்து விட்டது. 20. எல்லையில் போடுவது. 21. குறைவு என்பதை இப்படியும் கூறுவர். 22. கவலை. 23. கசப்புக்கு உதாரணமாகும் மரம்.

### மேலிருந்து கீழ்

1. திருமணம். 2. இப்போதெல்லாம் உயிரைக் குடிப்பது. 3. காதில் அணிவது. 4. பார். 5. மூர்க்கத் தன்மை. 7. சந்தர்ப்பம். 9. நிமை. 11. அடிமை. 13. நூல். 14. ஏற உதவும். 16. வடு. 17. முதலாவது இரண்டு இலக்க எண். 18. அம்பிகைக்கும் பெயர். கொடியவள் என்றும் பொருள். 20. மரம் நிலத்தைப் பற்றிப் பிடிப்பது இதனால்.

### சொற்சிலம்பம் இல. 20 - விடைகள்

**இடமிருந்து வலம்**
1. வைகாசி. 4. சக. 7. கர்த்தா. 9. திவால். 11. திவகரன். 12. காரம். 14. புவை. 15. துன்பம். 17. தவ். 18. பறை. 19 சுமை. 20. சாணி. 21. தீமை. 22. விரோதி. 23. மீன். 24. ஃ.

**மேலிருந்து கீழ்**
1. வைகறை. 2. கார். 3. சித்திரம். 5. கதிரவன். 6. மால் 8. தானம். 10. வான். 12. காலன். 13. பொம்மை. 14 புதல்வி. 15. துறை. 16, பசுமை. 18. பணி. 20. சாதி. 21. தீன்.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதலாம் பரிசு:- செ. சத்தியபவன்
586/1, கே.கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

★ இரண்டாம் பரிசு:- அ. ஆன்,
7, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு:- க. பாலசிங்கம்,
குருமனை,
சங்கானை.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | | |
|---|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. | 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. | 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. | 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம். 21 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசனத்தை ஒடித்து எழுதிவிட்டால் அது "புதுக் கவிதை" ஆகிவிடுமா?

புதுக்கவிதை என்றால் என்ன?

பழைய யாப்பு—மரபுகளையெல்லாம் கைகழுவிவிட்டு வசனத்தில் எழுதுவது புதுக் கவிதையா? நிச்சயம் இல்லை

யாப்பில் எழுதாமல் வசனத்தில் எழுதுவது 'வசனக் கவிதை' ஆகலாம்'—அதுவும் கவித்துவ வீச்சு இருந்தால்—'புதுக்கவிதை' ஆகாது.

'வசன கவிதை' வசனத்திற்குப் பிறந்தது; 'புதுக் கவிதை' கவிதைக்குப் பிறந்தது. வசனநடைக்குரிய செயற்கையான, தர்க்க ரீதியான வாக்கிய அமைப்புக்களைக் கையாள்வது வசன கவிதை!

வசனத்திற்குரிய செயற்கையான வாக்கிய அமைப்பைக் கையாளாமல், இயற்கையான பேச்சுச் சத்தத்தையும், உணர்வு நிலைக்கேற்ற அடியமைப்பையும்; புதிய உத்திகளையும் கையாள்வது புதுக்கவிதை. புதுக்கவிதை உருவத்தில் மட்டும் அல்ல உள்ளடக்கத்திலும் வசன கவிதையை விடப் பரிணாமங்கள் மிகுதியாக உடையது.

## காலத்தின் நியதி

மாற்றம் கால நியதி. பழைமை புளித்துப்போகும் போது, பயனற்றுப் போகும் போது புதுமை பிறக்கிறது. கட்டுப்பாடுகளை விரும்பாத விடுதலை வேட்கை புரட்சி செய்யும் போதும் புதுமை பிறக்கிறது. பெருநிகழ்ச்சிகளால் சுற்றுச்சூழல் மாறும் போதும் புதுமை பிறக்கிறது; மனிதமனத்தின் இயல்பான—புதுமை நாட்டத்தின் காரணமாகவும் புதுமை பிறக்கிறது.

இது எல்லாத் துறைகளிலும் நிகழ்வதுதான். அதனால்தான் வாழ்க்கை தேக்கமடையாமல் வளர்கிறது.

எனவே புதுமை வளர்ச்சியின் அறிகுறி.

மற்றத் துறைகளைப் போன்றே இலக்கியத் துறையிலும் இந்தப் பாதிப்புகள் விளைவுகளை ஏற்படுத்தத் தவறவில்லை. அந்த விளைவுகளில் ஒன்றுதான் புதுக் கவிதையின் பிறப்பு.

## புதுக்கவிதையின் இலக்கணம்

புதுக்கவிதை இலக்கணம் இல்லாத கவிதை என்று குற்றம் சுமத்துகிறார்கள். இப்படிக் கூறுகிறவர்களுக்கு இலக்கணம் என்றால் என்ன என்பதும் தெரியவில்லை; கவிதை என்றால் என்ன என்பதும் தெரியவில்லை.

இலக்கணம் இல்லாமல் எதையும் எழுத முடியாது. புதுக்கவிதைக்கும் இலக்கணம் உண்டு. ஒரு வேறுபாடு: அந்த இலக்கணம் பழைய மரபுச் செய்யுளின் இலக்கணம் அல்ல. புதுக் கவிதையின் இலக்கணம் அதன் பெயருக்கு ஏற்ப புதிய இலக்கணம்.

வெறும்வசனத்தை ஒடித்து எழுதிவிட்டால் புதுக்கவிதை ஆகிவிடும் என்று பலர் நினைக்கிறார்கள். இன்று புற்றீசல் போலப் 'புதுக் கவிதை' எழுதப் புறப்பட்டிருக்கும் 'கவிஞர்'களும் இதில் அடக்கம்.

மரபுக்கவிதைக்கு விதிக்கப்பட்டிருந்த யாப்புவேலி புதுக் கவிதைக்கு அகற்றப்பட்டதால் கண்டவர்கள் எல்லாம் கவிதைக்குள் புக ஆரம்பித்து விட்டார்கள்.

இலக்கிய உணர்வோ விஷய ஞானமோ, படைப்பாளனுக்குரிய பொறுப்போ எதுவும் இல்லாதவர்கள் கூட சிரமமில்லாமல் புதுக்கவிதையாளர்கள் ஆகிவிடுகிறார்கள். கவிதை என்று அழைப்பதற்கு எந்தவித அருகதையுமற்ற துண்டு துக்கடா வசனங்கள், கலை வடிவமற்ற வெறும் கருத்து நவிற்சிகள், முறித்து அடுக்கிய கட்டுரைகள், வெற்றுக் கோஷங்கள், வார்த்தை வாந்திகள், 'கக்கூஸ்' சுவரின் கரிக் கிறுக்கல்கள், வாய் வெருவல்கள், வாரிப்படங்கள் இவைகளெல்லாம் கூடப் 'புதுக் கவிதை' என்ற பெயரில் வெட்கமில்லாமல் பவனி வருகின்றன. இவைகளால் புதுக் கவிதைத்துறைக்கு மிகப் பெரிய ஆபத்து உண்டு.

'காட்சி' என்ற தலைப்பில் பாரதி எழுதியவற்றைத் தமிழில் முதன்முதலாக எழுதப்பட்ட புதுக்கவிதைகள் என்று கூறுவதுண்டு. ஆனால் இவற்றைப் புதுக்கவிதைகள் என்பதை விட வசன கவிதைகள் என அழைப்பதே பொருத்தமானது. ஆனாலும் தமிழில் புதுக்கவிதை எழுதத்தொடங்கிய ந. பிச்சமூர்த்திக்குப் புதுக்கவிதை எழுதத் தூண்டிய சக்திகளுள் பாரதியின் வசன கவிதையும் ஒன்று என்பதை மறுப்பதற்கில்லை.

ந. பிச்சமூர்த்தி, கு. ப.ராஜகோபாலன், வல்லிக்கண்ணன் ஆகியோர் புதிய வழியில் கவிதை எழுத ஆரம்பித்த 1930-40 களைத்தான் தமிழில் புதுக்கவிதை தோன்றி வளர்ந்த காலம் எனலாம்.

மரபுவழி யாப்புக்குள் அடங்காமல் வசனத்தில் எழுதப்படுகின்ற கவிதைகளையெல்லாம் இன்று புதுக் கவிதை என்றே அழைத்தாலும், அவையெல்லாம் புதுக் கவிதைகள் அல்ல.

'புது' என்பது [illegible] பழைய யாப்பு மரபிலிருந்து வேறுபட்டது என்பதைக் குறிக்கும் அடையாளமாக மட்டுமே பயன்படுத்தப் படுகிறது; உண்மையில் உருவத்தில் மட்டுமல்லாமல் உள்ளடக்கத்திலும் புதுத் தன்மை கொண்டிருப்பவற்றையே புதுக்கவிதை என்று அழைக்கவேண்டும்.

புதுக்கவிதைக்கு இலக்கணமோ, வடிவமோ இல்லை என்று கூறுவது தவறு. அவ்வாறே வசனத்தில் எழுதப்படுவது புதுக் கவிதை என்ற கருத்தும் தவறானது.

இதை விளக்குவதற்கு வசனம், கவிதை என்ற சொற்கள் எதைக் குறிக்கின்றன என்று அறிவது அவசியமாகும்.

வசனம் என்பதுமொழியின் சொற்றொடர் அமைப்பு வகைகளில் ஒன்றாகும்.

கவிதை என்பது இலக்கிய வகைகளில் ஒன்றாகும். அது வெளிப்பாட்டு முறையைப் பொறுத்தது.

இவை இரண்டும் வெவ்வேறு இனத்தைச் சார்ந்தவை.

மொழி நிலையை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று பேச்சு (Speech) மற்றது வசனம் அல்லது உரை நடை (Prose) மூன்றாவது செய்யுள் அல்லது பா (Verse).

பேச்சு, மொழியின் ஒலி வடிவமாகும். இதில் சொற்கள் கொச்சையாக இருக்கும்; தொடர்பற்று விட்டு விட்டு அமையும், சில சொற்கள் மீண்டும் மீண்டும் வரும். பேசுவோன் நோக்கத்திற்கேற்ப குரல் ஏற்ற இறக்கத்தோடு ஒலிக்கும்.

வசனம் (prose) என்பது மொழியின் வரி வடிவம். இதைச் செம்மைப்படுத்தப்பட்ட பேச்சு எனலாம். இதில் கொச்சைச் சொற்கள் இடம் பெறுவதில்லை. கூறப்படும் கருத்தை விளக்குகின்ற வகையில் சொற்கள் தர்க்க முறைப்படி தொடர்ச்சியாக அமையும். சொற்றொடர் அமைப்பு முழுமை பெற்றிருக்கும்; ஆனால் உணர்வு நிலைக்கேற்ற குரல் ஏற்ற இறக்கத்தை இதில் காட்ட இயலாது.

செய்யுள் (Verse) என்பது இசைப்படுத்தப்பட்ட பேச்சாகும். பேச்சின் பண்புகள் இதிலும் இருக்கும். சொற்றொடர்கள் தர்க்க முறைப்படி அமையா. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன முறை மாறியும் வரும். ஒன்றிரண்டு இல்லாமலும் இருக்கும், இதில் இசையொழுங்கால் உணர்வை எழுப்ப முடியும். சந்தம், எதுகை, மோனை, அடியமைப்பு ஆகியவற்றால் குரல் ஏற்றத்தாழ்வையும் காட்ட முடியும்.

கவிதை (Poetry) என்பது வெளிப்பாட்டு முறையைக் குறிக்கும். இந்த வெளிப்பாடு, உணர்வு நிலையைச் சார்ந்ததாதலால் இது வசனத்தை விடப் பேச்சையும், செய்யுளையும் நாடக்கூடியது.

யாப்பில் எழுதப்படுவது தான் கவிதை என்ற கருத்து சரியானதல்ல. கவிதை யாப்பிலும் எழுதலாம். ஆனால் யாப்பில் எழுதப்படுவதெல்லாம் கவிதையுமல்ல, ஓர் உரைநடைச்சொற்றொடரை அப்படியே யாப்பில் நிறுத்த முடியும். யாப்பில் அமைந்து விட்டதாலேயே அதைக் கவிதை என்று கூறிவிட முடியாது. மருத்துவம், சோதிடம், இலக்கணம் போன்றவையும் யாப்பில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் இவற்றை யாரும் கவிதை என்று சொல்வதில்லை.

செய்யுள் ஒரு கருத்து எவ்வித உணர்வையும் கிளறாமல் வெறும் கருத்து நவிற்சியாக (plain Statement) முறையான சொற்றொடர் அமைப்பில் கூறப்பட்டிருந்தால் அது வசனத்தன்மையாக (Prosaic) இருக்கிறது என்று கூறும்வழக்கம் உண்டு.

உரை நடையில் எழுதப் படுகின்ற கதைகளிலோ, புதினங்களிலோ, ஏன் கட்டுரைகளில் கூட சில நல்ல எழுத்தாளர்கள் எழுதுகின்ற சில எழுத்துக்களை, இது கவிதையாக இருக்கிறது'' என்று பாராட்டுவதும் உண்டு.

## கவிஞர் அப்துல் ரகுமான்

இதிலிருந்து வசனத்தன்மை என்பது கவிதை என்பதற்கு மாறுபட்டது என்பதை உணரலாம். வசனத்தின் நோக்கம் விளக்குவது. கவிதையின் நோக்கம் உணர்த்துவது.

செய்யுள் கவிதை வெளிப்பாட்டுக்கு உதவும் சாதனம் என்றாலும் கணிதத் தன்மையான செயற்கைச் சந்தமுடையது. எந்தச் செயற்கையையும் மறுக்கும் புதுக் கவிதை இந்தச் செயற்கைச் சந்தத்தையும் புறக்கணிக்கிறது. ஆனால் செய்யுளின் எல்லாப் பண்புகளையும் அது விலக்குவதில்லை. சக்திமிக்க வெளிப்பாட்டுக்கு உதவும் செய்யுட் பண்புகள் சிலவற்றை அவசியமான இடத்தில் அது கைக்கொள்ளவே செய்கிறது.

மரபுக்கவிதை யாப்பில் அமைந்த செய்யுளைச் சார்ந்து நின்றது. புதுக் கவிதையோ யாப்பின் பண்புகள் சிலவற்றை ஏற்றுக் கொண்டாலும் மொழியின் மற்றொரு நிலையான இயல்பான பேச்சு நிலையைப் பெரிதும் சார்ந்து நிற்கிறது. வறண்ட வசனத்தோடு கவிதைக்குத் தொடர்பு கிடையாது. இவற்றையெல்லாம் அறியாமல் புதுக்கவிதை வசனத்தில் கருதப்படுகின்றது. என்று கூறுவது தவறாகும்.

மரபு யாப்பில் (Convetio — nal metre) எழுதப்படாத புதியகவிதை வடிவங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம், 1. கவிவசனம் (Poetic prose) 2. வசனக்கவிதை (Prose poem) 3. புதுக்கவிதை (New Verse) அவை.எப்படி அமையும் என்பதை அடுத்த வாரம் பார்ப்போம். ★

---

புதுக்கவிதையின் தன்மை, வடிவம் ஆகியவை குறித்தும் அதன் தற்காலப் போக்குக் குறித்தும் மரபுக் கவிதை பற்றியும் ஆக்க பூர்வமான கருத்துப் பரிமாற்றங்கள் கடந்த சில வாரங்களாக சஞ்சீவியில் வெளிவருவது தெரிந்ததே.

அதன் வரிசையில் புதுக்கவிதை தொடர்பாக தென்னிந்தியக் கவிஞர் அப்துல் ரகுமானின் சிந்தனைத் தொகுப்பு இந்த வாரம் வெளியாகிறது.

1988 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதிய சஞ்சீவி சஞ்சிகையில் வெளியான இக் கட்டுரை இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது. இதன் இரண்டாவது பகுதி அடுத்த வார சஞ்சீவியில் பிரசுரமாகும். (ஆ-ர்)

---

# நாகரிகம்

மனிதனுக்குச் செல்வம் தேவைதான். ஆனால் அதுவே வாழ்க்கையின் நோக்கமாகாது. அமைதியையும் பேரின்பத்தையும் செல்வம் தரமுடியாது. நமக்குத் தேவை தூய்மையான இதயம்தான்.

வாழ்க்கை மிகவும் செயற்கையாகிவிட்டது. புதிய நாகரிக வழக்கங்களுக்கு பெருமளவு பணம் வீணாகிறது. இப்படிச் செலவாகும் பணம் நற்செயல்களுக்கும் அறச்செயல்களுக்கும் சமுதாயச் சேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டால்மனிதன் இறைநிலைக்கு மாறிவிடுவான். நிலையான அமைதியும்பேரின்பமும்பெற்று மகிழ்வான். நவநாகரிக மக்களிடம் இப்போது அமைதியின்மை ஆசை சஞ்சலம், பயம் வாட்டம் முகம் வெளுத்தல். ஆகியவற்றைத்தான் பார்க்கிறீர்கள். உங்களது தேவைகளையும் ஆசைகளையும் பெருக்கிக் கொண்டு விட்டீர்கள். எளிமை மறைந்து போய்விட்டது. எங்கு பார்த்தாலும் அமைதியின்மை, கலக்கமும், குழப்பமும் தடுமாற்றமும் நிறைந்ததாகி விட்டது.

இயற்கையோடு இயைந்த எளிய வாழ்க்கையை நடத்துங்கள். எளிய உடைகளை உடுத்துங்கள். தினமும் உலாவச் செல்லுங்கள்; எளிய உணவை உட்கொள்ளுங்கள். கடினமாக உழைத்து வாழுங்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள். வியர்வைசிந்திப் பொருளீட்டுங்கள். புலன்களையும் மனத்தையும் கட்டுப்படுத்துங்கள். உன்னதமான பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள். இறைவனை நினைவில் கொள்ளுங்கள். அவர் இருப்பதை உணருங்கள். உண்மை பேசுங்கள். பேதங்களை அறறக் கற்றுக்கொள்ளுங்கள்.

சுவாமி சிவானந்தர்.

# தோழன் உன் தர்மம்

மனிதன் தன் உடலை விட்டதும் அவனுடைய பணம் அவனுடைய இரும்புப் பெட்டியில் தங்கிவிடுகிறது. அவனுடைய பசுக்கள் கொட்டகையிலேயே தங்கி விடுகின்றன. அவனுடைய அருமை மனைவியோ வீதிவரை வருகின்றாள், உற்றார் உறவினரோ சுடுகாடு வரை வருகிறார்கள். அவன் போஷித்து வளர்த்த உடலோ அக்கினியோடு ஐக்கியமாகி மறைந்துவிடுகிறது. ஆனால் அவனுடனேயே வரப் போகும் தோழன் அவன் செய்த தர்மம் ஒன்றுதான்.

ஆதாரம் - சர்வோதயம்.
தொகுப்பு: - க. கனகராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்புப் பூதம்

முன்னொரு காலத்தில், சீனாவில் தர்பான் என்னும் கிழவர் வாழ்ந்து வந்தார். அவரது பேரனின் பெயர் தர்சுன். சின்னக் குழந்தையாக இருக்கும் போதே தர்சுனின் அம்மாவும், அப்பாவும் இறந்து போய் விட்டனர்.



தர்பான், பொறுமையான தாத்தா, எப்போதும் தனது பேரனான தர்சுனுக்குப் புத்திமதிகள் கூறிக்கொண்டிருப்பார். 'பிறர் பொருளைத் தொடாதே, இன்னொருவரின் விஷயத்தில் அவசியமின்றித் தலையிடாதே. தீயவருக்கு எவ்விதத்திலும் உதவி செய்யாதே'' என்பவை அவற்றில் முக்கியமானவை.

ஒருநாள் தர்சுன் வீதி வழியாகப்போய்க் கொண்டிருந்தான். வழியிலே அவன் ஒரு அழகிய பெட்டியைக் கண்டான். அதைக் கண்டதும் அவனுக்கு ஆசை உண்டாயிற்று. தாத்தாவின் புத்திமதியை மறந்தான். பெட்டியை எடுத்து ஒதுக்குப் புறமாகக் கொண்டு போனான்.

ஆர்வமாக அவன் பெட்டியைத் திறந்தான். பெட்டி உள்ளே, சின்னஞ் சிறிய புழு ஒன்று சுருண்டு கிடந்தது.

அவன் அந்தப் புழுவைப் பார்த்து இரக்கப்பட்டான். அதன் மீது காற்றும் வெளிச்சமும் படும்படி நன்றாகத் திறந்துவைத்தான். கொஞ்ச நேரந்தான் ஆயிற்று. ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அந்தச் சின்னஞ் சிறிய புழு, ஓர் இராட்சதப் பாம்பாக உருக் கொண்டது. கண்மூடிக் கண் திறப்பதற்குள் தர்சுனைப் பிடித்துக் கொண்டது.

''என்னை விட்டுவிடு, விட்டு விடு. நான் தானே உன்னைக் காப்பாற்றினேன்'' என்று பரிதாபமாகச் சத்தமிட்டான் தர்சுன்.

''அது வேறு விஷயம், ஆனால் எனக்கோ பசிதாங்க முடியவில்லை. உன்னைத் தின்பதைத் தவிர எனக்கு, வேறு வழியில்லை'' என்றது பாம்புப் பூதம்.

''இது அநியாயம்'' என்றான் தர்சுன்.

(XI ஆம் பக்கம் பார்க்க)

# இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத்தொடர்ச்சி)

வமும், கண்ணியம், கடமை தவறாத உங்களை தொழில் ஸ்தானத்தில் குறை சொல்லுவார்கள். குடும்பத்தில் உங்களின் சேவை, உறுதி மனோபாவத்தை எதிர்ப்பாலார் அறிந்தாலும் — அறியாதவர் போல நடந்து கொள்வார்கள். நடக்கட்டுமே. அதனால்தான் நீங்கள் அடிக்கடி உங்களைப் பற்றி யோசிக்கிறீர்கள். இறைவனிடம் ஓடுகின்றீர்கள். வீட்டில் செலவு அடிக்கடி ஏற்படும். சிலருக்கு விதிவசப்பட்ட பலன்கள் நடக்கும். எனவே புதிய இடமாற்றங்களை நிதானப்படுத்திக் கொள்ளுங்கள். பெரியவர்களின் ஆலோசனைப்படி நடவுங்கள். நன்மைகள் ஏற்படும் சனீஸ்வரனை வழிபட்டு வரவும்.

★ அதிர்ஷ்ட திகதி, 3, 5
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள் புதன்.

**கன்னி:** நீங்கள் அதிகம் பேசிப் பேசிக் காலத்தைக் கழிக்கின்றீர்கள். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி கலகம் ஏற்படும். எதிர்ப்பாலாருடன் வாக்குவாதங்கள் ஏற்பட்டபடி இருக்கும். பொருளால் ஏமாற்றங்களும், வீண் வார்த்தைப் பிரயோகங்களும் ஏற்பட இடம் உண்டு. சகோதரங்களுக்காக அலைச்சலும், அதிக யோசனைகளும் ஏற்படும். புத்திரர்களுக்காக அதிக செலவுகள் ஏற்படும். இடமாற்றங்களையோ பிரயாணங்களையோ தவிர்த்துக் கொள்ளவும். புதிய நண்பர்களால் பல பிரச்சினைகள் உருவாகலாம். காணி, பூமி சம்பந்தமான புதிய பிரச்சினைகள் உருவாக இடம் உண்டு. கைகால் தாக்கம் அல்லது உளைவு ஏற்பட இடமுண்டு. தூரதேசத்துச் செய்திகளை அதிகம் நம்பி நடக்க வேண்டாம்.

★ அதிர்ஷ்ட திகதி: 5, 7
★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.

**துலாம்:** உலகில் வெளுத்ததெல்லாம் பால்என்று எண்ணி நடவாதீர்கள். நீங்கள் உள்ளதைச் சொல்லி, நல்லதைச் செய்தாலும் பலர் உங்களை சந்தேகக்கண் கொண்டு தான் பார்ப்பார்கள். மௌனம் கலகநாஸ்தி என்பார்கள். அதன்படி செயற்படுங்கள். சகோதரங்கள் உங்களைக் குறைகூறுவார்கள். வீட்டில் திருப்தியற்ற தன்மையும், வீண் மனக்கலக்கங்களும் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் பெரியவர்கள், மேலதிகாரிகளின் உதவிகள் கிடைத்தாலும் வீண் பயம் இருக்கும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அடிக்கடி ஏதாவது ஒரு காரணத்திற்காக யோசனைகளும், மனக்கலக்கங்களும் கொடுக்கும். கண், வயிறு, கால்பாதம் ஆகிய இடங்களில் நோ ஏற்படலாம், அவதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட திகதி 3, 4, 5
★ அதிர்ஷ்ட நாள் புதன், வெள்ளி.

**விருச்சிகம்:** எதிர்பாராத சந்திப்புக்களால் எதிர்ப்பாலாரின் உதவிகள் கிடைக்கும். திடீர் இடமாற்றங்களால் அல்லது பிரயாணங்களால் நன்மைகள் ஏற்பட இடம் உண்டு. எல்லா விஷயங்களும் உங்களது விருப்பத்திற்கு ஏற்றதாக நடக்கும் என்று எப்பொழுதும் சிந்திக்க முடியாது அல்லவா? காலத்திற்கு ஏற்ப மாற்றங்கள் நடக்கச் செய்யும் என்பதை நாம் மறுக்க முடியாது. தொழில் ஸ்தானத்தில் படபடப்பு தோன்றினாலும் வருமான அதிகரிப்பு ஏற்படச் செய்யும். சக ஊழியர்களின் உதவிகளால் நன்மைகள் ஏற்படும், இனஜன விரோதம் தேடி வரலாம். கண்டபடி அபிப்பிராயங்களைச் சொல்லாதீர்கள். சகோதரங்களுக்காகவோ அல்லது பிள்ளைகளுக்காகவோ அதிக பொருள்கள் செலவு செய்வதுடன் அலைச்சல்களும் ஏற்படலாம் கேட்டை நட்ஷத்திரகாரர் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

★ அதிர்ஷ்ட திகதி: 1, 5, 7
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

**தனுசு:** நீங்கள் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். கை கால் தாக்கங்கள் காத்திருக்கின்றன. கவனமாக இருக்கவும். தூரதேசத்துச் செய்திகளால் பதற்ற நிலை உருவாகும். இடமாற்றங்களையோ பிரயாணங்களையோ தவிர்த்துக் கொள்ளவும்; கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவும். புதிய திட்டங்களால் நன்மைகள் சிலருக்குக் கொடுக்கும். உலகில் போற்றுவதையும், தூற்றுவதையும் சமநிலைப் படுத்தி வாழப் பழகிக் கொள்ளுங்கள் அதனால் துன்பச் சுமையை ஓரளவாவது குறைக்கலாம் அல்லவா? எந்த விஷயங்களையும் இரகசியமாகச் செயற்படுத்திப் பாருங்கள் வெற்றி கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட திகதி: 1, 3, 7
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன், வெள்ளி.

**மகரம்:** கலகம் [illegible] தானே நியாயம் [illegible]. எதற்கும் அவசரப்படாதீர்கள். குடும்பத்தில் நல்லகாரியங்கள் நடக்கும். கலகத்தின் மத்தியில் பல பிரச்சினைகள் கருவாகி உருவாகியே நடக்கும். தொழில் ஸ்தானத்தில் அவதானமாக இருக்க வேண்டும். நண்பர்கள் பெரியவர்கள் சக ஊழியர்கள் உதவி செய்வார்கள். ஆனால் இடை நடுவில் குறைகுற்றம் காண்பார்கள். எவ்வளவு தான் முயற்சி எடுத்தாலும் காரியம் கை கூடுவதென்றால் கொஞ்சம் கஷ்டம்தான். என்ன செய்வது கஷ்டகாலம் தான். அதற்காக நாம் முயற்சிகளை விட முடியுமா? பல், வயிறு, கால் போன்ற இடங்களில் நோய்கள் சிலருக்கு வரலாம். கவனமாக இருக்கவும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

★ அதிர்ஷ்டதிகதி: 1, 2, 5
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்

**கும்பம்:** நாலுபேர் உங்களைச் சுற்றி இருப்பார்கள். எல்லோருக்கும் ஆலோசனையும், உதவியும் செய்யும் உங்களுக்கு ஏழரைச் சனீஸ்வரனின் தாக்கத்தால் உதவி செய்பவர்கள் குறைவு தான். எல்லாம் படிப்படியாகக் கிடைக்கும். பொறுமையாக இருந்து செயற்பாடுகளைச் செய்து வரவும். தொழில் ஸ்தானத்தில் உதவி செய்பவர்களே உபத்திரவங்கள் தருவார்கள். மெல்ல மெல்ல வாழ்க்கை வசதிகளைத் தேடிக் கொள்ளவும் அதனால் மாற்றங்கள், சிறப்புக்கள் ஏற்படும். பொருள்கள், வாகனம் என்பனவற்றில் கவனமாக இருக்கவும். திடீரென அவைகள் மறைய இடம் உண்டு. சனீஸ்வரனுக்கு வேண்டுதல் செய்யவும்.


★ அதிர்ஷ்ட திகதி: 1, 4, 5
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்: வெள்ளி

**மீனம்:** உங்கள் தொழிலில் கவனமாக இருக்கவும். கூட இருப்பவர்களே குழி தோண்டியபடி இருப்பார்கள். அடிக்கடி மறதியால் பொருள் இழப்புக்கள் ஏற்படும். காலில் உரசல்காயம் ஏற்படலாம். அடிக்கடி வீட்டிற்காகவும், புத்திரர்களுக்காகவும் அதிக செலவுகளைச் செய்தபடி இருப்பீர்கள். எந்த விஷயத்திலும் உங்கள் கவனத்தைப் பொறுத்தே பொருள் சிறப்பு ஏற்படும். நண்பர்களை நம்ப வேண்டாம். ஏழரைச் சனீஸ்வரனின் தாக்கத்தால் எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமைப்பட இடம் உண்டு. இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

★ அதிர்ஷ்ட திகதி: 1, [illegible] 4
★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

# வழி கண்டு பிடியுங்கள்...

அன்புத் தம்பி தங்கைகளே! ஒன்று... இரண்டு... எனப் பத்து சொல்வதற்குள் உள்ளே புகுந்து வெளியே வர வழி கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்;



# வரிக்குதிரை வருகுதுபார்


வருகுது பார் வருகுது பார்
 வரிக்குதிரை வருகுது பார்!
அருகில் சென்று பார்த்திடலாம்
 அம்பி ஓடி வந்திடுவாய்!

அழகழகாய்ப் புற்களையே
 அசைந்து மேயும் அழகைப் பார்!
வரிவரியாய்ப் புலி போல
 வண்ணக் கோடு பார்த்தாயா?

நெட்டையான கால்களைப் பார்
 நீளமான செவிகளைப் பார்!
கட்டையான வாலைப் பார்
 கனைத்து நிற்கும் அழகைப்பார்!

வரிவரியாய் அழகிருந்தும்
 சவாரி செய்ய முடியல்லையே!
அருகருகாய் அசைந்து செல்லும்
 அழகைப் பார்த்து ரசித்திடலாம்!

- ஜெ. கல்யாணி
(ஓட்டுமடம்)




# துப்பாக்கி

துப்பாக்கியாம் துப்பாக்கி
 டுமீர் டுமீர் துப்பாக்கி!
தப்பாமலே சுட்டிடுவேன்
 அப்பால் நீயும் சென்றிடுவாய்!

இலக்கு வைத்துச் சுட்டிடலாம்
 இதற்குப் பயிற்சி அவசியம்!
மலக்க மலக்கப் பார்க்காதே
 மயக்கம் போட்டு விழாதே!

துவக்கு என்றும் சொல்லலாம்
 தூரம் கொண்டு செல்லலாம்!
நமக்கு என்றும் காவலாம்
 நாமும் அதற்குத் தோழனாம்!

காவல் காக்கும் துப்பாக்கி
 ஆவலோடு ஓடி வா!
நாவல் மரத்தைப் பார்த்துமே
 நாமும் சுட்டுப் பழகலாம்!

- தி. டிலக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியம் பேசுகிறது!



★ எனது பெயர்: மோனோலிசா

★ வயது: 500 வருடங்கள். ஆனாலும், இளமைகுன்றாத கன்னிப் பெண்ணாகவே இருக்கிறேன்.

★ சொந்த ஊர்: இத்தாலி

★ என் உலகப் புகழுக்கு காரணம்: எனது புன்னகை, இது, வேதனையின் வெளிப்பாடா, மகிழ்ச்சியின் வெளிப்பாடா என்பதை இன்னும் யாரும் அறிந்து கொள்ள முடியாததால் புகழ் கிடைத்தது.

★ என்னை வரைந்த ஓவியன்: லியர்னாடோ — டா — வின்சி (கி. பி. 1452 — 1519)

★ ஏக்கம்: விளம்பர உத்தி என்ற பெயரால் எனது உண்மைப் பிரதியைகுறிப்பாக புகழ் பெற்ற எனது முகத்தை கேலிக் குரியதாக்கும் வியாபாரிகள், திருந்த மாட்டார்களா?

★ இப்படிக்கு: உண்மையுள்ள உங்கள் மோனோலிசா இத்தாலி.

# நான் யார்...இந்தக் கேள்வி உங்களுக்குள் எழுகிறதா?

மனம் என்பது எல்லா நிலைகளிலும் பிரச்சினைக் குரியதுதான் என்றாலும் சராசரி மனிதர்கள் ஒரு எல்லைக் கோட்டுக்குள்ளேயே அதனை கட்டுப்படுத்தி வைத்திருக் கிறார்கள். ஆனால் இந்த எல்லை மீறிப்போய் பிரச்சினை மேகங்கள் முழுவதுமாய் மனதைச் சூழ்ந்து கொள்ளும் போது இயல்பாய் ஒரு மனிதனால் இயங்க முடிவதில்லை.

சாதாரண நிலையிலிருந்து, மனம் பிறழ, நடத்தையும் வேறு விதமாய் மாறிப் போகிறது இதன் உச்சக்கட்டத்தில் முழுக்க முழுக்க சாதாரண நிலையிலிருந்து அசாதாரண நிலைக்கு மனிதன் தள்ளப்படுகிறான்.

இந்த மாற்றத்திற்கான அறிகுறிகள் முன்னமே ஒவ்வொருவரிடமும் தோன்றி விடுகின்றன. இதனை உணர்ந்து மாற்றிக் கொண்டால் மிகப்பெரிய அழிவிலிருந்து மீண்டு விடலாம்.

இந்த அறிகுறிகள் உங்களிடமும் இருக்கிறதா? தெரிந்து கொள்ள இந்த கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள்.

1. மகிழ்வின்றி விரக்தியுடன் இருக்கிறீர்களா?
2. எதிர்காலம் இருள்மயமாகத் தோன்றுகிறதா?
3. வாழ்வில் தோல்வி அடைந்து விட்டதாக எண்ணுகிறீர்களா?
4. எந்தச் செயலிலும் எவரிடமும் சலிப்பு தோன்றுகிறதா?
5. குற்ற உணர்வு வாட்டி வதைக்கிறதா?
6. நீங்கள் தண்டிக்கப்படுவதாகக் கருதுகிறீர்களா?
7. உங்களையே நீங்கள் வெறுக்கிறீர்களா?
8. தவறுகளெல்லாம் உங்களால்தான் ஏற்படுகிறது என எண்ணுகிறீர்களா?
9. உங்களை வதைத்துக் கொள்ளத் தோன்றுகிறதா?
10. அழ நினைத்தும் அழ முடியவில்லையா?
11. எரிச்சலூட்டும் செயல்களால் எரிச்சல் அடைய முடியவில்லையா?
12. பிறரோடு பழகுவதையே வெறுக்கிறீர்களா?
13. எதிலும் முடிவு எடுக்க முடியவில்லையா?
14. நீங்கள் அவலட்சணமாக இருப்பதாக எண்ணுகிறீர்களா?
15. உறங்குவது சிரமமாக உள்ளதா?
16. எளிதில் சோர்வடைகிறீர்களா?
17. உண்பதில் ஆர்வம் குறைந்து வருகிறதா?
18. உடல் எடை ஐந்து கிலோவுக்கு அதிகமாகக் குறைந்து விட்டதா?
19. உடல் நலப் பிரச்சனைகளால் வேறு செயல்களைச் செய்ய முடியவில்லையா?
20. பாலின்ப உணர்வுகளில் நாட்டமில்லையா?

மேலே உள்ள வினாக்களில் பத்துக்கு மேல் ''ஆம்'' என்றால் உங்களுக்கு கவுன்சிலிங் தேவைப்படும். எனவே ஆலோசனை பெறுவது நல்லது. ★

# நிறம் மாறும் கடிகாரம்

ஐரோப்பிய நாடுகளில் தற்போது நவீன கைக்கடிகாரங்கள் பாவனைக்கு வந்துள்ளன.

இக் கடிகாரத்தில் இலக்கங்களோ முட்களோ கிடையாது. அதில் அமைக்கப்பட்டுள்ள முறைப்படி ஒவ்வொரு மணி நேரத்துக்கும் இதில் உள்ள நிறங்கள் மாறும். அந்த நிறங்களை வைத்தே மணி என்ன என்பதை அறிந்து கொள்ளலாம்.

புதுமையான இக்கடிகாரம் ஐரோப்பாவில் இன்றைய நாகரீகம். ★

# தீர்வு யோசனை..

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

எலது பிரசாரம் செய்து வரும், ஆதரவு திரட்டி வரும் அரசு —

விடுதலைப் புலிகளுடன் பேசத் தயார் என்று சொல்வது எந்த அடிப்படையில், என்ன நோக்கத்துடன் என்று சில வட்டாரங்கள் குழம்புகின்றனவாம்.

விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்பாக அறிவித்த அதே அமெரிக்க அரசு புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தைக்குச் செல்லவேண்டும் என்று ஆலோசனை கூறுவது —

இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சி அளிக்கவந்த அமெரிக்காவின் ... ... ... கொமாண்டோ பயிற்சியாளர்கள் இலங்கையை விட்டுத் திரும்பிச் சென்றமை—

இவை எல்லாம் ஒரே குழப்பமானநிகழ்வுகளும், அறிவிப்புக்களுமாக உள்ளதாக அரசியல் அவதானிகளே அலுத்துக் கொள்கிறார்கள். ★

# வீரப்பன்: வன...

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பு உள்ளதாம். அண்மையில் விடுவிக்கப்பட்ட பணயக் கைதிகளே இத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

தமிழக அரசும் கர்நாடக அரசும் விதித்துள்ள காலக் கெடுவுக்குள் வீரப்பன் சரணடையா விட்டால் இரு மாநிலங்களினதும் கூட்டு அதிரடிப்படையினர் காட்டுக்குள் இறங்க ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சரணடையும் எண்ணத்தை கடைசி நேரத்தில் வீரப்பன் மாற்றிக் கொண்டால் அவர் பெரும் உயிர் ஆபத்தைச் சந்திக்க நேரிடும்.

இது விடயத்தில் மாநில அரசுகளால் ''எவ்வளவு செய்ய முடியும்?'' என்பதைப் பொறுத்திருந்து பார்க்கப் போவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஆனால் வீரப்பனைப் பிடிக்கும் 'சக்தி' தமிழக, கர்நாடக மாநிலங்களின் பொலீஸிடமோ அதிரடிப்படையிடமோ இருப்பதாக சாதாரண மக்கள் — வீரப்பனின் தந்திரங்களை நன்கறிந்த எல்லைக்கிராம வாசிகள் — நம்பவில்லை.

அண்மையில் பிரிட்டிஷ் மகாராணி தமிழகத்துக்கு விஜயம் செய்தது தெரிந்ததே. அச்சமயம் சென்னையில் வெளியாகும் பிரபல நாளேடு ஒன்று அதன் முன்பக்கத்தில் ''ஜோக்'' ஒன்றை கேலிச் சித்திரத்துடன் வெளியிட்டிருந்தது.

எலிஸபெத் மகாராணியை வீரப்பன் கடத்திச் செல்வதாகப் பொலீஸ்காரர் ஒருவர் கனவு காண்பதாக அந்த ''ஜோக்'' அமைந்திருந்தது. ★

# பாம்புப்...

(X ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாம்புப் பூதம் அதைக் கேட்கவில்லை.

''இது நியாயந்தானா? என்று யாரிடமாவது கேட்பதுதான் சரி.''

''யாரிடம் கேட்பது?''

''அதோ. அந்த மரத்திடம் கேட்கலாம்.''

சுற்றுப் புறத்தில் அந்த மரத்தைத்தவிர வேறு எதுவுமே இல்லை. அவர்கள் இருவரும் மரத்திடம் சென்று, தங்கள் வழக்கைக் கூறினார்கள்.

மரம் யோசித்துவிட்டுத், தீர்ப்புச் சொல்லிற்று. ''நீ தான் பாம்புக்கு உயிர் கொடுத்தாய், எனவே, நீ தான் அதற்கு உணவும் கொடுக்க வேண்டும். உன்னைப் பாம்பு சாப்பிடுவது சரியானதே'' என்றது மரம்.

தர்சுனுக்கு ஏமாற்றமாகி விட்டது. அவன் விம்மி விம்மி அழ ஆரம்பித்தான்.

''மரம் அறிவில்லாதது. வேறு யாரிடமாவது போய் நாம் நீதி கேட்கலாம்.''

மீண்டும் தர்சுன் அழத் தொடங்கினான்.

தர்சுனைக் காணாத தர்பான் தாத்தா, அவனைத் தேடி அலைந்து கடைசியாக அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

அவரைக் கண்ட தர்சுன், மேலும் அழுதான். பாம்பு தன்னைப் பிடித்து வைத்திருப்பதைப் பற்றிக் கூறினான்.

தாத்தா ஏளனமாகச் சிரித்தார்.

''இந்தப்பாம்பு, ஒரு புழுவாக இருந்ததை நான் கொஞ்சமும் நம்பமாட்டேன்'' என்றார்.

பாம்பு எவ்வளவோ சொல்லிற்று. தர்சுனும் சொன்னான்.

தாத்தா நம்ப மறுத்தார்.

''அப்படியானால், நான் இப்போது அந்தப் புழுவைப்போல மாறி விடுகிறேன்'' என்றது பாம்பு.

''சரி அப்படியே செய் பார்ப்போம்'' என்றார் தாத்தா. கண்களில் கேலி மின்னிற்று.

பாம்பு கணப்பொழுதில், சின்னஞ் சிறு புழுவாய் மாறிற்று.

தாத்தா மறுகணமே அந்தப் புழுவை, தனது கைத்தடியால் நசித்துக் கொன்றார்.

அதன் பிறகு தர்சுன், தாத்தாவின் புத்திமதிகளைக் கொஞ்சமும் தட்டாமல் நடந்து வந்தான். ★

சே. யோகநாதன்

# உயிரினங்களை விண்ணில்...

(IV ஆம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற நச்சு வாயுக்களைக் கொண்டுள்ளவை என்பது உண்மை. இருப்பினும் இவ்வாயுக்களின் அளவு மிக குறைவானது. அத்துடன் அவை புவி மண்டலத்துள் வரும் வாய்ப்பும் மிகவும் அரிது. அதே போல் வால் வெள்ளிகள் புவியுடன் மோதித் தீங்கு விளைவிக்கும் வாய்ப்பும் மிக அரிது. ஏனெனில் வால் வெள்ளிகளின் கரு புவிமண்டலத்துள் புகும் பொழுது இலகுவில் உடையக்கூடியது.

பல்வேறு காரணங்களுக்காக வால் வெள்ளி பற்றிய ஆய்வு முக்கியம் வாய்ந்ததென்று வானியலாளர் கருதுகின்றனர். வால் வெள்ளிகள் பல பெளதிக இரசாயன முறைகளை உள்ளடக்கியவை அவை சூரிய காற்றை ஆய்வதற்கு ஒரு முக்கிய கருவியாக விளங்குகின்றன.

உண்மையில் வால் வெள்ளிகளின் பிளாஸ்மா வாலின் இயல்புகளை ஆய்ந்ததன் மூலமே பியர்மான் (Biermann) என்னும் விஞ்ஞானி 1957 ஆம் ஆண்டு முதன் முதலாக சூரியனிலிருந்து அயனாக்கப்பட்ட துணிக்கைகள் மிகுந்த வேகத்துடன் தொடர்ச்சியாக வெளியேற்றப்படுகின்றன என எதிர்வு கூறினார். இவையே 'சூரிய காற்று' எனப் பின்பு அழைக்கப்பட்டன. மேலும் வால்வெள்ளிகள் சூரியத் தொகுதியின் ஆரம்ப பதார்த்தங்களின் — எச்சங்களாகக் கணிக்கப்படுகின்றன. அதனால் சூரிய தொகுதியின் ஆரம்ப காலத்தில் அதன் இயல்பு பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு அவை பற்றிய ஆய்வு பெரிதும் உதவும் எனக் கருதப்படுகின்றது.

சமீப காலத்தில் வால்வெள்ளிகள் பற்றிய ஆய்வு வேறொரு காரணத்திற்காகவும் கவனத்தை ஈர்ந்துள்ளது. ஹொயில் (Hoyle) எனும் ஆங்கில விஞ்ஞானியும் அவரின் சகாவான விக்கிரமசிங்க (Wikramasinghe) என்ற இலங்கை விஞ்ஞானியும் உயிரினங்கள் புவியில் தோன்றவில்லை, அவை விண்வெளியிலிருந்தே புவிக்குக் கொண்டு வரப்பட்டன என்ற கருத்தை முன்வைத்துள்ளார். விண் வெளியில் [illegible] இருக்கின்றன. ஹொயிலின் கருத்தின்படி இந்த மூலக் கூறுகளே உயிரினத்தை உருவாக்குகின்றன. வால் வெள்ளிகளே உயிர்காவும் மூலக் கூறுகளைச் சூரியத் தொகுதிக்குள் கொண்டு செல்லக்கூடிய சிறந்த வாகனங்கள் ஆகும் அத்துடன் வால் வெள்ளிகள் புவிமண்டலத்தின் மேற்பகுதிக்குள் பக்றீரியக்களைக் கொண்டு வரக் கூடும் என்றும் இவற்றில் சில மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியவையாய் இருக்கக் கூடும் என்றும் இவ்விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

இக் கருத்துக்களை எல்லா விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொள்ளா விட்டாலும் இவை தற்பொழுது பலரது கவனத்தையும் ஈர்ந்துள்ளன அண்மையில் உயிரினம் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்று கருதப்பட்ட செவ்வாய்க் கோளில் பக்றீரியா ஒன்றின் சுவடு கண்டுபிடிக்கப்பட்டமை ஹொயில் — விக்கிரமசிங்கவின் கருத்துக்கள் பற்றி விஞ்ஞானிகள் மத்தியில் பெரும் ஆர்வத்தை உண்டுபண்ணியுள்ளது.

எது எப்படியாயினும் வால் வெள்ளிகள் கவர்ச்சியானவை என்பதும் விஞ்ஞான ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதும் உண்மை.

நன்றி: விஞ்ஞானமுரசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடின்பரோ நகரில் நடந்து முடிந்த பொதுநலவாய நாடுகளின் மாநாடு

## வர்த்தகம்; முதலீட்டை ஊக்குவிக்க அதிக கவனம் செலுத்தப்பட்டது

ஸ்கொட்லாந்தின் தலைநகர் எடின்பரோவில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான பொதுநலவாய நாடுகளின் நான்கு நாள் உச்சி மாநாடு முடிவடைந்துள்ளது.

தனக்கென ஓர் நாடாளுமன்றத்தை அமைப்பதற்கு ஆதரவாக வாக்களித்தது மூலம் ஏற்கனவே சர்வதேச கவனத்தை சார்ந்த நாடு ஸ்கொட்லாந்து.

தற்போது நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் உச்சிமாநாடு மூலம் இந்த நாட்டின் மீது மீண்டும் சர்வதேச கவனம் திரும்பி உள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற மாநாடுகளைப் போன்று அல்லாது விரைவில் வரப்போகும் புதிய நூற்றாண்டுக்கு பொதுநலவாய நாடுகளைத் தயார் செய்யும் விதத்திலும்—

பொதுநலவாயத்துக்கு புது மெருகூட்டும் விதத்திலும்—எடின்பரோ மாநாட்டில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

தற்போதைய உலக நிலவரத்துக்கு ஏற்ப பொதுநலவாயத்தை உயிர்த்துடிப்புள்ள ஓர் அமைப்பாக மாற்றுவது மூலம் உறுப்பு நாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் நம்புகிறார்.

பொதுநலவாயத்தின் முக்கியத்துவத்தை இதன் மூலம் அதிகரிக்க முடியும் என்று அவர் கருதுகிறார்.

### ஹராரே பிரகடனம்

1991 இல் சிம்பாப்வேயின் தலைநகர் ஹராரேயில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் CMAG என அழைக்கப்படும் ''பொதுநலவாய அமைச்சர் கட்ட நடவடிக்கைக் குழு'' ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

உறுப்பு நாடுகளில் இடம் பெற்று வரும் மனித உரிமைகள் மீறல், ஜனநாயக விரோத நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கண்காணிப்பதும் அத்தகைய நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுமே இந்த குழு அமைக்கப்பட்டதன் பிரதான நோக்கம்.

இந்தக்குழு வெளியிட்ட அறிக்கை ஒன்றின் பிரகாரமே 1995 இல் நியூசிலாந்தில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் நைஜீரியா மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு நைஜீரியா பொதுநலவாய அங்கத்துவ பதவியில் இருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்டது.


நைஜீரியாவில் மனித உரிமைகளுக்காக பாடுபட்ட எழுத்தாளர் கென் சாறோ லீவா உட்பட 9 மனித உரிமை பாதுகாப்பு இயக்கத்தினருக்கு நைஜீரியாவின் ராணுவ ஆட்சியாளர்கள் மரணதண்டனை விதித்ததே நைஜீரியா பொதுநலவாய அமைப்பில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்படக் காரணம் ஆகும்.

எடின்பரோவில் நடைபெற்று முடிவடைந்த உச்சி மாநாட்டில் நைஜீரியா மீண்டும் பொதுநலவாய அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று ஆபிரிக்க நாடுகள் வற்புறுத்தின.

எனினும் நைஜீரியாவை தொடர்ந்து இடைநிறுத்தி வைப்பது என்றும் —

நைஜீரியாவின் ராணுவ ஆட்சியாளர் சனி அபாச்சா நைஜீரியாவில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கான சமிக்ஞைகளை வெளிக்காட்டுமிடத்து நைஜீரியாவை மீண்டும் பொதுநலவாய அமைப்பில் சேர்த்துக் கொள்வது குறித்து ஆலோசிப்பது என்றும் — முடிவு செய்யப்பட்டுள்ளது.

நைஜீரியாவுக்கு எதிராக பொருளாதாரத்தடை உட்பட கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பிரிட்டன் விரும்புகிறது.



குஜ்ரால்

எனினும் ஏனைய பொதுநலவாய உறுப்பு நாடுகள் இதற்கு பெரிதாக ஆதரவு தெரிவிக்கவில்லை.

### 20 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் பிரிட்டனில்

பிரிட்டிஷ் மண்ணில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1977 ஆம் ஆண்டுதான் கடைசியாக பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு நடைபெற்றது.

தொழிற் கட்சியின் ஆட்சியின் கீழ் தற்போது நடைபெற்ற மாநாட்டில் இம்முறை வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியவற்றுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

பொதுநலவாய அமைப்பில் தற்பொழுது 54 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. 36 நாடுகளுடன் பொதுநலவாய அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளே, பொதுநலவாய அமைப்பில் இணைந்துள்ளன.

உலக உலா

என்.பி.சீலன்

சிறிய, பெரிய நாடுகள், பல இன மக்களைக் கொண்டது பொதுநலவாயக் குடும்பம். 160 கோடி மக்களை அதாவது உலகசனத்தொகையில் நாலில் ஒரு பங்கினரை பொது நலவாய அமைப்பு பிரதிநிதித்துவம் வகிக்கிறது.

### வளர்ந்துவரும் அமைப்பு

இந்த அமைப்பில்இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடித்ததுக்காக தென் ஆபிரிக்கா முன்னர் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டது.

தற்பொழுது [illegible] மண்டேலா தலைமையில் கறுப்பு இனமக்களின் ஆட்சி ஏற்படுத்தப்பட்ட பின்னர் தென் ஆபிரிக்கா மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. புதிதாகச் சேர்வதற்கு கமெரூன், மொஸாம்பிக் ஆகிய நாடுகளும் விண்ணப்பித்துள்ளன.

மற்றும் றுவாண்டா, யேமன் ஆகிய நாடுகளும் இந்த அமைப்பில் சேருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள போதிலும் பொது நலவாய அமைப்பில் அங்கத்துவம் பெறுவதற்கான அடிப்படை தகைமை எதையும் அவை கொண்டிராததால் அவற்றின் விருப்பம் ஏற்றுக் கொள்ளப் படவில்லை.

### வறிய நாடுகளுக்கு உதவி

பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் வறிய நாடுகள் பல உதவிகளைப் பெறுவதால் புதிதாக உறுப்புரிமை பெறுவதில் பல நாடுகள் ஆர்வம் காட்டிவருகின்றன.

C. D. C. எனப்படும் பொதுநலவாய அபிவிருத்தி கூட்டுத்தாபனம் ஏற்கனவே தென் இந்தியாவில் கம்பியூட்டர் துறைஅபிவிருத்திக்கும்உகண்டாவில் தேயிலை உற்பத்தித் துறைக்கும் 250 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கி உள்ளது.

### லிபிய விவகாரம்

இம் முறை லிபிய விவகாரமும் பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் பிரதமர் ரொனி பிளயருக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது.

'பான் அம்' ஜெட் விமானத்தை குண்டு வைத்துத் தகர்த்தனர் என நம்பப்படும் இரு லிபியப் பிரஜைகள் தற்பொழுது லிபியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா உட்பட பொதுநலவாய அமைப்பின் தலைவர்கள் பலரும் வற்புறுத்தினர்.

எனினும் சர்வதேச விசாரணையை பிரதமர் ரொனி பிளயர் ஏற்க மறுத்து விட்டார்.

இரு லிபியர்களும் பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டு பிரிட்டனில் விசாரிக்கப்பட வேண்டும் என்பதே ரொனி பிளயரின் நிலைப்பாடு.

'பான் அம்' ஜெட் விமானம் ஸ்கொட்லாந்தின் லொக்கரிபீ நகருக்கு மேலாக சென்று கொண்டிருந்த சமயம் வெடித்துச் சிதறியது.

அச் சம்பவத்தில் அந்த விமானத்தில் இருந்த 270 பயணிகளும் கொல்லப்பட்டனர்.

அந்த விமானத்தில் குண்டு வைத்ததுக்கு இரு லிபியப் பிரஜைகளே காரணம் என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த இரு லிபியர்களையும் விசாரணைக்காக லிபியா விடுவிக்காததை அடுத்து லிபியா மீது 1990 ஆம் ஆண்டு ஐ. நா. பொருளாதாரத் தடையை விதித்தது. அதே சமயம் இந்த இரு லிபியர்களும் லிபிய அரசின் ஏஜெண்டுகள் என்று கூறி



ரொனி பிளயர்

அமெரிக்கா லிபியாவை பயங்கரவாத நாடுகளின் பட்டியலிலும் சேர்த்தது.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா கடந்த வாரம் அமெரிக்காவின் கோரிக்கையையும் அசட்டை செய்துவிட்டு லிபியாவுக்கு விஜயம்செய்தார் ஐ நா.தடையினால் தனிமைப்படுத்தப்பட்ட லிபியாவுக்கு நெல்சன் மண்டேலாவின் விஜயம் ஒரு திருப்பம் என்றே அவதானிகள் கருதுகின்றனர்,

பொதுநலவாய அமைப்பின் தலைவியாக இருப்பவர் எலிஸபெத் மகாராணியார்.

அவரே எடின்பரோ மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

பலஇன நாடுகள் பிரதிநிதித்துவம் வகிக்கும் இந்த அமைப்பின் பங்களிப்பு எதிர் காலத்தில் மேலும் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது.

எடின்பரோ மாநாட்டை உலக நாடுகளின் தலைவர்கள் தமக்கிடையிலான பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்கும் பயன்படுத்தினர்.

முக்கியமாக இந்தியப் பிரதமர் இந்தர்குமார் குஜ்ராலும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் சந்தித்தனர். எனினும் தமக்கிடையிலான பிரச்சினைகளை அவர்களால் பேசித் தீர்க்க முடியவில்லை.


இந்திய — பாக் வெளியுறவுச் செயலர்களுக்கிடையிலான 4 ஆம் கட்டப் பேச்சுக்கு திகதி நிர்ணயிப்பதில் இன்னும் இணக்கம் காணப்படவில்லை.

பொதுநலவாய அமைப்புக்கள் மாநாடு உறுப்பு நாடுகளுக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பெரிய அளவில் பங்களிப்பு எதனையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

இவற்றுள் காஷ்மீர் பிரச்சினையும் ஒன்றாகும்.

இந்த விடயங்களையும்உள்ளடக்கியதாக பொது நலவாயம் விரிவாக்கப்படும் போதே அதன் பயனை முழுமையாகப் பெற முடியும். ★

## பெரு நாட்டு அதிபரின் செல்வாக்கு சரிகிறதா?



லீமாவில் ஜப்பானியத் தூதரக முற்றுகையை முறியடித்து ''துபக் அமாரு'' மாக்ஸிச கெரில்லாக்களை கூண்டோடு ஒழித்ததைத் தொடர்ந்து கிடுகென உயர்ந்த பெரு நாட்டு அதிபரின் செல்வாக்கு அடுத்த ஒரு சில மாதகாலத்துக்குள் சரியத் தொடங்கி விட்டது.

72 பணயக் கைதிகளை உயிருடன் மீட்ட கதாநாயகன் அதிபர் அல்பெட்டோ பிஜிமோறிக்கு அவர் நினைத்துப் பாராத இடத்தில் இருந்து அச்சுறுத்தல் கிளம்பியுள்ளது.

ஜப்பானிய சார்புப் போக்குடையவரான அவரது பிறப்பிடம் பெரு அல்ல; ஜப்பானே என்ற அதிர்ச்சித் தகவலை சஞ்சிகை ஒன்று அண்மையில் வெளியிட்டதைத் தொடர்ந்து அவரது அதிபர் பதவி ஆட்டம் கண்டுவிடுமோ என்ற ஐயம் எழுந்தது.

இந்த சர்ச்சை குறித்துப் பூரண விசாரணை நடத்தப்பட்டு — அது நிரூபிக்கப்பட்டால் அவர் அதிபர் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று எதிர்கட்சியினர் குரல் எழுப்பியுள்ளனர்.

அதிபர் பிஜிமோறியின். குடும்பத்தினர் ஜப்பானுடன் பூர்வீகத் தொடர்புகளைக் கொண்டுள்ளனர். மேலே உள்ள படத்தில் அதிபர் பிஜிமோறி சிறுபையனாக காணப்படுகிறார் (வட்டத்துக்குள்) அவரது குடும்பப் படத்தில் ஜப்பானிய சாயல் தென்படுகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org